Australia: $2.50 Canada: $ 2.00 Europe € 1.20 India: Rs.15.00 Norway: Kr.15.00 Sri Lanka: Rs.50.00 Switzerland: Fr.2.50 United Kingdom: £1.00

வவுனியா ஐடிபி முகாம்



பார்த்து, சந்தித்து

பகவான் சிங்



பசில் ராஜபக்ஷ

JULY 2009

NAZHIKAI London

# நாழிகை

International Tamil Newsmagazine



## வே. பிரபாகரன்

## தமிழர் வரலாற்றில் ஒருவர்


Introducing
Lemon Puff
Made using milk powder imported from New Zealand
Niru BRAND ®
Lemon Puff
WITH
REAL LEMON
CREAM
சுவைத்துப் பாருங்கள் உண்மையான
லெமன்கிறீம் சுவையை.
Produced in our ISO 22000/HACCP certified factory


நம்ப முடியாத விலையில்
முதல்தர வைர ஆபரணங்கள்
ஸ்ரீ ஐஸ்வர்யா சேலைகளின்
ஹன்சிகா தெரிவுகள்!
பட்டுச் சேலைகள்
Exclusive Embroidery சேலைகள்
முதலாம் ஆண்டு நிறைவு மலிவு விற்பனை
பட்டுச் சேலை,
வைர ஆபரண சீட்டுக்கள்
மாதம் £30 செலுத்தி
6 மாதங்களில்
£200 பெறுமதியான
பட்டுச் சேலை
மாதம் £100 செலுத்தி 18 மாதங்களில்
£2000 பெறுமதியான வைர ஆபரணம்
WHITE FIRE
63 Victoria Road
Ruislip
Middx. HA4 9BH
Tel: 01895 636462
Fax: 01895 634422
Mobile: 07780 975142

ஐரோப்பிய, மத்திய கிழக்கு நாடுகளில்
24 மணிநேரமும் ஒளிரும் தமிழ் தொலைக்காட்சி

DEEPAM

10
ஆவது
ஆண்டில்

உலகத் தமிழருக்கு ஒரு தொலைக்காட்சி

சந்தா விசேட சலுகைகளுக்கு தொடர்புகொள்ளுங்கள்

DEEPAM TV
EAST WEST BROADCAST LTD
UNIT 1, EBURY BUSINESS CENTRE
161-163 STAINES ROAD, HOUNSLOW, MIDDLESEX, TW3 3JB, UK

Tel: + 44 (0)208 814 6565, Fax: + 44 (0)208 814 1144
Email: info@deepamtv.tv Web: www.deepamtv.tv




10 | அட்டை செய்தி
தமிழர் வரலாற்றில் ஒருவர்

15 நினைவுகளில்...

16 | இலங்கை
'கடவுள்தான் காப்பாற்றவேண்டும்'

30 | இந்தியா
ராஜீவ் காந்திக்குப் பின்னர் உறுதியான ஓர் அரசு



வவுனியாவில் ஐ. நா. செயலாளர் நாயகம் பான் கி-மூன்



9 | பிரிட்டன்
300 ஆண்டுகளில் ஒரு நிகழ்வு

24 | நேரில் பார்த்து
வவுனியா 'ஐடிபி' முகாம்

28 | நேரில் பார்த்து
அம்பேபுஸ புனர்வாழ்வு முகாம்


20 | சந்திப்பு
பசில் ராஜபக்ஷ

34 | உலக விவகாரம் -
பாகிஸ்தான்
பிரச்னைகளை சுவாசிக்கும் ஒரு நாடு

38 | உலக விவகாரம் -
நேபாளம்
தொடரும் நெருக்கடிகள்

40 | சிறுகதை
கொடுத்ததெல்லாம் கொடுத்தான்

44 | சினிமா



**Nazhikai** International Tamil Newsmagazine ISSN 1357-6933 Vol: IV, No: 5 & 6
**Editor:** S Mahalingasivam **Published by:** Pannews 123 Twyford Road Harrow Middx. HA2 0SJ UK
**Tel: 00 44 208 422 5699 Fax: 00 44 208 426 4105 Email: pannews@hotmail.co.uk**
**Editorial:** editor@nazhikai.com / letters@nazhikai.com
**Anual Subscription** (12 issues): **UK** £20.00 **Europe** £25.00 **India & Sri Lanka** £10.00 **All Other Countries** £30.00
**Payable to Pannews IBAN: GB70 LOYD 3096 6602 2983 78**

# கேட்பதும் பார்ப்பதும்

இலங்கையில் வாழும் இருமொழிபேசும் இனங்களிடையே பிரிட்டிஷ் ஆட்சியிருந்து இலங்கை விடுதலைபெற ஆரம்பித்த காலம் தொடக்கமே, சமத்துவ உரிமைகள் தொடர்பில் சச்சரவுகள் எழுந்தன. சுதந்திரத்துக்குப் பின்னர், பெரும்பான்மை இனமாக ஆட்சி அதிகாரத்திலமர்ந்த சிங்கள இனம், சிறுபான்மை தமிழினம்மீது திட்டமிட்டே மேலும்மேலும் அதன் உரிமைகளை மறுக்கும் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது என்பதை தமிழினம் பகிரங்கமாகவே கூறிவந்தது.

சிங்கள பெரும்பான்மை இனத்திலும் இடதுசாரிகளாக விருந்தவர்கள் தமிழினம்மீதான பாரபட்சத்தை எதிர்த்தாலும், காலப்போக்கில் அவர்களில் பெரும்பாலோர் பெரும்பான்மை கட்சிகளோடு இணைந்து செயல்பட தொடங்கினார்கள். தேசிய கட்சிகளாக, பெரும்பான்மை இனம் இந் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது, தமிழினத்தில் அரசியல் கட்சிகள் இனரீதியான கட்சிகளாயின.

ஆக, அரசாங்கங்களின் நடவடிக்கைகளை எதிர்த்து, தமது உரிமைகளுக்காக தமிழ்க் கட்சிகள் போராடின. இந்த போராட்டம் சாத்வீக போராட்டமாக இருந்தது. இலங்கையின் அரசியலும் இந்த இனப்பிரச்னையையே ஆதாரமாகக் கொண்டு தொடர்ந்தது.

தமிழர்கள், சிங்கள மக்களின் இரு பிரதான கட்சித் தலைவர்களுடனும் பிரச்னைகளுக்கு ஓரளவு சுமுகமான தீர்வுகளைக்காண இரண்டு ஒப்பந்தங்களைச் செய்தனர். அவை இரண்டுமே பயனற்றுப்போயின. இருவருக்கிடையேயான ஒப்பந்தத்தை, மற்றையவர் அறியாமலேயே ஒருவர் கிழித்தெறிந்ததாக, ஒப்பந்தத்தைச் செய்த தமிழர் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறினார்.

சுதந்திரத்துக்குப் பின்னர் சுமார் இரண்டு தசாப்தங்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுக்க சாத்வீக முறையில் முயன்று, அது பயனளிக்காத நிலையில் 1976ஆம் ஆண்டு அவர்கள் ஒரு தனிநாடு தீர்மானத்துக்கு தள்ளப்பட்டார்கள். இந்த காலப்போக்கு, தமிழினத்தில் மிதவாத தலைமையை விஞ்சி, தீவிரவாதம் ஆதிக்கம்கொள்ள வழிவகுத்தது. (தமிழ்) இனம் சார்ந்து கட்சிகள் அமைந்தநிலை, (ஈழ)பிரதேசம் சார்ந்தவையாக மாறத் தொடங்கியது.

மக்களுக்கு மாற்று வழி இருக்கவில்லை.

இந்த தீவிரவாத போக்கு சுமார் மூன்று தசாப்தங்களை எய்திய நிலைதான் இன்றைய இலங்கையின் நிலை. விடுதலைப் புலிகளை ஒழித்துவிட்ட இலங்கை அரசாங்கம், அந்த வெற்றியைக் கொண்டாடுகிறது. இந்த வரலாற்றுப் பின்னணியில் இதன் அர்த்தம் என்ன?

'தமிழர்கள் தமது உரிமைகளை வெல்ல முடியாது' என்பதா? அல்லது, 'தமிழர்களுக்கு சம உரிமை; நாட்டில் இனி பிரச்னை இல்லை' என்பதா?

ஜனாதிபதியின் பேச்சு, இரண்டாவது வகையாக காதுகளில் கேட்கிறது. ஆனால், கண்களில் தெரிவது, முதலாவதைப்போலவே இருக்கிறது.

சுமார் மூன்று லட்சம் தமிழர்கள்; ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், நோயாளிகள் இரண்டு மாதங்களாக, உற்ற உறவுகூட எங்கே; என்ன நடந்தது என்பதைத் தெரியாத மனோ வேதனையில், திறந்தவெளிச் சிறைகளிலேயே அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு நாடு, அரசாங்கம், அதன் பிரஜைகள் என்பதில் இது எப்படி அமைகிறது?

குற்றவாளி தண்டனையில் தப்பித்துக்கொண்டாலும், நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்பதுதானே சட்ட நீதி; மனு நீதி.


விடுதலைப் புலிகளின் தோற்றத்துக்கு காரணமானவர்கள், அவர்களை உருவாக்கியவர்கள் யார்?

விரும்பினார்களோ விரும்பவில்லையோ தமிழ் மக்கள் அவர்களை ஆதரிக்கவேண்டியவர்கள். அவர்கள் ஓர் ஆதிக்கத்தை நிலைநாட்டியபின்னர் இலங்கையில் ஆட்சிக்குவந்த அனைத்து அரசாங்கங்களும் அவர்களோடு பேச்சுக்களை நடாத்தியிருக்கின்றன; ஒப்பந்தங்கள் செய்துகொண்டிருக்கின்றன. ஜனாதிபதி ராஜபக்ஷவும் இதில் விலக்கானவர் அல்லர். உண்மையிலேயே அவர் பதவிக்குவரக் காரணமாக இருந்தவர்கள் விடுதலைப் புலிகள் என்பது அரசியல் யதார்த்தம்.

ஆக, இலங்கை தவிர, சர்வதேச நாடுகள், சர்வதேச அமைப்புகளும் அவர்களை அங்கீகரித்ததுடன் அவர்களுடன் பேச்சுக்களையும் தொடர்புகளையும் பேணிவந்திருக்கின்றன. கடைசிநேரம் வரையில்கூட, ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு, பேச்சுவார்த்தை மேசைக்கு செல்ல விடுதலைப் புலிகளுக்கு இந்தியா உள்பட பல நாடுகள் வற்புறுத்தின.

இப்போது, இலங்கை அரசாங்கம் புலிகளை ஒழித்துவிட்டபின்னர், அவர்களுடன் தொடர்புள்ளவர்கள் என்று மேற்கொள்ள முயலும் - மேற்கொள்ளும் நடவடிக்கைகள், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது என்பது ஒருபுறமிருக்க, இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு அரசியல் ரீதியான ஒரு தீர்வு விரைவாக காணப்படாவிடின், கொண்டாடப்படும் வெற்றி, அந்த நாட்டின் வரலாற்றில் அடுத்த ஒரு தோல்விக்கு கட்டியமாகவே அமையும். இதையே வரலாறு உணர்த்துகிறது. ■

# உலகம்



அமெரிக்கா

## ஓர் உலக உன்னதம்

உலக அபூர்வங்களில் ஒன்றான புகழுடன் திகழ்ந்த மைக்கல் ஜக்ஸன் அவருடைய 50ஆவது வயதில் காலமானபோது, 'அவருடைய இசை காலமெல்லாமே வாழும்' என்று பொப் இசை பாடகி மடோனா கூறினார்.

ஜூலை 25ஆம் தேதி, லொஸ் ஏஞ்சல்ஸில் அவரது இல்லத்தில் மூர்ச்சையிழந்த மைக்கல் ஜக்ஸன், வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட ஒரு சில மணித்தியாலங்களில் அறிவு திரும்பாமலேயே மரணமானார்.

குழந்தைப் பராயத்தில் அவரது மூத்த சகோதரர்கள் நால்வருடன் இணைந்து 'ஜக்ஸன் 5' என்ற குடும்ப இசைக்குழுவில் பாட ஆரம்பித்தவர், உலகின் மிகப்பெரும் கீர்த்தியைப் பெற்ற பாடகராக, மூன்று தசாப்தங்களுக்குமேல் உயர்ந்தோங்கினார்.

தன்னுடைய 11ஆவது வயதில் முதலாவது இசைத்தட்டை வெளியிட்டபோது, 1982இல் அவரது இசைத்தட்டு 65 மில்லியன் பிரதிகள் விற்பனையாகி, இன்றுவரை கின்னஸ் பதிவில் சாதனையாக நிலைக்கிறது.

ஜூலை 13 முதல், தொடர்ச்சியான பல நிகழ்ச்சிகளை மைக்கல் ஜக்ஸன் இங்கிலாந்தில் நிகழ்த்தவிருந்தார்.

நீண்டகாலமாகவே வலி நிவாரணத்துக்காக மருந்துகளை உட்கொள்ளும் பழக்கமுடையவரான இவரின் மரணத்துக்கு அதுவே காரணமாக இருக்கலாமா என்றும் சந்தேகிக்கப்படுகிறது. பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அதன் முழு முடிவுகளும் வெளியாக ஒன்றரை மாதங்கள் ஆகலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

700 மில்லியன் அமெரிக்க டொலர்களை மைக்கல் ஜக்ஸன் சம்பாதித்தார் என்று மதிப்பிடப்படுகையில், அண்மைக்காலமாக பணக் கஷ்டத்தில் அவர் மிகவும் மனச் சுமையுற்றிருந்ததாகவும் கூறப்படுகிறது.

இரண்டு தடவைகள் விவாகரத்துச் செய்துகொண்ட அவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள்.

உலகளாவிய ரீதியில் மக்கள் அநுதாபத்தை ஈர்த்த மரணங்களில் இதுவும் ஒன்றாகிறது.

ஈரான்

## தேர்தல் கலவரம்

ஈரானில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலையடுத்து தொடர்ந்துகொண்டிருக்கும் கலவரங்களில் 17 பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.

ஜுன் 12ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில், ஈரானிய அதிபர் மஹ்மூட் அஹ்மடினிஜாட் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாக தேர்தல் முடிவுகளில் தெரிவிக்கப்பட்டபோது, அதனை ஆட்சேபித்து பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பித்தன.

தேர்தலில் குழறுபடிகள் நடந்திருப்பதாகவும் அதனால் முடிவுகளைச் செல்லுபடியற்றதாக ஆக்கவேண்டும் என்றும், தேர்தலில் எதிர்த்துப் போட்டியிட்ட ஹுசைன் முசாவி, இந்த ஆர்ப்பாட்டங்களுக்குத் தலைமைதாங்கி வற்புறுத்துகிறார்.

ஈரானிய உயர் தலைவர் அயத்தொலா கொமெய்னி அதிபர் அஹ்மடினியாடுக்கு ஆதரவாக இருக்கும்போது, அமெரிக்க அதிபர் ஒபாமா ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவாக குரல்கொடுத்திருக்கிறார்.


இங்கிலாந்து

## ஆர்ப்பாட்டம் நிறுத்தப்பட்டது

இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்ட மனித அவலத்தைக் கண்டித்து பிரிட்டிஷ் பாராளுமன்ற சதுக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம் 73 தினங்களின் பின்னர் நிறுத்தப்பட்டது.

உண்ணாவிரதமும், வீதிமுற்றுகையுமாக பல்லாயிரக்கணக்கானோர் இதில் கலந்துகொண்டு தமது ஆதங்கத்தையும் வற்புறுத்தலையும் வெளிப்படுத்தினர்.

அவ்வப்போது சிலசில சம்பவங்கள் நிகழ்ந்திருந்தாலும், பொலிசார் தீவிர நடவடிக்கை எதிலும் ஈடுபடாது, 24 மணி நேரமும் தொடர்ந்து கண்காணித்துவந்தனர். இந்த பொலிஸ் நடவடிக்கைகான செலவினம் 10 மில்லியன் ஸ்ரேர்ளிங் பவுண்களை விஞ்சியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.



# தேசாபிமானமும் காசாபிமானமும்

**கைவசம் இருந்த இலங்கைப் பிரச்னை போய்விட்டது. வீர உரைக்கு தமிழக அரசியல்வாதிகள் இனி என்னசெய்வார்கள்...**

தமிழக அரசியல்வாதிகள் இனிமேல் என்ன செய்யப் போகிறார்களோ? கவலையாகவே இருக்கிறது. வீர உரை வழங்க அவர்களிடம் பிரச்னை கைவசம் இல்லை. ஒப்பாரிவைக்க இருந்த ஒரே பிரச்னை, இலங்கைப் பிரச்னை, அது இப்போது தீர்ந்துவிட்டது. இன்னும் இரண்டு வருடங்களுக்குப்பிறகு தமிழக சட்டசபைக்கு தேர்தல் நடக்கும் போது ஏதாவது புதிய பிரச்னைகளைத் தேடியாகவேண்டும். அதுவரை அவர்கள் என்னதான் செய்வார்களோ தெரியவில்லை.

அண்மையில், இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. தமிழகத் தேர்தல் களத்தைப் பொறுத்தவரை, அணு ஆயுத ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டமை இங்கு தேர்தல் பிரச்னையாகவில்லை. நகரங்களின் போக்குவரத்து நெரிசலும் இவர்களைப் பாதிக்கவில்லை. ஒருவரை விஞ்சி மற்றவர் ஈழம்பற்றி வீராவேசமாகப் பேசினார்கள். உஹூம், பேசினார்கள் என்பது தவறு. "வேற்படைத் தலைவரே, நாற்படையாளரே, கேட்பீர் ஒருசொல், கிளர்போர்க் கோலம்'' என்று எழுச்சி உரை ஆற்றினார்கள்.

அதாவது, ஈழத்தை அடைந்துவிட்டால் இந்தியா சுவர்க்க பூமியாகிவிடும் என்பதுபோல் பேசினார்கள். இலங்கைத் தமிழர்களைக் காப்பதில்தான் நாட்டின் பொருளாதாரமும் மாநிலத்தின் ஜீவாதாரமும் இருப்பதுபோல் பசப்பினார்கள்.

இலங்கைப் பிரச்னையை மற்ற பிரச்னைகள்மீது போர்த்திவிட்டால்/ மக்கள் கவனம் போர்வைமீதுதானே இருக்குமென்று நினைத்தார்கள். ஆட்சியில் இருந்த எல்லாக் கட்சிகளும் ஊழலுக்கு அப்பாற்பட்டவையல்ல என்பதனாலும், ஆட்சிக்கு வராத கட்சிகளிலும் நம்பிக்கை ஏற்படவில்லை என்பதனாலும் அரசியல் கட்சிகளே தமக்குள் பேசிவைத்துக்கொண்டதுபோல், இலங்கைப் பிரச்னையை பெரிதுபடுத்தின. அதே அளவுக்கு அவர்கள் உள்நாட்டு பிரச்னைகள் பற்றிப் பேசவில்லை. ஒரு கட்டத்தில் விவரமறிந்த வாக்காளர்களே இந்தத் தேர்தல் இந்திய நாடாளுமன்றத்துக்கா, இலங்கை நாடாளுமன்றத்துக்கா; போட்டியிடுபவர்கள் இந்த மண்ணின் தலைவர்களா, ஈழ மண்ணின் தலைவர்களா என்பதில் குழம்பிப்போனார்கள். நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே. அத்வானியா, மஹிந்த ராஜபக்ஷவா என்ற சந்தேகம் வருமளவுக்கு ஒரு கனவு ஈழத்துக்குள் தமிழ்நாடு திணிக்கப்பட்டது.

அதுசரி, இவர்கள் இவ்வளவு பேசினார்களே; இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டும் என்று வாய்ப் பீரங்கிகளினால் வார்த்தைக் குண்டுகளை வெடித்தார்களே, போர் இப்போது முடிந்து போனது; இவர்கள் அதுபற்றி முணுமுணுக்கக்கூட இல்லையே. தம் நாடாளுமன்ற வெற்றியை அல்லவா பட்டாசு வெடித்துக் கொண்டாடிக்கொண்டிருந்தார்கள்?

ஆங்கில தொலைக்காட்சி அலைவரிசைகளில் சிங்களவர்கள் பிரபாகரன் இறப்பை பட்டாசு வெடித்துக் கொண்டாடினார்கள். தமிழ்த் தொலைக்காட்சி அலைவரிசைகள், எம்மவர்களில் முடிசூட்டிக்கொள்ளப்போகும் முழுக் கிழங்கள், அரைக் கிழங்கள், யுவ ராஜாக்கள், யுவ ராணிகள் ஆகியோர் பற்றி செய்தி வாசித்தன. அடிமைத் தொண்டர்கள் தம் சந்தோஷங்களைப் பட்டாசு வெடித்துக் கொண்டாடினார்கள். எங்கே போயிற்று இவர்களது ஈழ அபிமானம்? ஆங்கிலத் தொலைக்காட்சிகள் பிரபாகரனின் உடலை மாறி மாறி காண்பித்துக்கொண்டிருந்த நேரத்தில் 'அது பிரபாகரன்தானா, அவரது 'டூப்'பா; பிடித்துக் கொன்றார்களா,

**அடுத்த தேர்தலுக்கு உதவாத காரணங்களுக்கு கவலைப்படுவது மூடத்தனம்**

**அறிவார்ந்த விஷயங்களை ஒதுக்கிவிட்டு, உணர்ச்சியைத் தூண்டிவிடும் விஷயங்களையே தமிழக அரசியல்வாதிகள் கையிலெடுத்துக் கொள்கிறார்கள்**

கொன்று பிடித்தார்களா; எப்போது கொன்றார்கள், எப்படிக் கொன்றார்கள்' என்று கிடுக்கிக் கேள்விகளால் சிங்களத் தலைவர்களின் வாயைப் பிடுங்கிக்கொண்டிருந்த நேரத்தில், தமிழ் அலைவரிசைகளில் கறுப்பு வெள்ளைப்பட கதாநாயகிகளும், வண்ணப்பட நாயக நாயகிகளும் நகைச்சுவை என்ற பெயரில் கூத்தடித்துக் கொண்டிருந்தார்கள். இந்தத் தினங்களின் முக்கிய செய்திகளாக தலைவர்களின் பயணங்கள், புதிய மந்திரிகள் யார் என்ற யூகங்கள், லஞ்சம் வாங்கிய வங்கி அதிகாரிக்கு தண்டனை, ஊட்டியில் மலர்க் காட்சி, ஒகேனக்கல்லில் நீர் வீழ்ச்சியின் அழகு போன்றவையே வெளியாயின.

இலங்கைப் போரின் நிறைவு, பிரபாகரன் மரணம் பற்றி எந்தவிதமான விவாதமும் தொலைக்காட்சிகளில் வரவில்லை. சாரமற்ற செய்தி வரிகளே 'செத்தவன் கையில் வெத்தலை பாக்கு வைத்ததுபோல' ஓடின. காட்சிகள் வரவில்லை, கருத்துக்களும் வரவில்லை. ஏன்? தமிழகத் தலைவர்களின் இன அபிமானம் போலியானது. தமிழகத்தில் தேர்தல் முடிந்துவிட்டதே, இனி இலங்கையாவது, ஈழமாவது, பிரபாகரனாவது? அடுத்த தேர்தலுக்கு உதவாத காரணங்களுக்கு கவலைப்படுவது மூடத்தனம். தமிழர்கள், அதாவது தமிழகத் தலைவர்கள், மூடர்கள் அல்லர்.

இலங்கைப் பிரச்னைதான் என்று இல்லை; மும்பை நகரைத் தீவிரவாதிகள் தாக்கியபோதும் தமிழ் தொலைக்காட்சிகள் ஆங்கில தொலைக்காட்சிகள் அளவுக்கு தாக்குதலின் பரிமாணங்களை விவாதிக்கவில்லை. தேர்தல் காலத்தில் ஆங்கில அலைவரிசைகள் அளவுக்கு தமிழில் தேசிய அரசியல், பொருளாதார அம்சங்கள் விவாதிக்கப்படவில்லை. ரிவியில் பாட்டும் கூத்தும் பாட்டிலும்; வீட்டில் இலவச அரிசியும் சேலையும். இவை போதும் தமிழக வாக்காளர்களுக்கு என்று பெரும்பாலும் அரசியல் கட்சிகளால் நடத்தப்படும் தொலைக்காட்சி நிலையங்கள் நினைத்துவிட்டன. நிலைமை மாறி, வாக்காளர்களுக்கு அறிவும் சொரணையும் வந்துவிட்டால் அரசியல்வாதிகள்பாடு திண்டாட்டமாகிவிடும். அதனால்தான் அறிவார்ந்த விஷயங்களை ஒதுக்கிவிட்டு, உணர்ச்சியைத் தூண்டிவிடும் விஷயங்களையே தமிழக அரசியல்வாதிகள் கையிலெடுத்துக் கொள்கிறார்கள். இலங்கைப் பிரச்னை இப்போது தீர்ந்துவிட்டது, தீராத பிரச்னையை இனி கையிலெடுக்க வேண்டுமே? அந்தமாதிரி பெரிய பிரச்னையை எங்கே, எப்படித் தேடுவது?

வாசகர்களே, உங்களுக்கு ஏதாவது தோன்றினால் கட்டாயம் எம் அரசியல்வாதிகளுக்கு தெரிவியுங்கள். அவை பெரிய பிரச்னைகளாக, எளிதில் தீர்க்கப்பட முடியாதபடி இருக்கவேண்டும். எனக்குத் தோன்றிய மூன்றைச் சொல்கிறேன்; அதுமாதிரி, நீங்களும் யோசித்துப்பாருங்கள்.

ஒன்று; கூவத்து நீரைப் பன்னீராக்கி, இங்கிலாந்துக்கு ஏற்றுமதிசெய்து ஸ்ரேர்ளிங் பணத்தைப் பெறுவது. இன்னொன்று, இமய மலையைப் பாறை பாறையாகப் பிளந்து, அவற்றை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்து டொலர்கள் சம்பாதிப்பது. ராஜஸ்தான் பாலைவனத்தில் மாதுளைச் செடிகள் வளர்த்து, மாதுளை முத்துக்களை வைரங்களாக்கி, சுவிற்சர்லாந்தில் விற்பது. மேற்கொண்டு நீங்கள் யோசித்துப் பார்த்து, எம் அரசியல்வாதிகளுக்கு இதுமாதிரி வேறு எவற்றையாவது சொல்லலாம். ஆனால் ஒன்று, எந்தப் பிரச்னையையும் ராஜபக்ஷவசம் போய்விடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அந்த மனிதருக்கு தன் மக்களைக் காக்கும் இன அபிமானமும் வீரமும் இருப்பது தெரிகிறது! அத்துடன், தேசாபிமானமும் இருக்கிறது. நம்மவர்களுக்கு காசாபிமானம் மட்டுமே இருக்கிறது. பழைய திரைப்படப்பாடல் நினைவிருக்கிறதா? "தேசம், ஞானம், கல்வி எல்லாம் காசுமுன் செல்லாதடி குதம்பாய், காசுமுன் செல்லாதடி." அமர வாசகங்கள். ■

### பிரி. பாராளுமன்றத்தில்

# 300 ஆண்டுகளில் ஒரு நிகழ்வு



மாலி

'பாராளுமன்றங்களின் அன்னை' என்ற மதிப்பைப்பெறும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில், 1695ஆம் ஆண்டிலிருந்து, முந்நூறுக்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்குப் பின்னர், சபாநாயகர், தனது பதவியைத் துறக்கநேர்ந்த நிர்ப்பந்தத்தில் பதவியைத் துறந்திருக்கிறார். இங்கிலாந்தின் கீர்த்திமிக்க 'டெயிலி ரெலிகிராப்' பத்திரிகை வெளியிட்ட, பாராளுமன்ற உறுப்பினர்களின் வியப்பை ஏற்படுத்தும் 'பண ஊழல்' தொடர்பில், சபாநாயகர் மைக்கல் மாட்டின் இந்த சரித்திர சம்பவத்தை சந்தித்தார்.

அனைத்து கட்சிகளையும் சார்ந்த சுமார் நூறு எம். பி. க்கள் சம்பந்தப்பட்ட இந்த விவகாரம், தொழிற் கட்சி அரசாங்கத்துக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது. இதன் விளைவாக, அண்மையில் நடைபெற்ற ஐரோப்பிய பாராளுமன்ற, உள்ளூராட்சி தேர்தல்களில் தொழிற்கட்சி பெரும் தோல்வியைத் தழுவியது. 1987ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் தடவையாக கருத்துக்கணிப்பில் தொழிற்கட்சி மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டிருக்கிறது. பிரதமர் கோர்டன் பிரவுண், கட்சிக்குள்ளேயே அவரது தலைமைக்கு பெரும் சவால்களை எதிர்கொள்கிறார். அமைச்சர்களும் சம்பந்தப்பட்டிருந்த இந்த ஊழலில், அமைச்சர்களின் இராஜிநாமாக்களுடன், அமைச்சரவையும் மீளமைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற அமர்வுகளுக்கு வசதியாக, உறுப்பினர்கள் லண்டனில் இன்னொரு வீடு வைத்திருக்க முடியும். இந்த வீட்டுக்கான அடிப்படை செலவினங்களை அவர்கள் கோரிப் பெற்றுக்கொள்ளவும் முடியும். இதில்தான் பலர் நியாயமற்ற முறையில் நடந்துகொண்டது அம்பலத்துக்கு வந்தது. வீட்டுக்கடன் எப்போதோ செலுத்தி முடிந்தபின்னரும், மாதாமாதம் அந்த வீட்டுக் கடனுக்காகவென்று ஆயிரத்துக்கும் அதிகமான தொகைமுதல், தேவாலயத்துக்கு 5 பவுண் தர்மப் பணம்வரை, பல்வேறு தொகைகளில், பல்வேறு கணக்குகளில் இவர்கள் பல வருடங்களாகவே பணத்தைக் கோரி பெற்றிருப்பது பத்திரிகைச் செய்தியில் தெரியவந்தது. உறுப்பினர்களின் இச் செயல்மீது நடவடிக்கை எடுப்பதை தடுக்க முனைந்ததும், இந்தப் பிரச்னையை சபையில் எழுப்பிய எம். பி. க்களை அவமரியாதைப்படுத்தும் விதத்தில் நடந்துகொண்டதும்; பாராளுமன்றத்தின் மூன்று கட்சிகளினது தலைவர்களினதும் ஒப்புதலுடன் சபாநாயகர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொணரவைத்தது. இந்த பிரேரணை விவாதத்துக்கு வராதவிதத்தில், சபாநாயகர் தாமே பதவி விலகிக்கொள்ள ஒரு காலக்கெடுவை அறிவித்து, சபாநாயகர் பதவியுடன் தனது எம். பி. பதவியையும் அவர் துறந்தார்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் சபாநாயகராகவிருந்தவேளையில் ஆர். பிரேமதாச அப்போது பிரதமராகவிருந்தார். வயதில், அநுபவத்தில் வித்தியாசமிருந்தாலும், பிரேமதாசவினுடைய அரசியல் வைரி அநுரா பண்டாரநாயக்கா. பாராளுமன்றத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை எட்டுப்பேராக மட்டுமே இருந்தபோது, இளம் எம். பி. யான அநுரா பண்டாரநாயக்கா கட்சியின் முக்கிய உறுப்பினராகவிருந்தார். அவருக்கிருந்த ஆங்கில அறிவோடு, நன்கு முன்தயார் செய்து விவாதங்களில் ஈடுபடும் தன்மையும் அவரிடமிருந்தது.

ஆனாலும், எப்பொழுதும் அரசாங்க தரப்பில் பெரும் கூச்சல்களையும் குறுக்கீடுகளையும் அவர் எதிர்கொள்ளவே நேரும். இதனைத் தவிர்த்துக்கொள்ள, எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த அ. அமிர்தலிங்கத்தை அவர் பேசும்வேளைகளில் எப்போதும் சபையில் இருக்கச்செய்வார்.

ஒருமுறை, சபையில் உரையாற்றிக்கொண்டிருந்த அவர், பிரித்தானிய பாராளுமன்றத்தின் 'பாராளுமன்ற நடைமுறைகள்' நூலை மேற்கோள்காட்டி, சபாநாயகரைப் பார்த்து; "சபாநாயகர் அவர்களே, இதையெல்லாம் பிரதமர் வாசித்திருக்கமாட்டார். ஆங்கிலத்தில் அவரால் வாசிக்கமுடியாது'' என்றார்.

எதனையோ வாசித்துக்கொண்டிருந்த பிரதமர் பிரேமதாசவைப் பார்த்து, சபாநாயகர்; "பிரதமர் அவர்களே, நீங்கள் 'ஏர்ஸ்கின் மே' வாசிக்கவில்லையா?'' என்றார்.

"இல்லை சபாநாயகர் அவர்களே, நான் டங்கன் டி அல்விஸ் எழுதிய தொகுப்புகளைத்தான் படித்திருக்கிறேன்'' என்றார் பிரேமதாச.

பிரதமர் இப்படிச்சொல்லவும் சபையில் பின்னர் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

கொழும்பு அரசாங்க அதிபராகவிருந்த டங்கன் டி அல்விஸ், அநுரா பண்டாரநாயக்காவின் தந்தை எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பிரதமராகவிருந்தபோது, அவரின் செயலாளராகவிருந்தவர். பண்டாரநாயக்கா குடும்பத்தில் அவரைத் தொடர்புபடுத்தி, சில பேச்சுக்கள் பேசப்படுவதுண்டு. அந்த விதத்தில்தான் பிரேமதாச அதைச் சொன்னார்.

ஆக, அநுரா குறிப்பிட்ட அந்த 'பாராளுமன்ற நடைமுறைகள்' (*Parliamentary Practice*) பாராளுமன்ற ஜனநாயகம் நிலவும், அநேகமாக எல்லா பொதுநல அமைப்பு நாடுகளிலும், பாராளுமன்ற நடவடிக்கைகளின் 'பைபிளா'கவே விளங்குகிறது. பாராளுமன்றங்களில் எழுகின்ற ஒழுங்குப் பிரச்னைகளில் இதுதான் தீர்புக்கு வழிகாட்டுகிறது.

இந்த பைபிளை யாத்தவர், 18ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் உதவி நூலகராகவிருந்து, பின்னர் பாராளுமன்ற செயலாளராகவிருந்த தோமஸ் ஏர்ஸ்கின் மே (*Thomas Erskine May*). 40 ஆண்டுகள் பணியாற்றிய இவரின் இந்த 'பாராளுமன்ற நடைமுறைகள்', பொதுவாக 'ஏர்ஸ்கின் மே' என்றே அறியப்படுகிறது. இதுதான் பிரிட்டனின் அரசியலமைப்பாகவும் கருதப்படுகிறது. அவ்வப்போது தொடர்ந்து புதுப்பித்து வெளியிடப்படும் இது, கடைசியாக 2004இல் வெளிவந்தது. அடுத்த பதிப்பு, 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்பதனையும் உணர்த்தி வெளியாகும். ■

# தமிழர் வரலாற்றில் ஒருவர்

## பிரபாகரன் வஞ்சிக்கப்படுகிறாரா?

மாலி

அட்டை செய்தி




மதுரை மருத்துவக் கல்லூரியில் ஓவியராகப் பணியாற்றிக்கொண்டிருந்த ஐ. எம் நடராஜன், குடும்ப நண்பர். இலங்கையில் 1977 இனக்கலவரம் நிகழ்ந்த அந்த வேளையில், அதை அறிந்திராமலே இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் வழியாக இலங்கை வந்திருந்தார். முன்னர், 1972இல் அவர் தென்னிலங்கைக்கு ஒருதடவை வந்திருந்தாலும், யாழ்ப்பாணத்துக்கு இது அவரது முதல் வருகை.

மருத்துவக் கல்லூரி ஓவியர் என்பதற்கு அப்பால், பார்த்து, உயிரோவியங்களை வடிக்கும் அந்தக் கலைஞனுடைய கண்களில், இலங்கைத் தமிழன் அந்தக் கலவரகாலத்துப் பின்னணியில் வெகு துல்லியமாகவே தெரிந்தான்.

மனத் திரையில் பதிந்த காட்சிகள் மனதில் சுமையாக, அந்தச் சுமையுடன் மதுரை திரும்பினார் அவர்.









பிரபாகரன்,
நடராஜன், திருமதி நடராஜன்,
பேபி சுப்பிரமணியம்

மீனாட்சி அம்மன் கோவில் மேலை மாசி வீதிக்கு அணித்தாய் ஒரு சிறிய வீதியில் இருந்தது அவரது இல்லம். அந்த உறங்கா நகரின் சந்தடி அங்கும் எப்போதும் இருக்கும். காலையிலும் மாலையிலும் தங்கள் உருவங்களை ஒவியமாக்குவதில் ஒரிருவர் அந்த முன்புறத்து கூடத்தில் இருந்துகொண்டிருப்பார்கள்.

ஒருநாள் காலையில், இவருக்கு பழக்கமாகியிருந்த இலங்கைக்காரர் ஒருவர், யாழ்ப்பாணத்து இளைஞர்கள் இருவரை அழைத்துச்சென்றார். ஒருவருக்கு துருதுருத்த பெரிய விழிகள். மற்றையவர் சற்று பருமனானவர்.

சிவகாசிப் பட்டாசில் வரையப்பட்டிருந்த புலிப் படங்களைப் பார்த்து, அப்படங்கள் அங்கு கிடைக்குமா என்று சிவகாசி சென்று அதிருப்தியுடன் திரும்பியிருந்த அந்த இருவரை, ஒவியர் நடராஜனிடம் அழைத்துவந்திருந்தார் அந்த இலங்கைக்காரர். யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பிய நடராஜனின் மனோநிலையை ஏற்கனவே அறிந்தவர் அவர்.

வந்த விஷயத்தைச் சொன்னார்கள். நடராஜனுக்கு அது, "இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே''.

ஒரு வட்டத்துள் பூரணமான சீற்றத்தை வெளிப்படுத்தி ஒரு புலியின் முகம். பின்புறமாக, ஒன்றுக்கொன்று குறுக்காக இரண்டு துப்பாக்கிகள். துப்பாக்கிகளின் நுனியில் குத்துக்கத்திகள். வட்டத்தையொட்டி துப்பாக்கித் தோட்டாக்கள். அவற்றுக்கு மேலாக தமிழில் 'தமிழீழ விடுதலைப் புலிகள்'. துப்பாக்கி அடிகளுக்கு இடையில் ஆங்கிலத்தில் *'Liberation Tigers of Tamil Eelam'*.

அவர்கள் சொல்லச்சொல்ல, நடராஜன் பென்சிலால் வரைந்துகொண்டிருந்தார்.

எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி. "புலியின் முகத்தைச் சிறிதும் மாற்றவேண்டாம்'' - பெரிய கண்காரர் கேட்டுக்கொண்டார்.

வட்டத்துக்குமேல் வைக்கப்படும் தோட்டாக்களின் எண்ணிக்கையை எவற்றுடனாவது தொடர்புபடுத்தி தீர்மானிக்கலாமா? என்று நடராஜன் கேட்டார். வந்தவர்களுக்கு அப்படியொன்றும் தோற்றவில்லை. நடராஜனே, மூன்று பிரிவுகளாகவிருந்த மேல்வளைவுப் பகுதி ஒவ்வொன்றுள்ளும் பதினொரு தோட்டாக்களை வரைந்தார்.

சின்னத்தின் அமைப்பும் சமநிலையும் எல்லோருக்கும் பிடித்துவிட்டது. நடராஜன் மனதில் ஒன்று பட்டது; சீறுகின்ற புலி வட்டத்துள் அழகாகத்தானிருக்கிறது. ஆனால், அந்த வட்டம் அது வெளியே வர தடையாகிறதா? அந்தப் புலிக்கு தடையேதுமே இருக்கக்கூடாது. தடையையும் மீறி அது பாயவேண்டும்.

சீறுகின்ற புலி வளையத்தைவிட்டு வெளியே தாவிப்பாய பெரிய கண்காரரும் ஒப்புக்கொண்டார்.

நகங்கள் விரிந்த முன்கால்கள் இரண்டையும் வளையத்துக்கு வெளியே நீட்டிவிட்டால் புலி வளையத்தைவிட்டு பாய்ந்துவிடலாம்.

கற்பனை உரு பெற்றது. எல்லோருக்குமே திருப்தி; மகிழ்ச்சி.

அழைத்துவந்தவர் பெரியகண்காரரை 'தம்பி' என்று அழைத்தார். மற்றையவரை 'பேபி' என்று அழைத்தார்.

ஒவியர் நடராஜன் ஒரு வேட்டைப் பிரியர். அதனால், துப்பாக்கிகளிலும் அநுபவமும் அறிவும் இருந்தது. மோட்டார்சைக்கிள் தொடர்பிலும் அப்படித்தான். அத்துடன், மதுரையின் முன்னாள் திராவிட முன்னேற்ற கழக மேயர், மைனர் மோஸஸின் ஒன்றுவிட்ட சகோதரர்; அந்த செல்வாக்கும் கூடவே இருந்தது.

வந்தவர்களுக்கு இவைகளெல்லாம் மேலும் வாய்ப்புகளாகின.

தன்னிடமுள்ள பிஸ்டல் வேலைசெய்யவில்லை; சரிபார்க்கமுடியுமா? என்றார் பெரிய கண்காரரான 'தம்பி'.

கொண்டுவாருங்கள், பார்க்கலாம் என்றார் நடராஜன்.

குறித்த நாளில் 'தம்பி' வந்தார். ஆனால், எதையும் கொண்டுவந்ததாக தெரியவில்லை.

கொண்டுவந்தீர்களா? என்றார் நடராஜன்.

பெரிய வெள்ளை விழிகளின் நடுவே தோன்றிய கருவிழிகள் எதையோ உணர்த்தின.

மேலே, மாடிக்கு அழைத்துச்சென்றார் நடராஜன். பிஸ்டல் கொண்டுவந்தீர்களா? என்றார்.

'தம்பி' இடுப்பிலிருந்து அதை லாவகமாக எடுத்தார். அநுபவப்பட்டவர் என்பது நடராஜனுக்குப் புரிந்தது.

நடுத்தர அளவில் அழகான பிஸ்டல். நட்சத்திரக் குறி ஒன்று பொறிக்கப்பட்டிருந்தது. அது ரஷ்ய துப்பாக்கி என்றும், 'டொக்ரொவ்' என்பது அதன் பெயர் என்றும் 'தம்பி' விளக்கினார்.

'இதன் குழாயின் துளை அளவு 7.62 மி.மீ. ஆனால், 9 மி.மீ. துளை அளவு துப்பாக்கி என்று, ஏமாற்றி எனக்கு விற்றுவிட்டார்கள்' என்றுசொல்லி கவலைப்பட்டார் 'தம்பி'.

அத்துடன், இன்னொரு தவறையும் தான் செய்துவிட்டதாகவும் கூறி வருந்தினார்.

"இதோ பாருங்கள், இந்தத் துப்பாக்கியில் 9 மி.மீ. தோட்டாவும் பொருந்துகிறது. எனவே, 9 மி.மீ. துப்பாக்கியே என்று நினைத்து, 9 மி.மீ. தோட்டாக்களையே நிரப்பி ஒருமுறை சுட்டுப்பார்த்தேன். சரியான உதறலுடன் குண்டு வெளியேறிவிட்டது. ஆனால், மறுமுறை துப்பாக்கி வேலைசெய்யவில்லை. என்ன



**மே 15இலிருந்து**
**மே 19 வரை நிகழ்ந்தவை என்ன?**

**இந்த உண்மைகள்,**
**உண்மைகளாகவே வெளிவருமா?**

**அதுவும் இப்போது வெளிவருமா?**

காரணம் என்பது அப்போது தெரியவில்லை. பின்னர்தான் அது, 7.62 மி.மீ. என்பதைப் புரிந்துகொண்டேன்'' என்று, துப்பாக்கியை ஒப்படைத்தார்.

(திரு நடராஜன் இந்த அநுபவங்களையெல்லாம் நூலுருவாக்குவதற்காக எழுதி, 256 பக்கங்களில் கடந்த டிசம்பரில் என்னிடம் தந்த மூலப்பிரதியிலிருந்து இவற்றை நான் எழுதிக்கொண்டிருக்கையில், அவர் இறந்துவிட்ட செய்தி (ஜூன் 3) கிடைத்தது.)

"அந்த இளைஞர் என்மீது நல்ல நம்பிக்கை வைத்திருக்கிறார் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. அளவான உடல்வாகும், கல்லூரி மாணவர்போன்ற உடையும், தெளிவுமிக்க பேச்சும், துருதுருப்பிலும் காணப்பட்ட நிதானமும் என்னை அவர்பால் ஈர்த்துவிட்டன. அவரிடமிருந்த சிறப்பு அம்சம் என்னவெனில், மிகுந்த தூய்மையான பெரிய வெள்ளை விழிகள். அதுபோன்ற தூய்மைமிக்க வெள்ளை விழிகளை இதுவரை நான் கண்டதேயில்லை. அவற்றினூடே, துள்ளி உருளும் கருவிழிகள் எதனையும் சீர்தூக்கிப்பார்க்க துடித்துக்கொண்டிருந்தன. அவரது இரட்டை நாடி அவருக்கு அழகைத் தந்தது.''

இந்த இரட்டை நாடி, பெரியகண்காரர் 'தம்பி' பிரபாகரன். மற்றையவர் 'பேபி' சுப்பிரமணியம்.

இலங்கையில் தேடப்பட்ட பிரபாகரனுக்கு அப்போது 50 ஆயிரம் ரூபா சன்மானம் அறிவிக்கப்பட்டிருந்தது.

1981 டிசம்பரில் மதுரை சென்றிருந்தசமயம், நான் பிரபாகரனைச் சந்திப்பதை விரும்பிய நடராஜன், ஏற்கனவே சந்திப்புக்கான ஏற்பாட்டையும் செய்திருந்தார். பிரபாகரன் என்னை நன்கே தெரிந்தவர்.

ஹோட்டல் ஒன்றில் இருவரும் தனியாகவே சந்தித்தோம். மோட்டார் சைக்கிளில் அவரை அழைத்துவந்த நடராஜன், அவரை அறையில் கொணர்ந்து விட்டுவிட்டுச் சென்றுவிட்டார். நான்கு மணித்தியாலங்களுக்குப் பின்னர் அவர் மீண்டும் வந்து அழைத்துச்செல்லும்வரை பல்வேறு அரசியல் விஷயங்களையும் பேசினோம்.

முழுநேரமும் என்னுடன் சாவகாசமாகவே பேசிக்கொண்டிருந்தார். ஆனால், ஒவ்வொரு கணமும் விழிப்பாகவுமிருக்கிறார் என்பதையும் நான் உணர்ந்தேன்.

பொதுவாக, அவருடைய இலட்சியத்தில் உறுதியும் விசுவாசமும் மிகவே இருந்தது. ஊர்மிளா தொடர்பான விவகாரத்தில் உமாமகேஸ்வரன்மீது மிகுந்த கோபத்தை

வெளிப்படுத்தினார். காண்கின்ற வேளைகளில் சுடுவேன் என்றும்கூடச் சொன்னார்.

சில வெளிநாட்டு உதவிகள் தொடர்பில் யாழ். எம். பி. யோகேஸ்வரன்மீது கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்தினார். அமிர்தலிங்கத்துடன் கருத்துவேறுபாடுகளைகொண்டிருந்தாலும், மிகுந்த மதிப்பை அவர்மீது கொண்டிருந்தார்.

இவை, அப்போது பிரபாகரன்பேசிய பொதுவான விடயங்கள் என்று சொல்லாம்.

அவரை அழைத்துச்சென்று அவரது இடத்தில் விட்டுவிட்டு, மீண்டும் என்னிடம் வந்த நடராஜன் ஒரு விடயத்தைச் சொன்னார்.

பிரபாகரனுக்கு 25 பைசா தண்டம் விதிக்கப்பட்டதென்றார். என்னிடம் வரும்பொழுது கால், முகம் கழுவிவிட்டு, கைக்கடிகாரத்தை அந்த இடத்திலேயே வைத்துவிட்டு வந்ததற்காக விதிக்கப்பட்ட தண்டம் இது என்றார்.

மறுதினம் மாலையில் நடராஜன் இல்லத்தில் ராகவனை முதன்முதலாக பார்த்தேன். அப்பொழுது பிரபாகரனுக்கு அடுத்த தரத்தில் இருந்தார் ராகவன். சென்னை திரும்பவிருந்த என்னை, குறித்த ஒரு நாள், நேரத்தில் மரீனா கடற்கரையில் அண்ணா சமாதியருகே சந்திப்பதாக சொல்லியிருந்தார் ராகவன். அதேநாள், அதே நேரத்தில், அதே இடத்தில் அவரை மீண்டும் சந்தித்தேன்.

இப்படி ஓர் இராணுவ கட்டுப்பாடும், ஒழுங்கும் பிரபாகரனுடைய முத்திரை.

இலங்கை திரும்பிய பின்னர், பிரிட்டிஷ் தூதரகத்தில் பத்திரிகை அலுவலராக பணியாற்றிய நண்பர் சந்திரசேகராவைச் சந்தித்தேன். தூதரகத்துக்கு முன்னாலிருந்த தேநீர்க்கடையில் தேநீர் அருந்திக்கொண்டிருந்தபோது, மதுரை சந்திப்பை அவரிடம் சொல்ல ஆரம்பித்தேன். சற்று பதற்றத்துடன் சுற்றுமுற்றும் பார்த்த அவர், எவரிடமுமே இதைப்பற்றிப் பேசவேண்டாம்; ஆபத்து என்றார்.

அதனால்தான், தலைமறைவான பின்னர் பிரபாகரன் சந்தித்த, பிரபாகரனைச் சந்தித்த 'முதல்' பத்திரிகையாளன் என்று நான் கொண்டாடவில்லையா....!

ஆக, அந்த இலட்சிய வேட்கையிலும்; ஒழுங்கு, கட்டுப்பாட்டிலும் பிரபாகரன் நடந்துவந்த பாதை, அடைந்த இலக்கு என்ன?

இது, இன்று எழுகின்ற வினா.

1976 மே 14ஆம் தேதி, 'தமிழீழம்' என்ற வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அந்தக் காலத்தில்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பமானது.

அந்த தீர்மானத்தை மக்கள் மத்தியில் விநியோகித்தார்கள் என்பதற்காக அ. அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், கா. பொ. இரத்தினம், க. துரைரத்தினம் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராக நடைபெற்ற, யூரர்கள் அற்ற, 'ட்ரயல் அற் பார்' வழக்கு இலங்கையில் பிரசித்தமானது.

அந்த வழக்கை விசாரிக்கும் நீதிமன்றத்துக்கு, வழக்கை விசாரிக்கும் சட்டவலு உண்டா? என்ற ஒரு சட்டப் பிரச்னையை எழுப்பி, எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் ஜீ. ஜீ. பொன்னம்பலம், மு. திருச்செல்வம், வி. எஸ். ஏ. புள்ளைநாயகம் ஆகியோர் வாதிட்டார்கள். அந்த வாதம் இரண்டு அம்சங்களில் நடைபெற்றது. வழக்கை விசாரிக்கும் நீதிமன்றம் ஏற்பட ஏதுவான அரசியலமைப்பு செல்லுபடியற்றது என்று திருச்செல்வமும், நீதிமன்றம் ஏற்படுத்தப்பட ஏதுவான அவசரகால சட்டம் செல்லுபடியற்றது என்று ஜீ. ஜீ. பொன்னம்பலமும் வாதிட்டார்கள்.

1972இல் இலங்கை குடியரசாக பிரகடனப்படுத்தப்பட்டபோது பிரிட்டிஷாரிடமிருந்த இலங்கையின் இறைமை இல்ங்கை மக்களுக்குக் கிடைத்தது என்றும் ஆனால், அந்த குடியரசு அரசியல் சட்டத்தை தமிழர்கள் ஏற்காததில் தமிழர்களின் இறைமை மீண்டும் தமிழர்களுடையதாகியது என்றும் எனவே, போரில் தோற்றிடாத அந்த இறைமைமீது விசாரணை நடத்தும் அதிகாரம் இந்த நீதிமன்றத்துக்கு இல்லை என்றும் திருச்செல்வம் வாதிட்டார்.

1619இல் சங்கிலி மன்னனைப் போர்த்துக்கேயர் கைப்பற்றியவேளையிலும், 1815இல் கண்டி அரசனைப் பிரித்தானியர் கைப்பற்றியபோதும் இழந்த இறைமையை, 1972 மே 22இல் நாம் மீளப்பெற்றோம் என்று அவர் உரைத்தார்.

திருச்செல்வத்தின் இந்த வாதம்மீது தீர்ப்பளிக்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு இல்லை என்று தீர்ப்பளித்த நீதிமன்றம், ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் வாதத்தை ஏற்று, அவசரகாலச்சட்டம் செல்லுபடியற்றது என்று தீர்ப்பளித்தது. கைது செய்யப்பட்ட தமிழ் எம். பிக்கள் மாத்திரமன்றி, ஜே. வி. பி. தலைவர் ரோகண வீஜேவீராவும் அத் தீர்ப்பின் மூலம் விடுதலைசெய்யப்பட்டார்.

இது, விடுதலைப் புலிகளின் ஆரம்ப காலத்து நிலைமை.

இராணுவ தாக்குதல்கள் முல்லைத்தீவு பகுதியில் தீவிரமடைய ஆரம்பித்த வேளையிலேயே பிரபாகரன் அங்கிருந்து வெளியேறிவிட்டாரென்பது அரசியல் அவதானிகள் பலரது யூகமாகவிருந்தது. ஆனால், பிரபாகரன் அங்குதானிருக்கிறார் என்பதில் இராணுவம் உறுதியாகவே இருந்ததாக தெரிகிறது.

பொதுவாகவே, எதிரியிடமிருந்து தப்பித்துக்கொள்வதில் மிகுந்த சாதுரியமானவரான பிரபாகரன், மேலைநாடுகளினதும், தமிழ்நாட்டினதும் வற்புறுத்தலில் ஒரு யுத்த நிறுத்தத்துக்கான சாத்தியத்தைக் கடைசிவரையிலும் எதிர்பார்த்ததும் நம்பியதும், ஏற்பட்ட இந்த முடிவுகளுக்கு ஒரு முக்கிய காரணமாகலாம் என்றும் நம்பப்படுகிறது.

ஆக, மே 15இலிருந்து மே 19 வரை நிகழ்ந்தவை என்ன?

இந்த உண்மைகள், உண்மைகளாகவே வெளிவருமா? அதுவும் இப்போது வெளிவருமா? இவையெல்லாம் பெரும் சந்தேகங்களே.

ஜோர்டானிலிருந்து அவசரமாக நாடு திரும்பிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, விமானநிலையத்து செங்கம்பள தரையை தொட்டு வணங்கியதன் அசல் அடையாளம் என்ன?

'எப்படி?' என்பதில் குழறுபடிகளை உருவாக்கினாலும், பிரபாகரன் மரணமடைந்துவிட்டதாக இராணுவமும் இலங்கை அரசும் தெரிவித்தபோது, விடுதலைப் புலிகளின் சர்வதேச பொறுப்பாளர் பத்மநாதன் அதை மறுத்திருந்தாலும், பின்னர் அதனை ஊர்ஜிதம் செய்தார். ஆனால், சில தரப்புகள் அதனை மீண்டும் மறுத்தன; இன்னமும் மறுக்கின்றன.

தமிழர் வரலாற்றில் தனக்கு ஒரு சரித்திரம் படைத்தவர் பிரபாகரன். அந்த ஒருவருக்கான மரியாதையில் அவர் வஞ்சிக்கப்படுகிறாரா, இல்லையா? ■

# நினைவுகளில்...

# பிரபாகரன்

பகவான் சிங்



சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர், வேலுப்பிள்ளை பிரபாகரனின் அரசியல் குரு என்று எல்லோரும் அறிந்த, நண்பர் அன்ரன் பாலசிங்கத்துடன் எனது செய்தி அலுவலகத்தில் பேசிக்கொண்டிருந்தபோது, அப்போதுதான் நடைபெற்றிருந்த விடுதலைப் புலிகள் தலைவரின் திருமணம்பற்றி பேச்சு திரும்பியது. சென்னையிலிருந்து 30 கி. மீ. தெற்கே, திருப்போரூர் முருகன் கோவில் ஒன்றில் அத் திருமணம் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில், அரசுக்கு எதிராக மேற்கொண்ட சாகும்வரை உண்ணாவிரதத்தை நிறுத்தச்செய்வதற்காக, மணமகள் மதிவதனியும் அவரது பல்கலைக்கழக சிநேகிதிகளும் பலாத்காரமாக பாக்குநீரிணையைக் கடந்து கொண்டுவரப்பட்டிருந்தார்கள்.

தளர்வுற்றிருந்த அந்த மாணவிகளைச் சென்றுபார்த்த பிரபாகரன், மதிவதனியின் மனவுறுதியான பேச்சில் ஈர்க்கப்பட்டு, அதில் அவரை மணக்க தீர்மானித்ததாக சொல்லப்படுகிறது. "தம்பி திருமணம்செய்ய தீர்மானித்தது எங்களுக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சி. அது, அவரை பொறுப்பான ஒரு மனிதனாக்கும்.'' - பாலா அண்ணா (பாலசிங்கம் அப்படித்தான் விடுதலைப் புலி போராளிகள் மத்தியிலும் அவரது நண்பர்கள் மத்தியிலும் அறியப்பட்டார்), அதுவரை காதலுக்கும் திருமணத்துக்கும் விடுதலைப் புலிகளில் விதிக்கப்பட்டிருந்த தடையைக் குறிப்பிட்டு, என்னிடம் அப்போது சொன்னார்.

துப்பாக்கிகளும் மரணமுமாக, ஈழத்துக்கான அவரின் தீவரவாத போக்குடனான பேரவாவில், திருமணமும் குடும்பமும் அவரைச் சற்று இளகவைத்துவிடும் என்று பிரபாகரனின் சகாக்கள் நினைத்தார்கள். புலிகள் தலைவரைப் புகழ்பவர்களுக்கு, அவரின் திருமணமும் ஒரு கதைதான். மணமகளுக்கு தாலி செய்வதற்காக நான்கு பவுண் தங்கம் அவருக்கு தேவையாக இருந்தது.

புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்தும் வேறு இடங்களிலிருந்தும் அப்போதே விடுதலைப் புலிகளிடம் தொன்கணக்கான பணம் இருந்தது. ஆனால், தனது சொந்த தேவைக்காக அதை அவர் தொடமாட்டார். "பின்னர் திருப்பி தருவதாக, அந்த சிறிய அளவு தங்கத்தை தம்பி என்னிடம் கடனாக வாங்கினார்; பின்னர் தந்துவிட்டார்.'' - அவருடைய தந்தையாரைப்போலவே, வேலுப்பிள்ளை என்ற பெயருடைய, பிரபாகரனின் தாய்வழி மாமன், பின்னர் என்னிடம் கூறியிருந்தார்.

தமிழர் உரிமைக்கான தனது மகனின் வன்முறை நடவடிக்கைளை ஏற்காத, கடவுள் நம்பிக்கையுடைய, ஓர் அரசாங்க உத்தியோகத்தரான தந்தையார் வேலுப்பிள்ளைக்கும், பொலிசாருக்கும் பயந்து, யாழ்ப்பாணத்தில் வீட்டைவிட்டு வெளியேறிய இளைஞன் பிரபாகரனுக்கு, இந்த முதியவரும் அவரது மனைவியும்தான் அவரது பாதுகாவலர்களாக உணவும் தங்குமிடமும் அளித்தனர். இப்பொழுது, பெருந்தொகையான மக்களுடன் தமது இறுதி அழிவைச் சந்தித்த முல்லைத்தீவின் சிறிய கடற்கரைப்பகுதிக்கு தள்ளப்படுவதற்கு முன்னர், வன்னியில் விடுதலைப்புலிகள் இழந்த கடைசி நகரான புதுக்குடியிருப்பில் வசித்துவந்த இந்த மாமன், மாமி இருவரும், அவர்களது வீட்டின்மீது ஷெல் ஒன்று வீழ்ந்ததில் உயிரிழந்தார்கள்.

முதலமைச்சர் எம் ஜி. இராமச்சந்திரன் நிதியும் அரசாங்க ஆதரவும் அளித்து பிரபாகரனுக்கு உதவினார். புலிகள் தலைவர் தன்னுடைய புதிய துப்பாக்கியைப்பற்றி விளக்குவதை ஆர்வத்தோடு அவதானித்துக்கொண்டே, பல காலைவேளை உணவுகளில், பிரபாகரனின் காதல்வயப்படாத, புகைத்தல், மது பழக்கம் இல்லாத, ஒழுக்கமான வாழ்வை அவதானித்து, பிள்ளைப் பாக்கியம் இல்லாத எம். ஜி. ஆர், இளம் பிரபாகரனை தனது மகனாக நினைத்தார் என்று பாலசிங்கம் கூறியதும் மீண்டும் நினைவுக்கு வருகிறது.

மாநில உளவுத்துறைத் தலைவர் கே. மோகனதாஸ், மாநிலத்தில் தீவிரவாதிகள் அனைவரதும் ஆயுதங்களை கைப்பற்ற உத்தரவிட்டபோது, அவற்றை மீளக் கையளிக்கவும், கைதுசெய்யப்பட்ட போராளிகள் அனைவரையும் விடுதலைசெய்யவும் வற்புறுத்தி, பிரபாகரன் சாகும்வரை உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொண்டார். தனது பொலிஸ் மா அதிபரிடம், பிரபாகரன் சார்ந்தவர்களது துப்பாக்கிகளைமாத்திரமன்றி, கைப்பற்றப்பட்ட ஏனைய குழுக்களின் துப்பாக்கிகளையும் திருப்பி ஒப்படைக்க எம். ஜி. ஆர். உத்தரவிட்டார்.

இந்திரா நகரில் அவரின் இடத்தில் பிரபாகரன் அந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டவேளையில் அவரைக்காண சென்றபோது, மாறிமாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் அனைத்துமே தமிழர்களின் பிரச்னைகளைத் தீர்க்க தவறிவிட்டபோது, ஈழத்தைத் தவிர மாற்றுவழி ஒன்று இல்லை என்று வற்புறுத்தி, களைப்புடன் படுத்திருந்தவாறே, மிக நீண்டநேரம் அவர் பேசினார். சிலதினங்களில், அவரைக் காணவில்லை. தீவிரவாதிகளின் ஆயுதங்கள், முகாம்கள் தொடர்பில் தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்பதை உணர்ந்து, இந்தியாவின் நிர்ப்பந்தங்களிலிருந்து விடுபட்டு, சுதந்திரமாகவே செயல்படலாம் என்பதற்காக, அமைதியாகவே படகில் யாழ்ப்பாணம் சென்றுவிட்டார்.

புலிகளின் தலைவர், சர்வதேச ரீதியில் தனது இயக்கத்தை விஸ்தரிப்பதற்காக வேறு நண்பர்களைத் தேடத் தொடங்கியதில் அசௌகரியமடைந்த புதுடில்லி, இதனைப் பெரிதும்விரும்பவில்லை. இதிலிருந்து, பரஸ்பர நம்பிக்கை இருதரப்பிலுமே அற்றுப்போயிற்று. ■

## இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு கிடைத்த பெருவாய்ப்பாக நோர்வேயின் அனுசரணை அமைந்திருந்தது

'இந்திர விழா' என்பது, யாழ்ப்பாணத்தின் வல்வெட்டித்துறைப் பிரதேச மக்களை குதூகலத்தின் உச்சத்துக்கே கொண்டு சென்றுவிடும். அப் பிரதேசத்தின் ஆலய விழாக்களில் முக்கியமான இந்திர விழாவைக்காண, யாழ்ப்பாண குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் வல்வெட்டித்துறையை வந்தடைவர்.

இந்திரலோகம்போலவே காட்சி தரும் இந்திரவிழாக் காலங்களில் அழகுற்றிருக்கும் வல்வெட்டித்துறையில், துள்ளிக் குதித்து மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்திருக்கும் சிறுவர் குழாத்தில் ஒருவனாக இருந்த சுட்டிப் பையனே வேலுப்பிள்ளை பிரபாகரன்.

சிறு பராயம்முதல் வீறுகொண்ட வரலாற்றுக் கதைகள், மாவீரர்களின் சரித்திர நூல்கள் என்பவற்றை ஆர்வத்தோடு வாசிக்கும் பழக்கத்தை சிறுவன் பிரபாகரன் கொண்டிருந்தான். பிரபாகரனின் பால்யப் பருவத்திலேயே இலங்கையில் தமிழர்களுக்கெதிரான முதலாவது இனக்கலவரம் 1958ஆம் ஆண்டு வெடித்திருந்தது.

இலங்கைத் தமிழர்கள்மீதான அடக்குமுறைகள் அவ் வன்முறையைத் தொடர்ந்தே படிப்படியாக மூர்க்கமடைய ஆரம்பித்திருந்தன. ஏனைய சிறுவர்களைப்போலன்றி, தம் இனத்தவர் மீதான வன்முறைகளைக் கண்டு சிறுவன் பிரபாகரன் மனம் நொந்திருந்தான்.

பின் நாள்களில் ஒரு போராளியாக மாறி, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையை ஏற்றிருந்த காலத்தில், அமெரிக்காவிலிருந்து வெளிவரும் 'ரைம்' ஆங்கில சஞ்சிகைக்கு ஒருதடவை பிரபாகரன் வழங்கிய பேட்டியில், 1958ஆம் ஆண்டு இனக்கலவரத்தின்போது தென்னிலங்கையில் இந்து மத அர்ச்சகர் ஒருவர் உயிரோடு தீயிட்டுக் கொளுத்தப்பட்டதை அறிந்தபோதே, தாமும் ஆயுதமேந்திப் போராடவேண்டுமெனத் துணிந்துகொண்டதாக கூறியிருந்தார். அந்தப் பேட்டியிலேயே, தனது கையினால் யாழ்ப்பாணம் மேயர் அல்பிரட் துரையப்பாவை முதல் தடவையாக சுட்டுக் கொன்று, தனது போராட்டத்தை ஆரம்பித்ததாகவும் பிரபாகரன் தெரிவித்திருந்தார்.

கடந்த முப்பது வருட காலத்தில், உலகிலேயே மிகவும் பலம்வாய்ந்த ஒரு போராட்ட அமைப்பு என்று குறிப்பிடுமளவுக்கு தமது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பிரபாகரன் கட்டியெழுப்பியிருந்தார்.

தரையில் மட்டுமல்லாது, கடலிலும் ஆகாயத்திலும்கூட தமது அமைப்பின் பலத்தை நிரூபிப்பதாக அவர் பல தாக்குதல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தார்.



# 'கடவுள்தான் காப்பாற்றவேண்டும்'

உலகிலேயே பலம்வாய்ந்த
ஒரு போராட்ட அமைப்பைக் கட்டியெழுப்பியபோதும்
அரசியல் ரீதியான பலவீனத்தால்
சந்தர்ப்பங்களைத் தவறவிட்டு
சிதைந்துபோன விடுதலைப் புலிகள்

**அரசியலில் அநாதைகளாகி நிற்கும் மக்கள்**

தண்டாயுதன்

**இலங்கைத் தமிழர் போராட்டத்துக்கு பக்கபலமாக இருக்கவேண்டிய இந்தியாவை மிக மோசமான முறையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பகைத்துக் கொண்டிருந்தார்**

இராணுவ ரீதியாக 1987ஆம் ஆண்டு வடமராட்சியில் இலங்கை இராணுவத்துக்கெதிராக முதல் தடவையாக நேரடியாக மோத ஆரம்பித்ததுமுதல், இறக்கும்வரை பல இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளை பிரபாகரன் மேற்கொண்டிருந்தார். பூநகரி முகாம் தாக்குதல், ஆனையிறவு தாக்குதல், முல்லைத்தீவு தாக்குதல், கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கான தாக்குதல் என்பவை விடுதலைப் புலிகள் அமைப்புக்கு பல முக்கிய வெற்றிகளைத் தேடித்தந்தவை.

இருந்தபோதிலும், அவ்வப்போது அரசியல் ரீதியாகவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை சரிவரப் பயன்படுத்தத் தவறியமையே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெரும் பலவீனமாக அமைந்திருந்தது. 1987ஆம் ஆண்டு இந்திய அநுசரணையோடு ஏற்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தைத் தவறவிட்டு, இந்தியப் படையோடு மோதலில் குதித்தமை அவர் மேற்கொண்ட முதலாவது பெருந் தவறாக கருதமுடியும்.

இதன் பின்னர், முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்ததை பிரபாகரன் புரிந்த மிக முக்கிய தவறாக கருதலாம். இதன்மூலம், இலங்கைத் தமிழர் போராட்டத்துக்கு பக்கபலமாக இருக்கவேண்டிய இந்தியாவை மிக மோசமான முறையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பகைத்துக் கொண்டிருந்தார்.

புலிகள் அமைப்பின் அரசியல் ரீதியான நடவடிக்கைகளை நோக்கும்போது, யுத்த நிறுத்தமானாலும், பேச்சுவார்த்தையானாலும் மிகக் குறுகிய காலமே அவ்வமைப்பினால் மேற்கொள்ளப்பட்டதை அவதானிக்க முடியும். மூன்று தசாப்த காலமாக யுத்த நடவடிக்கைகளை கெரில்லாப் பாணியிலும், மரபுவழி யுத்தமாகவும் முன்னெடுத்து, இராணுவ ரீதியாகவே தனது இறுதி இலக்குகளை அடையமுடியுமென்பதிலேயே விடுதலைப் புலிகள் ஆர்வம் காட்டிவந்ததை ஊகிக்கக்கூடியதாக இருந்தது. 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாண பெருநிலப் பரப்பிலிருந்து புலிகள் அமைப்பு 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கைமூலம் வெளியேறிய நிலையில், கிளிநொச்சியை மையமாகக்கொண்ட வன்னி நிலப்பரப்பு புலிகள் அமைப்பின் பலம்மிக்க தளமாக மாற்றம்கண்டது.

இருந்தபோதிலும், வன்னி பெருநிலப்பரப்பை தளமாகக்கொண்டு அரசியல் - இராணுவ ரீதியாக ஆக்கபூர்வமாகச் செயல்பட கிடைத்த சந்தர்ப்பங்களை விடுதலைப் புலிகளின் தலைமை சரிவரப் பயன்படுத்தாத காரணத்தினாலேயே இவ்வியக்கம் முற்றுமுழுதாக வன்னிப்பகுதியில் தோல்வியைத் தழுவும் நிலைக்கு உள்ளானது.

2002ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் அமைப்பைப் பொறுத்தவரை முழு உலகுமே அதன் போராட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கிய நிலை காணப்பட்டது. நோர்வேயின் அநுசரணையோடு யுத்தநிறுத்தம் கொண்டுவரப்பட்டு சர்வதேச சமூகத்தின் முழு அளவிலான பங்களிப்போடு, வடக்கு-கிழக்கு பிரச்னை குறித்த பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன.

விடுதலைப் புலிகள் அமைப்பு தனித்தோ அல்லது எவ்வித ஒத்துழைப்புமற்று நிற்கவேண்டிய சந்தர்ப்பத்துக்குமோ இடமில்லாது, உலகின் முக்கிய நாடுகள், ஸ்தாபனங்கள் அனைத்துமே அவ்வமைப்போடு ஒத்துழைத்த நிலை 2002ஆம் ஆண்டில் ஏற்பட்டிருந்தது. இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு கிடைத்த ஒரு பொன்னான சந்தர்ப்பமாகவே நோர்வேயின் அநுசரணையுடனான பேச்சுக்கள் அமைந்திருந்தன.

ஆனால், இந்த அரிய பொன்னான சந்தர்ப்பத்தைக்கூட தமிழீழ விடுதலைப் புலிகள் தவறவிட்டமையே அவர்களுக்குப் பேரிடியான இழப்புக்கள் தொடர்ச்சியாகப் பின்னர் ஏற்படுவதற்கு வழியமைத்திருந்தது. 2005ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட ஜனாதிபதி ஆட்சிமாறல், புலிகள் அமைப்புக்கு சிம்ம சொப்பனமாகவே அமைந்தது. இதுதவிர, 2002ஆம் ஆண்டின் பின்னர், புலிகள் அமைப்புக்குள்ளேயும் பிளவுகள் தலைகாட்ட ஆரம்பித்தவுடன் (கேர்ணல் கருணாவின் வெளியேற்றம்) தொடர்ச்சியான இராணுவப் போராட்டத்தில் புலிகள் அமைப்பின் போராளிகள் ஆர்வமிழந்திருந்த நிலை உருவாகியிருந்தது.

இதேசமயம், கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னைய தலைவர்களைப்போலன்றி, புலிகளை எதிர்கொள்ள முற்றுமுழுதாக இராணுவ பலத்தையே பிரயோகித்தார். வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கோ அல்லது உள்நாட்டில் அரசியல் எதிர்ப்புகளுக்கோ மசிந்துவிடாத தன்மை அவரிடம் காணப்பட்டது. இதன் விளைவாகவே, 2007ஆம் ஆண்டு கிழக்கு மாகாணம் புலிகளின் பிடியிலிருந்து மீட்கப்பட்ட அதேசமயம், படிப்படியான இராணுவ நடவடிக்கைகள் மூலம் வன்னிப் பெருநிலப் பரப்பும் புலிகளின் பிடியிலிருந்து மீட்கப்பட்டு, அவ்வியக்கம் முழு அளவில் முறியடிக்கப்பட்ட நிலை காணப்படுகிறது.

இறுதிக்கட்ட யுத்த நடவடிக்கைகள் வன்னி பெருநிலப்பரப்பில் சூடுபிடித்திருந்த சமயம், ஒருபுறம் கொடூர யுத்தமும், மறுபுறம் பாரிய மனிதாபிமானப் பிரச்னையும் தலைதூக்கியிருந்தது.

லட்சக் கணக்கானோர் முல்லைத்தீவில் இடம்பெயர்ந்து பாரிய இன்னல்களை குண்டுமாரிக்கும் இயற்கையின் பருவ மழைக்குமிடையே எதிர்கொண்டு சிக்கித் தவிக்கவேண்டிய பரிதாபநிலை ஏற்பட்டது. இறுதியாக, கடந்த மூன்று தசாப்த காலமாக ஒரு பெரும் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து, தோற்றுப்போன அணுகுமுறைகள் காரணமாக பிரபாகரனும் முல்லைத்தீவை அண்டிய நந்திக்கடல் நீரேரியோரத்தில் குண்டடிபட்டுச் சாவை எதிர்கொண்டார்.

தமது போராட்டத்தை ஆரம்பித்த வேளையில், முதல்தடவையாக ஒரு துருப்பிடித்த துப்பாக்கி தமக்கு கிடைத்தபோது மிகவும் மகிழ்ந்திருந்தாராம் பிரபாகரன். ஆனால், அவர் இறக்கும்போது அவரைச்சுற்றிவர ஆயிரமாயிரம் துப்பாக்கிகள், அவை அனைத்துமே நவீனரகமாக இருந்தபோதிலும் ஓர் அநாதையைப்போல, நந்திக்கடலோரத்தில் தலையில் சூடுபட்டுக்கிடந்த பிரபாகரனின் சடலம் பெரும் ஆச்சரியத்தையே ஏற்படுத்துவதாக இருக்கிறது.

மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தமும் முறியடிக்கப்பட்ட நிலையில், மறைந்த தமிழ்த் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அன்றொருநாள் கூறியவையே இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரை இனி நிதர்சனமாக அமையமுடியும்.


தந்தை செல்வா கூறியது: "இனி, ஈழத் தமிழரை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.'' இதுவே, இலங்கையில் தமிழரைப்பொறுத்தவரை அனைவரும் மனதுள் கூறிக்கொள்ளும் கூற்றாகவும் இருக்கிறது. ■


மலிவான விலையில்
தரமான தங்கம்
நீங்கள் விரும்பிய
டிசைன்களில்
உங்கள் நகைகளை
தெரிவு செய்யுங்கள்
சூர்யா ஜுவல்ஸ்
SURIYA JEWELS
292 High Street North Eastham
London E12 6SA
Tel: 020-8552 2224

# சமத்துவத்துடன் சமாதான ஒருமைப்பாடு, மீளமைப்பு

## இழந்த உயிர்களைத்தவிர, வடபகுதி மக்களுக்கு வேண்டிய அனைத்தையும் வழங்க ஜனாதிபதி எண்ணுகிறார்

பகவான் சிங்



மே மாத நடுப்பகுதியில் யுத்தத்தின் முடிவை இலங்கை கொண்டாடியது. ஆனால் இப்பொழுது, காயங்களை ஆற்றி, யுத்தத்தில் இடம்பெயர்ந்தோர் புனர்வாழ்வுக்கான இன்னொரு யுத்தத்துக்கு சங்கொலியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எழுப்பியிருக்கிறார். "யுத்த களத்தில் நாம் வென்றிருக்கிறோம். நாடு முழுவதிலும் சமத்துவமின்மையை ஒழிப்பதற்கும், சமாதான ஒருமைப்பாடு, மீளமைப்பு ஆகியவற்றுக்கும் அரசியல்வாதிகளான நாமும், இலங்கை மக்களும் ஒன்றிணைந்து போராடவேண்டிய நேரம் இது. (புலிகளுக்கு எதிரான) யுத்தத்தில் எமக்கு உதவியதற்கும், இப்போது யுத்தத்துக்குப் பின்னரான மீள்கட்டுமானத்தில் உதவ உறுதியளிப்பதிலும் இந்தியாவுக்கு நாம் நன்றி கூறுகிறோம்'' என்று, ஜனாதிபதியின் சகோதரர் பசில் ராஜபக்ஷ, இலங்கைக்கு நான் அந்த நெருக்கடியான நேரத்தில் சென்றிருந்தபோது அளித்த பிரத்தியேக பேட்டியில் தெரிவித்தார். வட மாகாணத்தில் மீள்குடியேற்றம், அபிவிருத்தி, பாதுகாப்பு என்பவற்றுக்கான நிறைவேற்று குழுவின் தலைவர் என்பதோடு, அவர் ஜனாதிபதியின் விசேட ஆலோசகரும் ஆவார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும், தமிழர் புகலிடங்களிலும் விவாதிக்கப்பட்டு, சர்வதேச நீதிமன்றத்திலும் அமெரிக்க நீதிமன்றிலும் வழக்கு தாக்கல்செய்யவிருப்பதாக பயமுறுத்தப்படும் மனித உரிமை விவகாரங்கள் போன்றவற்றில், 'சின்னஞ்சிறிய நாடான இலங்கையின் கையைத் திருக' முயற்சிக்கும் சில நாடுகள் குறித்து விமர்சனத்தைக் கொண்டுள்ளபோது, தனது அரசாங்கம் சர்வதேச சமூகத்திடமிருந்து எல்லா உதவிகளையும் வரவேற்கும்; ஆனால், அவர்களின் முந்தானையில் தொங்கமாட்டாது என்று பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். "பங்காளிகளை வரவேற்போம்; ஆனால், சட்டாம்பிள்ளைகளையல்ல என்ற எமது நிலைப்பாட்டில் நாம் மிக தெளிவாக உள்ளோம். எமக்கு 'றோஜன் குதிரைகள்' வேண்டியதில்லை'' என்று அவர் கூறினார்.

வவுனியா மாவட்டத்தில், உள்ளூரில் குடிபெயர்ந்தோருக்கான சிறியதும் பெரியதுமான பல முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள சுமார் மூன்று லட்சம் மக்களை மீளக் குடியமர்த்துவது என்பது மிகக் கடினமான ஓர் இலக்கு என்பதை ஒத்துக்கொள்ளும் பசில் ராஜபக்ஷ, உலகில் முன்னரெப்பொழுதுமில்லாத இராணுவ வெற்றிச் சாதனையைப் போல, இதிலும் மற்றொரு பெருவெற்றியை ஈட்டமுடியும் என்ற நம்பிக்கை தனது அரசாங்கத்துக்கு இருப்பதாக கூறினார். ஏனெனில், 2004ஆம் ஆண்டின் சுனாமி போன்ற, அநர்த்தங்களுக்குப் பின்னரான புனரமைப்பு பணிகளைக் கையாள்வதில், முன்னர்பெற்ற தேர்ந்த அநுபவம் தமக்கு நன்கே இருப்பதாக அவர் கூறினார். கொழும்பில் பெரும் பாதுகாப்பைக்கொண்ட ஜனாதிபதி செயலகத்திலுள்ள அவரது அலுவலகத்தில் அவர் அளித்த பேட்டியிலிருந்து:

**இந்தியாவுடனான நட்பைத் துறந்து, சீனாவுடன் எமது உறவை வளர்க்கமாட்டோம்**

**கலவரங்களுடனான ஓர் இலங்கையை தமிழ்நாட்டு மக்கள் விரும்பவில்லை என்பதை தேர்தலில் அளிக்கப்பட்ட தீர்ப்பு உணர்த்துகிறது**

**தகவல் தொழில் நுட்பத்தில் இந்தியா யாழ்ப்பாணத்தில் முதலீடுசெய்யவேண்டும்**

**ஒருமைப்பாட்டையும் சமாதானத்தையும் கட்டியெழுப்பும் பணியில் புலம்பெயர்ந்த தமிழர்கள் முக்கிய பங்காற்றவேண்டும்**

**கண்ணிவெடிகளை அகற்றுவதுதான் எமக்குள்ள ஒரேயொரு சவால்**

**கேள்வி: புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிவடைந்துவிட்டதா? தீவிரவாதிகள் ஒழிக்கப்பட்டுவிட்டார்களா?**

**பசில் ராஜபக்ஷ:** இரண்டு வகையான பயங்கரவாதம் உண்டு. நாட்டின் சில நிலப்பரப்பை பயங்கரவாதி தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு அரசுக்கு சவால் விடுவது ஒருவகை. மற்றையவகை, அமெரிக்காவில் செப்ரெம்பர் 11இல் நிககழ்ந்ததுபோல, தனக்கு நிலப்பரப்பு மீதான கட்டுப்பாட்டை வைத்திருக்காவிட்டாலும், தாக்குதல்களை நிகழ்த்துவது. விடுதலைப் புலிகளின் நில ஆதிக்கம் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை நாம் இப்போது பிரகடனம் செய்வோம். சிலசில இடங்களில் சிறிய அளவில் பயங்கரவாதிகள் இருக்கலாம். ஆனால், விரைவில் அதுவும் இல்லாமல் போகும். அண்மையில், ஒரு பிரிவிலிருந்து (தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச பொறுப்பாளர் கே. பத்மநாதன்) வெளியான அறிக்கை, தாம் இனி வன்முறை நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதில்லை என்று சொல்கிறது. ஆனால், பின்னர் இன்னொரு குழு, அவர் அப்படிச் சொல்வதைக் கண்டிக்கிறது. இவர்களில் எவரையுமே நாங்கள் அங்கீகரிக்கவில்லை. இராணுவத்தின் பங்களிப்பு இப்போது முடிவடைந்துவிட்டது. சமாதான ஒருமைப்பாட்டையும் அரசியல் தீர்வையும் நோக்கிய செயல்பாடுகள், இப்பொழுது அரசியல்வாதிகளான எம்மையும் இலங்கை மக்களையும் சார்ந்தது.

**கேள்வி: ஆகவே, குழந்தை இப்பொழுது உங்கள் மடியில்தான் இருக்கிறது?**

**ப. ரா:** ஜனாதிபதி மூன்று இலக்குகளை வகுத்திருக்கிறார். ஒன்று; மக்களின் மீள் குடியேற்றம். சுமார் மூன்று லட்சம் பேர் அண்மையில் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். பதினெட்டு வருடங்களுக்கு முன்னர் சுமார் ஒரு லட்சம் முஸ்லிம்கள் இடம்பெயர்ந்திருக்கிறார்கள் (யாழ்ப்பாணத்திலிருந்து விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டவர்கள்). இவர்களோடு, இந்திய வம்சாவழித் தமிழர் போன்ற வேறு சமூகத்தவர்களும், சிங்களவர்களும்கூட இடம்பெயர்ந்திருக்கிறார்கள். மீள் குடியேற்றம் என்பது இந்த மக்களை கொண்டுசென்று ஓரிடத்தில் குவித்துவிடுவதல்ல. இந்த பிரதேசங்களில் நிலக் கண்ணிகளை அகற்றும் பாரிய வேலையை நாம் மேற்கொள்ளவேண்டும். பின்னர், வீதிகள், மின்சாரம், பாடசாலைகள், வைத்தியசாலைகள், தண்ணீர் போன்றவை அடங்கிய, பெரும் உள்கட்டுமானங்களை உருவாக்கவேண்டும். பின்னர் நாம் யுத்தத்தில் சீரழிக்கப்பட்ட வடக்கை, ‘வாய்ப்புக்கான ஒரு மாகாணமாக’ ஆக்கும் பாரிய அபிவிருத்திக்கு திருப்பவேண்டும். பாதுகாப்பையும் நாம் உறுதிப்படுத்தவேண்டும். ஏனெனில், உயிருக்கும், உள் கட்டுமானங்களுக்கும் பாதுகாப்பற்ற எல்லா அபிவிருத்தியும், எமது கடும் உழைப்பை அர்த்தமற்றதாக மாற்றிவிடும். தாம் இழந்த உயிர்களைத் தவிர, வடபகுதி மக்களுக்கு, அவர்களுக்கு வேண்டிய அனைத்தையும் வழங்கவே ஜனாதிபதி எண்ணுகிறார்.

இரண்டாவது இலக்கு; வடக்கை ஜனநாயகமயப்படுத்துவது. அங்கே தமிழர்கள் சுதந்திரமான பேச்சுரிமையைக் கொண்டிருக்கவில்லை. அரசியல் பிரதிநிதித்துவம் இருக்கவில்லை. ஆக, இறுதியான அம்சம்; அதிகார பரவலாக்கல். இந்த இரு அம்சங்களையும் ஜனாதிபதி தாமே மேற்கொள்கிறார்.

**கேள்வி: எஞ்சியிருக்கும் தீவிரவாதிகளை ஒழிக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாக நீங்கள் கூறினீர்கள். ‘கே.பி’ என்று அழைக்கப்படும் விடுதலைப் புலிகளின் சர்வதேச பொறுப்பாளர் கே. பத்மநாதன் போன்ற, வெளிநாடுகளில் உள்ள புலிகளுக்கு எதிராகவும் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா?**

**ப. ரா:** இவர்கள் நிதிசேகரிப்பு, ஆயுத கொள்வனவு, போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றுடன் தொடர்புடையவர்கள். இலங்கை, இந்தியா உள்பட, வேறு பல நாடுகளாலும் தேடப்படுபவர்கள். ‘இன்ரர்போல்’ இவர்களை தீவிரமாக தேடுகிறது. கே. பி.யை மாத்திரமல்ல, மற்றையவர்களையும் பிடிப்பதற்கான நடவடிக்கைகளில் நாம் செயல்படுகிறோம்.

**கேள்வி: மாற்றமடைந்த இந்த சூழ்நிலையில், புலம் பெயர்ந்த தமிழர்கள் என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?**

**ப. ரா:** இந்த ஒருமைப்பாட்டையும் சமாதானத்தையும் கட்டியெழுப்பும் பணியில் அவர்கள் கட்டாயமாக முன்வந்து அதில் முக்கிய பங்காற்றவேண்டும். நம்பிக்கையைக்

கட்டியெழுப்புவதில் எமது பங்கை நாம் செய்வோம். ஆனால், அவர்களும் நிச்சயமாக அதில் முன்வரவேண்டும். எப்படியும், இரண்டு கைகளால்தான் கரகோஷம் செய்யமுடியும். உள்ளூரில் குடிபெயர்ந்த மக்களை அரசுசார்பற்ற தொண்டு நிறுவனங்களினதும், அரசுசார்பற்ற சர்வதேச தொண்டு நிறுவனங்களினதும் தயவில் விட்டுவிடாமல், இவர்கள் அவர்களுக்கு பண உதவி அளிக்கலாம். அரசாங்கத்துக்கூடாக செய்வதை விரும்பாவிட்டால், அவர்களே தமக்கு ஏதுவான ஒரு முறையில் அவர்களது உதவி அந்த மக்களை அடையச்செய்யலாம்.

**கேள்வி: இப்போது விடுதலைப் புலிகள் அங்கு இல்லை. வீடுகளையும் வியாபாரங்களையும் அமைக்க சிங்களவர்களும் வடக்கே செல்வார்களா?**

**ப. ரா:** நான் நினைக்கிறேன் கட்டாயமாக எவருமே; சிங்களவர்கள், முஸ்லிம்களும்கூட. அத்தோடு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள். இந்தியர்களும்கூட கட்டாயமாக முன்வந்து, யாழ்ப்பாணத்தில் தகவல் தொழில் நுட்பத்தில் முதலீடு செய்யவேண்டும். ஏனெனில், மிக உயர்வான கல்வித் தரம் அங்கு உண்டு. முன்னைய காலங்களில் பெரும்பாலான பெரிய அண்டைநாடுகள், சிறிய தமது அயல் நாடுகளை ஸ்திரமற்றதாக்குவது தமக்கு நன்மையானதென்று எண்ணின. ஆனால், இப்போதைய கொள்கை, அண்டை நாடுகளில் ஸ்திரமான அரசாங்கங்கள் இருக்கவேண்டுமென்பதே. சமாதானமும் ஸ்திரமுமான இலங்கை, இந்தியாவுக்கு - இந்திய பொருளாதாரத்துக்கு நன்மையானதே. இந்தியாவுக்கு வாய்ப்பான சந்தையாக நாம் இருப்போம்.

**கேள்வி: இலங்கையில் சீனாவின் பிரசன்னம் புதுடில்லியில் சில அசௌகரியத்தை தோற்றுவிப்பதாக தெரிகிறதே?**

**ப. ரா:** இந்தியா, பாகிஸ்தானைப்போல, சீனா வர்த்தக திட்டங்களில் அல்லது வேலை ஒப்பந்தங்களில் முதலீடு செய்துள்ளது. நாம் ஒவ்வொரு நாட்டுடனும் சுமுகமான முறையில் செயல்படுகிறோம். எல்லா விடயங்கள் தொடர்பிலும் நாம் கவனமாக இருப்போம். குறிப்பாக, பிராந்திய பாதுகாப்பு தொடர்பில் நிச்சயமாக நாம் இந்தியாவுடன் கலந்தாலோசிப்போம். இந்தியாவுடனான நட்பைத் துறந்து, சீனாவுடன் எமது உறவை வளர்க்கமாட்டோம். சீனாவும்கூட (இந்தியாவை விசாரப்படுத்தும்) அத்தகைய ஒன்றை நிச்சயமாக ஒருபோதும் முயலமாட்டாது.

**கேள்வி; பாதுகாப்பு நலன்களுக்கு அப்பால், இந்திய முதலீட்டாளர்களுக்கு ஏதாவது விசேட சலுகைகள் இருக்கின்றனவா?**

**ப. ரா:** தற்சமயம் இல்லை. முதலீடுகள் சர்வதேச சூழலுக்கு அமைவாக டொலரிலே அமைகின்றன. ஆனால், ஏற்கனவே இந்தியாவுடன் விசேட வர்த்தக ஒப்பந்தத்தை நாம் கொண்டிருக்கிறோம். இதில் மேலும் சில நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம். ஆகவே, அதில் இரு நாடுகளுக்குமே நன்மை கிட்டும்.

**கேள்வி: உங்கள் நாட்டில் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் குறித்து உங்கள் அரசாங்கம்மீது தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் சுமத்தும் குற்றச்சாட்டை எப்படி நீங்கள் எதிர்கொள்கிறீர்கள்?**

**ப. ரா:** கலவரங்களுடனான ஓர் இலங்கையை அங்குள்ள மக்கள் விரும்பவில்லை என்பதை அண்மையில் தமிழ் நாட்டில் நடந்த தேர்தலில் அளிக்கப்பட்ட தீர்ப்பு தெளிவாக உணர்த்துகிறது. இதில் மக்களின் எண்ணத்தை அங்குள்ள அரசியல்வாதிகள் விளங்கிக்கொள்வார்கள் என்றே நான் நம்புகிறேன். அவர்களே இங்குவந்து பார்க்கும்படி, ஜனாதிபதி ராஜபக்ஷ ஏற்கனவே திரு கருணாநிதிக்கும் செல்வி ஜெயலலிதாவுக்கும் அழைப்பு விடுத்திருக்கிறார். தமிழ் நாட்டுடன் எமக்கு நீண்ட தொடர்பு உண்டு. ஆகவே, அவர்கள் (தமிழ்நாட்டு அரசியல் வாதிகள்) சமாதான ஒருமைப்பாட்டில் நிச்சயமாக உதவவேண்டும். சில மேலை நாடுகள், இங்கு ஓர் ஒருமைப்பாடு தமக்கு வேண்டியதில்லை என்றவிதத்தில் நடந்துகொள்கின்றன. ஜெனிவாவில் என்ன நடக்கிறது என்பதைப் பாருங்கள் (இலங்கையில் மனித உரிமைகள் குறித்த ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழு அமர்வு).

**கேள்வி: உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் அனைவரும் ஆறு மாதங்களில் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படுவார்கள் என்று ஜனாதிபதி ராஜபக்ஷ வாக்குறுதி அளித்திருக்கிறார். இது சாத்தியமா?**

**ப. ரா:** இந்த இடங்கள் பல, விடுதலைப் புலிகளினால் மிகப்பெருமளவில் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளைக் கொண்டிருக்கின்றன. மக்களைத் தமது இடங்களுக்கு நாம் அனுப்புவதற்கு முன்னர், இந்த கண்ணிவெடிகள் முதலில் அகற்றப்படவேண்டும். இராணுவம் இதில் ஈடுபட்டுள்ளது. 21ஆம் தேதி இங்கு வந்த இந்திய தூதுக்குழு (எம். கே. நாராயணன், சிவசங்கர் மேனன்) மேலும் நான்கு கண்ணிவெடி அகற்றும் குழுக்களை தருமாறு விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டதையடுத்து நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஏற்கனவே இரண்டு குழுக்கள் இங்கு உள்ளன. வேறு சில நாடுகளும் உதவிக்கு முன்வந்துள்ளன. கண்ணிவெடிகளை அகற்றுவதுதான் ஒரேயொரு சவாலாக எனக்கு தெரிகிறது. இதைத்தவிர, வேறு பிரச்னைகள் எதுவும் இல்லை. டிசம்பர் 31ஆம் தேதி மீள் குடியமர்த்தல் முடிவடையும். அதன் பின்னர் மற்றோர் இரண்டாண்டுத் திட்டத்தை நாம் வைத்திருக்கிறோம். இது, எல்லா வசதிகளையுமே அளிப்பதற்கான ஒரு நடு தவணைத் திட்டம். இது, வெறுமனே மீள்குடியமர்த்தல் மட்டுமல்ல; பொருளாதாரத்தை வலுப்படுத்துவதும், எல்லா மட்டத்திலும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதுமான ஒரு திட்டம். இது, தமிழ்க் கட்சிகள், பல்கலைக் கழகங்கள், நிறுவனங்கள், உயர் தொழில் நிபுணர்கள் உள்ளிட்ட, மக்களின் ஆலோசனையுடன் நாமே ஏற்படுத்தும் திட்டமாக இருக்கும். ■

சுதந்திரமாக உங்கள் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ள
எமது சேவைகள் உங்களுக்கு வழிகாட்டும்!

Personal & Corporate Advice
Retirement planning
Mortgage arrangement service and Financial re-engineering
Life assurance and protection planning
Mortgage Conveyancing
Investment planning
Key event advisory service

**Debt Problems?**
call us for **confidential** and **expert** advice



**Free Consultation**
to solve your financial problems

# Mortgage 4US
**Independent Financial Advisers**

**Karthigesu Sivanesan** MBA BSc Eng FPC
Independent Financial Adviser
**Mobile:** 07775 578 552

**Tim Drakes** MSci CEFA CEMAP
Independent Financial Adviser
**Mobile:** 07515 891 295

**020 7386 0924**
**www.mortgage4usltd.com**
6 Barton Road, London W14 9HD

FSA

Mortgage 4US Ltd (FSA No.478944) is an appointed representative of Unleash Advice Partnership Ltd (FSA No. 473157) which is authorised and regulated by the Financial Service Authority.


நேரில் பார்த்து | வவுனியா 'ஐடிபி' முகாம்

## வயிற்றுப் பசி தீர்க்க

# வழிமேல் விழிவைத்து பார்த்திருக்கும் மக்கள்

**யுத்தத்தின் வெற்றியை அரசாங்கம் கொண்டாடினாலும் இங்கு நிலவும் மனித அவலம் எவர் மனதையும் உறுத்திவிடுவதற்கு அதிகநேரம் வேண்டியதில்லை**

பகவான் சிங்

## முப்பது ஆண்டுகால யுத்தம், பெருமைமிக்க யாழ்ப்பாணத்து தமிழன் கையேந்தி நிற்கும் நிலைக்கு அவனைக் கொணர்ந்துவிட்டது

பஸ் வண்டிகளையும், அவற்றிலிருந்த வெள்ளைக் காரர்களையும் அந்த முதியவர்தான் முதலில் கண்டார். அடுத்த கணமே, ஆண்களுக்கொன்று, பெண்களுக்கொன்றாக இரண்டு 'கியூ'க்களை உருவாக்கி, ஆண்களுக்கான 'கியூ'வில் அவர் முதலாவதாக நின்றார். பிஸ்கட், பால்மா, ஆடைகள் ஆகியவற்றுடன் வரும் மேலைநாட்டு உதவிவழங்குவோர் சிலரை அந்த பஸ் வண்டிகள் கொணர்வதாக அவர்கள் நம்பினார்கள். ஆனால், அவை வவுனியாவில், யுத்தத்தால் உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களுக்கான (ஐடிபி) முகாம்களைக் காண்பிப்பதற்காக, இராணுவம் அழைத்துவந்த பத்திரிகைக்காரர்களைக் கொணரும் பஸ்களாக இருந்தன. மே மாத இறுதியில், வவுனியாவில் இந்த முகாம்களை அரசாங்கம் எவ்வாறு பேணுகிறது என்பதைக் காண்பிப்பதற்காக, இலங்கை அரசாங்கம் அழைத்துச் சென்ற வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களில் நானும் ஒருவன். சுமார் மூன்று லட்சம் மக்கள் இந்த முகாம்களில் இருக்கிறார்கள்.

"நாம் பசியோடு இருக்கிறோம். என்னிடம் ஒரேயோரு சாரமும் ஒரு பெனியனும்தான் இருக்கின்றன. நீங்கள், யாரோ உதவி வழங்குபவர்களாக்கும் என்று நாம் நினைத்தோம்'' என்றார், 74 வயதான சின்னத்தம்பி சிவசிதம்பரம். தங்களின் 'கியூ'வுக்கு விளக்கமளித்தவர், பொக்கைவாய்ச் சிரிப்பில் ஏமாற்றத்தை மறைக்க பெரிதும் முயன்றார். முப்பது ஆண்டுகால யுத்தம், பெருமைமிக்க யாழ்ப்பாணத்து தமிழன் கையேந்தி நிற்கும் நிலைக்கு அவனைக் கொணர்ந்துவிட்டது. ஆனால், இப்போது அந்த முதியவர் அந்த கௌரவ பகட்டுகளையெல்லாம் எண்ணி கவலைப்படவில்லை. "பயங்கர அந்த யுத்தத்தில் தப்பிவிட்டோம் என்பதில் நாம் சந்தோஷமே அடைகிறோம். (பிரபாகரன் கடைசியில் வீழ்ச்சியுற்ற) வெள்ளைமுள்ளிவாய்க்கால் கடைசி யுத்த அரங்கிலிருந்து நாம் தப்பியோடிய வேளையில், என்னைச் சுற்றிலும் சடலங்களையும், இருபுறமுமிருந்து வந்த ஷெல் வீச்சில் காயமுற்று மக்கள் இறப்பதையும் நான் பார்த்தேன்'' - என்று அவர் கூறினார்.

தனது மகனையும் மகளையும் கண்டுபிடிப்பதற்கு அன்பான இந்த பத்திரிகையாளர் உதவுவாரா என்று, அந்த முதியவர் கேட்டார். ஜனவரியில் முல்லைத்தீவு யுத்தத்தில் ஷெல் தாக்குதலில் காயமுற்று மகன் வவுனியா அரசாங்க மருத்துவமனையிலும் மகள் மன்னார் மருத்துவமனையிலும் உள்ளனர்.

யுத்தத்தில் இடம்பெயர்ந்தவர்களை தங்கவைக்க வவுனியாவில் இலங்கை அரசாங்கம் அமைத்துள்ள கொத்தணி நலன்புரி கிராமங்களில் அநேகமாக ஒவ்வொருவருமே இத்தகைய கொடூரமான கதைகளைச் சொல்வார்கள். முகாம்களில் தங்கியிருப்பவர்களில் 30 வீதமானோர் சிறுவர்கள் என அரசாங்கம் மதிப்பிடுகிறது. ஒவ்வொருவரும் உணவு, நீர், மலசலகூட பற்றாக்குறைபற்றி முறைப்பட்டாலும், புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இராணுவத்தால் கொண்டுசெல்லப்பட்ட தமது இளம் பிள்ளைகளின் கதி என்னவாகுமோ என்ற அச்சத்தை பலர் வெளிப்படுத்தினார்கள்.

"பத்து வருடங்களுக்கு முன்னர், கட்டாய ஆள்சேர்ப்பில் ஒருசிறிதுகாலம் மட்டும் விடுதலைப்புலிகளில் இருந்தவர் எனது கணவர். விடுதலைப்புலிகளுடன் ஒரு நாள் தொடர்பிருந்தால்கூட அதனைத் தெரியப்படுத்தாதவர்களுக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று இராணுவம் அறிவித்தபோது, அவர் தாமாகவே முன்வந்து அவர்களுக்கு இதனைத் தெரிவித்தார். அவர் சென்று இப்போது 11 நாள்கள் ஆகிவிட்டன; எனக்கு ஒரே பயமாக இருக்கிறது'' - என்றார் மணிமேகலை மணியம்(34). "எனது மூன்று குழந்தைகளுடன் இந்த முகாமில் நான் கஷ்டப்படுகிறேன். கடைசிப்பிள்ளைக்கு ஒன்றரை வயது. எமக்கு போதிய உடைகள் இல்லை'' - என்று அழுதவண்ணம் சொன்னார் அவர்.

யுத்தத்தின் முடிவை இலங்கைத் தீவு கொண்டாடினாலும், இங்கு நிலவும் மிகப்பெரும் அளவிலான ஒரு மனித அவலத்தை, இத்தகைய துன்பியல் கதைகள், பாரிய இந்த முகாம்களின் புழுதி கிளம்பும் வீதிகளினூடே நடக்கையில், இங்கு வரும் எவர் மனதிலும் உறுத்திவிடுவதற்கு அதிக நேரம் வேண்டியதில்லை.

மலசலகூடங்கள் இங்கு மிகவும் போதாதவையாகவே இருக்கின்றன. தண்ணீர் விநியோகத்தைப்பற்றி, அதன் தரத்திலும், அளவிலும் பெரிதும் முறைப்பாடுசெய்கிறார்கள். "எமக்கு இரண்டு வாளி தண்ணீர் மட்டும்தான் கிடைக்கிறது. அதுவும், சிலசமயங்களில் மஞ்சள் நிறமாக இருக்கிறது. பலருக்கு காய்ச்சலும் வயிற்றோட்டமும் இருக்கிறது'' என்கிறார் ஜோதி சிவநாதன்.

யுத்தத்தில் கொடூரமாக பாதிப்புக்குள்ளாகாத எவருமே இந்த முகாம்களில் இல்லை என்றே தெரிகிறது. கணவனை இழந்தவர்கள், மனைவியை இழந்தவர்கள், பொய்க்கால்களை உடையவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அத்துடன், பெற்றோர்களை இழந்த பல அநாதைக் குழந்தைகள் உறவினர்களுடன் இருக்கிறார்கள். "விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டை உடைத்து நாம் ஓடிவந்த இரவில், தாய் தவறிவிட்டதிலிருந்து, இப்போது சுமார் ஒருவாரமாக இந்த இரண்டு வயது பெண் குழந்தை எம்முடன்தான் இருக்கிறது.'' - தனது சொந்தக் குழந்தைகள் இருவருடன், நெரிசலான அந்த இடம்பெயர்ந்தோர் முகாமின் கூடாரமொன்றில் அவதிப்படும் சின்னராசா ஜெகஜீவன் (31) கூறினார்.

இந்த கொடூர திருவிளையாடலில் அவரது மனைவி மைவிழி, அவர்கள் தப்பி வெளிப்படுவதற்கு சற்று முன்னதாகத்தான் ஷெல் ஒன்றினால் தாக்கப்பட்டு இறந்தார். இருப்பினும், அரசாங்கம் தைரியத்துடன் செயல்படுகிறது. அனைத்தும் கட்டுப்பாட்டில் இருப்பதாக வற்புறுத்தும் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி சார்ள்ஸ், குறைபாடுகள் விரைவில் நிவர்த்திக்கப்படும் என்றும் சொல்கிறார்.

முகாம்களில் தங்கியிருக்கும் அனைவரையும் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விதித்துள்ள ஆறுமாத காலக்கெடு எப்படியும் சாத்திய

### ஆனால், இப்போது அந்த முதியவர் அந்த கௌரவ பகட்டுகளையெல்லாம் எண்ணி கவலைப்படவில்லை



தந்தை ஷெல் தாக்குதலில் இறந்துவிட, கடந்த ஆண்டு எறிகணைத் தாக்குதலில் இழந்த காலுடன், மனைவியையும் மூன்று பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு தப்பி வந்த கணேஷ் கதிர்காமநாதன்

மானதே என்பதில் உறுதியான நம்பிக்கையுடனும் அவர் இருப்பதாக தெரிகிறது. அதுவரை இந்த மக்கள் இந்த முகாம்களிலேயே அடைபட்டிருப்பார்கள்.

ஆண்களும் பெண்களுமாக ஆயிரக்கணக்கில் இந்த முகாம்களில் நெரிசலாக அடைபட்டிருக்கும் இம் மக்களுக்கு விடுதலைப் புலிகளின் தோல்வியும், அதன் தலைவரது மரணமும் அவ்வளவு ஒரு பொருட்டாவதாக தெரியவில்லை. இது ஆச்சரியமானது. ஏனெனில், இலங்கை இராணுவம் கனரக ஆயுதங்களாலும், வான் தாக்குதல்களாலும் கடும் தாக்குதல்களை மேற்கொண்டவேளைகளில், புலிகளின் பின்னால் ஊர்விட்டு ஊர் சென்றவர்கள் இவர்கள். இராணுவத்திடம் மன்னார் வீழ்ச்சியுற்று, விடுதலைப் புலிகள் அங்கிருந்து வாபஸ்பெற்றபோது, இராணுவ கட்டுப்பாட்டில் இருப்பதைவிட, தமது 'பொடியன்களு'டன் செல்வது பாதுகாப்பானது என்று, அவர்களை நம்பி வந்தவர்கள் இவர்கள்.

"புலிகள் சண்டையிட்டு தோற்றுவிட்டார்கள். நாம் எல்லோரும் அதைப் பார்த்தோம். காயப்பட்ட மக்களை வீதிகளில் இரத்த வெள்ளத்தில் சாகவிட்டுவிட்டு, இறந்தவர்களைப் புதைக்கவும் நேரமின்றி நாம் வந்தோம். இப்போது, மறுபடி எம் வாழ்வைத் தொடர்வோம்.'' - புலிகளின் கோட்டையாக விளங்கி, பாரிய உயிரிழப்புடன், கடைசியில் இராணுவ வயப்பட்ட புதுக்குடியிருப்பு வாசி, விக்னேஸ்வரன் சபாரத்தினம் கூறினார்.

"இனியாவது நாம் இரண்டு அரசாங்கங்களுக்கு கட்டுப்படாமலிருப்போம். விடுதலைப் புலிகளின் அரசாங்கம் ஒன்று; கொழும்பு மற்றையது.'' - இந்த கொத்தணி முகாம்கள் நான்கிலும் மாணவர்களுக்கு வகுப்புக்களை நடாத்துவதில் சுறுசுறுப்பாக இயங்கும் 44 வயதான ஆசிரியர் கூறினார்.

இந்த முகாம்களில் 5 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் இருப்பதாக மதிப்பிடப்படுகையில், 200 ஆசிரியர்கள் குழுக்களாக, முதலாம் தரத்திலிருந்து 12ஆம் தரம்வரை இங்கு வகுப்புகளை நடாத்துகிறார்கள்.

"ஆசிரியர்களான எமக்கு கடந்த நான்கு மாதங்களாக சம்பளம் கிடைக்கவில்லை. அரசாங்கம் யுத்தத்திலீடுபட்டிருந்தது. நாமும் ஒரு யுத்த களத்திலிருந்து இன்னொரு யுத்த களத்துக்கு ஓடிக்கொண்டிருந்தோம். இப்போது, அடுத்த வாரம் எமது சம்பளம் கிடைக்கும் என்று சொல்கிறார்கள்'' - என்றார் அந்த ஆசிரியர். ஒரு சோடி ஆடை மாத்திரம்தான் உள்ளபோது, சம்பளத்தில் முதல்வேலையாக உடுப்பு வாங்கவேண்டும் என்றார் அவர்.

யுத்தத்தில் இழந்தவற்றை எண்ணி சிந்தித்துக்கொண்டிராது, யுத்தத்தில் பாதிப்புற்ற தமது வாழ்வை மறுசீரமைத்துக்கொள்வதில்தான் மக்கள் அதிக ஆவலாக இருக்கிறார்கள் என்று அவர் வற்புறுத்தலுடன் கூறியபோது, அங்கு கூடியிருந்த பெருவாரியானோர் ஆமோதித்து, தலையை அசைத்தார்கள். ■


Nalli®
ES0000301
Nalli®



நேரில் பார்த்து | அம்பேபுஸ புனர்வாழ்வு முகாம்

# சொல்ல முடிந்த ஒரு கதை

**அன்றும் இன்றுமான தொலைவுச் சிந்தனைகளில் அவன் கண்கள் மங்கின**

பகவான் சிங்

என்னுடன் பேசிக்கொண்டிருந்த சுமார் 50க்கு மேலான நிமிடங்களில் ஒரேயொரு தடவைதான் அந்தச் சிறுவன் சிரித்தான். அன்றி, அவன் பதற்றமோ அல்லது எதையும் மறைக்கவுமோ முயலவில்லை. ஒருவேளை, தூரத்து இந்தியாவிலிருந்து சென்று நான் பலவற்றையும் விசாரித்துக்கொண்டிருந்தபோது, தன்னை அப்படி விறைப்பாகக் காண்பிப்பதை தனக்கு ஒரு பாதுகாப்பு கவசமாகவும் அவன் நினைத்திருக்கலாம். அல்லது, வாழ்வு அவனுக்கு சிரிப்பு எதனையும் விட்டுவைக்காதபோது, நேர்மையான ஒரு தோற்றமாகவும் அது இருக்கலாம். பதினெட்டு வயதான கணேசலிங்கம் தயாளனை தமிழீழ விடுதலைப்புலிகள் தம்முடன் சேர்த்துக்கொண்டபோது அவனுக்கு வயது 12 மட்டுமே. நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் அவன் ஒரு கரும்புலியாக 'பதவி உயர்வு' பெற்றபோது, தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்காகவும் தமிழீழத்துக்காகவும் தனது உயிரைத் துறக்க சபதமிட்டான்.

கடந்த மூன்று தசாப்தங்களில் ஒரு லட்சம் பேரைப் பலிகொண்டதாக மதிப்பிடப்படும் இந்த குரூர யுத்தத்தில், நூற்றுக்கணக்கான இளம் தயாளன்கள் அங்கு வெளிப்பட்டிருக்கலாம். ஆக, ஒரு சிலர் மட்டுமே உயிருடன் வாழ்ந்து, தமது கதைகளைச் சொல்லும் விதத்தில் தம்மை விடுவித்து வெளியேவரும் வாய்ப்பையும் துணிச்சலையும் பெற்றார்கள்.

எனினும், தயாளன் இன்னமும் துயரம் நிறைந்து, ஒரு தனித்துவமாகத்தான் தெரிகிறான். வவுனியாவிலிருந்து சுமார் 4 கி. மீ. தொலைவிலுள்ள தமது பண்டாரிகுளம் கிராமம் இராணுவத்தின் ஷெல் தாக்குதலுக்கு உள்ளானபோது, அப்போது இரண்டு

**குழந்தையாகவே எனது பெற்றோரை இழந்துவிட்ட நான், ஒருபோதுமே ஒரு குடும்ப பாசத்தை தெரிந்திருக்கவில்லை**

வயதாகவிருந்த அவனின் பெற்றோர் இருவருமே அந்த ஷெல் தாக்குதலில் இறந்துபோனதிலிருந்து இத் துயரம் ஆரம்பித்தது.

சில வருடங்கள் குழந்தையை அம்மம்மா வளர்த்துவந்தார். பின்னர், விடுதலைப் புலிகள் பொறுப்பேற்று வன்னியில் செஞ்சோலை அநாதை இல்லத்தில் அவனைச் சேர்த்தனர். தயாளன் அங்கு சுமார் பத்து ஆண்டுகள், ஏனைய அநாதைச் சிறுவர்களுடன் சேர்ந்து கற்று, விளையாடினான். அவனுக்கு 12 வயதானபோது கடமைக்கான அழைப்பு வந்தது.

“நான் தொடக்கத்தில் மன்னாரில் புலனாய்வுப் பிரிவில் அமர்த்தப்பட்டேன். பின்னர், சிறிதுகாலம் ஆயுத நகர்த்தலிலிருந்து, அதன் பின்னர் 2007ஆம் ஆண்டு டிசம்பரில் மன்னார், நொச்சிக்குடா யுத்தத்தில் நேரடியாக, தீவிரமாக ஈடுபட்டேன். மன்னாரிலிருந்து விடுதலைப் புலிகள் வாபஸாகி, வன்னிக்கு நகர ஆரம்பித்தாலும், கைகளிலும் கால்களிலும் நான் காயமுற்றேன்.'' கொழும்பிலிருந்து சுமார் 60 கி. மீ. கிழக்கே அம்பேபுஸவில், முன்னாள் போராளிச் சிறுவர்கள் புனர்வாழ்வு நிலையத்தின் வெறுமையான வகுப்பறை ஒன்றில் அமர்ந்துகொண்டு, தயாளன் இவற்றை நினைவுகூர்ந்தான். 17 தொடக்கம் 25 வயதுவரையான 54 ஆண்களும் 40 பெண்களும் இந்த நிலையத்தில் இருக்கிறார்கள். இவர்கள் ஒருசில நாளிலிருந்து, ஓரீர் ஆண்டுகள் அல்லது அதற்கும் மேலாக யுத்தத்தில் பங்களித்தவர்கள்.

“கரும்புலிகளுக்கு வகுப்புக்களை நடாத்திய அச்சுதன் மாஸ்ரர், தற்கொலைப்படையில் நான் சேர்ந்துகொள்வதற்கு எனக்கு உந்துதலளித்தார். ஏற்கனவே குழந்தையாகவே எனது பெற்றோரை இழந்துவிட்ட நான், ஒருபோதுமே ஒரு குடும்ப பாசத்தை தெரிந்திருக்கவில்லை. தற்கொலைத் தாக்குதல்களுக்கான மன தைரியத்தை வளர்க்கும் விதத்தில், வகுப்புகள் தியானம், யோகாசனம் ஆகியவற்றையும் கொண்டிருந்தன. ஒரு கரும்புலியாக மாறி, இலட்சியத்துக்காக உயிரைத் தியாகம்செய்ய தயாராகியதில், நான் பெருமையே கொள்கிறேன்.'' - அன்றும் இன்றுமான தொலைவுச் சிந்தனைகளில் அவனது கண்கள் மங்க, அவன் கூறினான்.

2008 ஜனவரியில் அவன் கரும்புலியில் சேர்க்கப்பட்டபோது, நான்கு மாதங்களின் பின்னர் அவனது ஜீ.சி.ஈ. சாதாரணதர பரீட்சை முடிவுகள் வந்தன. ஒரு தற்கொலைக் குண்டுதாரியோ அல்லது புலனாய்வில் செயல்படும் ஒருவரோ, பொதுமக்களிடையே பழகுவது முக்கியமானது என்பதால், மன்னார் பாடசாலையில் அச்சிறுவன் கல்வியைத் தொடர விடுதலைப் புலிகள் விரும்பினர். பரீட்சை முடிவுகள் சிறுவனைச் சஞ்சலத்துக்குள்ளாக்கின. தாக்குதலுக்குச் சென்ற நண்பர்கள் ஒருபோதுமே திரும்பியிராதபோது, அவனது ஈழ தீர்மானம் ஆட்டம்கண்டது.

“பத்து பாடங்களில் ஆறு பாடங்களில் நான் ‘ஏ’ (75 - 100) தரத்தைப் பெற்றேன். ஓர் எதிர்காலத்தைப் பற்றி சடுதியாக சிந்திக்க ஆரம்பித்த நான், சாவது நன்மையானதுதானா என்று எண்ணினேன்.'' ஓர் இலக்கை எப்படி நிர்மூலமாக்குவது என்பதுபற்றிய கரும்புலிப் பயிற்சி 2008 ஜூனில் முடிவடைந்தது. வவுனியா மகா வித்தியாலயத்தில் தனது உயர்தர கல்விக்காக அநுமதிக்கப்பட்ட தயாளன், அவனது தற்கொலைத் தாக்குதலுக்கான அறிவுறுத்தல்களுக்காக காத்திருக்கும்படி பணிக்கப்பட்டான்.


சாதாரண ஒரு பாடசாலை மாணவனைப்போல பாசாங்கு செய்துகொண்டு, பாடசாலை கிரிக்கெட் குழுவில் எல்லா துறைகளிலும் ஆற்றல்பெற்ற ஒரு வீரனாக மகிழ்ந்துகொண்டிருந்தபோது, அவனது திடம்பெற்ற நடத்தை உள்ளூர் பொலிசாரை விளிப்படையச் செய்திருக்கவேண்டும். கடந்த ஆண்டு நவம்பரில் ஒருநாள் பிற்பகல், பாடசாலைக்கு வெளியே அவன் புலனாய்வுப் பிரிவினரால் நிறுத்தப்பட்டான்.

“எனது கழுத்தில் தொங்கிய சயனைட் குப்பியையும் ஷேட்டின் உள்ளேயிருந்த பிஸ்டலையும் பொலிசார் கண்டுபிடித்ததை, எனது சகபாடிகள் நம்பவியலாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கொழும்பு குற்ற புலனாய்வு அறையில் சிறிதுகாலம் வைத்திருந்து பின்னர், இந்த புனர்வாழ்வு நிலையத்துக்கு என்னை மாற்றினார்கள்.''

இந்த நிலையங்களில் குறைந்தது ஒரு வருடமாவது இருக்கவேண்டுமென்பதை முன்னாள் தீவிரவாதிகள் அனைவருக்கும் அரசாங்கம் ஒரு கட்டாயமாக விதித்துள்ளது. நாடு முழுவதிலும் வெவ்வேறு இடங்களில் இத்தகைய ஆறு நிலையங்கள் உள்ளன. இங்கு இவர்கள் தையல், மரவேலை, பழுதுபார்த்தல், ஒட்டுவேலை போன்ற பல தொழில்சார் ஆற்றல்களில் தம்மை மேம்படுத்திக்கொள்வதோடு, தாய்மொழியான தமிழுடன், ஆங்கிலம், சிங்களம் ஆகியவற்றிலும் கலந்துரையாடும் ஆற்றலையும் பெறுகின்றனர்.

“எனக்கு இங்கு இன்னமும் ஆறு மாதங்கள் இருக்கின்றன. அதன்பின்னர் நான் விடுவிக்கப்படுவேன் என்றே நான் நம்புகிறேன். நான் தொடர்ந்து படிக்கவேண்டும். அநேகமாக, பொறியியல் துறையில் படிக்கலாம் என்று எண்ணுகிறேன். மற்றையவர்கள் திரும்பிச்செல்ல அவர்களுக்கு பெற்றோர்கள் இருக்கிறார்கள்; வீடு இருக்கிறது. நீங்கள் எனக்கு ஒரு வீடு பார்ப்பீர்களா?'' இந்த சுமார் ஒரு மணிநேரத்தில் முதன்முதலாக தயாளன் சிரித்தான். பின்னரும் அந்தச் சிறுவனில் சோகமே படர்ந்துகொண்டது. ■

**ஒரு கரும்புலியாக மாறி, இலட்சியத்துக்காக உயிரைத் தியாகம்செய்ய தயாராகியதில் நான் பெருமையே கொள்கிறேன்**



இந்தியா

# ராஜீவ் காந்திக்குப் பின்னர் உறுதியான ஓர் அரசு

## தேர்தலில் காங்கிரஸ் கட்சி வலுவாக தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்டுள்ளது

டி. ஐ. ரவீந்திரன்

உலகத்தின் மிகப்பெரிய ஜன நாயக தேர்தல் என்று பெயர்பெறுவது இந்திய தேர்தல். ஒரு மாதகாலம், கட்டம் கட்டமாக, நாட்டின் ஒவ்வொரு பகுதிகளிலும் இத் தேர்தல் நடந்தது. ராஜீவ் காந்தியின் மரணத்துக்குப் பின்னர் நடந்த பல தேர்தல்களில், இதில்தான் மக்கள் ஏறக்குறைய தெளிவான தீர்ப்பை அளித்திருக்கிறார்கள். காங்கிரஸ் தனது நிலையை மறுபடியும் மிக வலுவாக ஸ்திரப்படுத்திக்கொண்டுள்ளது. எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா, திசை தவறி, தரைதட்டிய கப்பலைப் போல 'என்ன நடந்தது, ஏன் நடந்தது' என்று தெரியாத நிலையில் ஸ்தம்பித்துப்போயிருக்கிறது. நாட்டின் மூன்றாவது பெரிய சக்தி என்று தங்களை வர்ணித்துக்கொள்ள விரும்பும் கம்யூனிஸ்டுகளுக்கு மிகப்பெரிய அடி விழுந்திருக்கிறது. மாநிலக் கட்சிகளில் ஒரு சில கட்சிகளைத் தவிர, மற்றைய அனைத்தும் மண்ணைக் கவ்வியிருக்கின்றன.

நிலைமையை சரியாகக் கணிக்கத் தவறிய காங்கிரசின் முன்னாள் கூட்டாளிகளான லாலு பிரசாத் யாதவ், ராம் விலாஸ் பஸ்வான், முலயாம் சிங் ஆகியோரும், மற்றும் சிலரும் தலையில் 'கை' வைத்து உட்கார்ந்திருக்கிறார்கள். எதிர்க் கூட்டணியான தேசிய ஜனநா

காங்கிரசின் தந்தரம், திட்டமிடும் ஆற்றல், அதிகாரபலம் போன்ற எதற்கும் பதில் ஆயுதம் பி.ஜே.பி வசம் இருக்கவில்லை

யக முன்னணியைச் சேர்ந்தவர்கள் பழையபடி 'மதசார்பின்மை' முகமூடியைக் கையில் எடுக்கலாமா என்று தீவிரமாக ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள். தேர்தல்களின் முடிவுகள் இவ்வாறு இருக்கும் என்று ஆய்வு நடத்தி முடிவு சொன்னவர்களில் 'சிஎன்என்', 'ஐபிஎன்'ஐத் தவிர மற்றையவர்கள், எதனால் தங்களால் முடிவுகளை சரியாகக் கணிக்க முடியவில்லை என்பதை மற்றொரு நிபுணர்குழுமூலம் விளக்கமளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் நடந்தது என்ன? இதை விவரித்தால் விறுவிறுப்பான நாவலைப்போல ஒரு நூலே எழுதலாம். ஓர் அரசை எப்படி நிறுவுவது அல்லது மக்கள் அதனைத் தேர்ந்தெடுக்கவைப்பது எப்படி என்பது அதில் முதல் பாகமாக இருக்கும். இரண்டாவது பாகத்தில் வெல்லமுடியாத இடங்களில் எப்படி வெற்றியை உருவாக்குவது என்பதைப்பற்றிய சுவாரஷ்யமான விஷயங்கள் அடங்கியிருக்கும். இதன் ஆசிரியர் குழுவைக் 'காங்கிரஸ் செயற்குழு' என்று குறிப்பிடலாம். நூலின் மேற்பார்வை என்னும் இடத்தில் சரியான நேரத்தில் தேர்தல் ஆணையராகப் பொறுப்பேற்ற நவீன் சாவ்லா என்று குறிப்பிடலாம்.

நாட்டின் ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒவ்வொரு வியூகம் என்ற அடிப்படையில் காங்கிரஸ் காய்களை நகர்த்தியது. உத்தரப் பிரதேசம் 80 ஆசனங்களைக்கொண்ட மிகப்பெரிய மாநிலம். இதில் தலைகீழாக நின்றாலும் காங்கிரசுக்கு 8 இடங்களுக்கு மேல் கிடைக்காது என்று முலயாம், அஜீத், மற்ற மாநிலக் கட்சிகள் நினைத்தன. இதனாலேயே முலயாமோடு காங்கிரஸ் கூட்டு சேர முடியவில்லை. ஆனால், காங்கிரஸ் கடந்த தேர்தலைவிட 13 இடங்கள் அதிகமாக, 21 இடங்களைப் பெற்றது. அதேசமயம் முலயாம் கட்சி 12 இடங்களை இழந்து, 23 இடங்களை மட்டுமே பிடித்தது. பிரதம மந்திரியாகும் கனவுகளுடன் நம்பிக்கையோடு களம் இறங்கிய பகுஜன் சமாஜ்வாதி கட்சித் தலைவி மாயாவதிக்குக் கிடைத்தது 20 இடங்கள். காங்கிரசுக்கு இவ்வாறான இடங்கள் கிடைக்கும் என்று எந்தவிதமான அடையாளங்களும் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ யாருக்கும் தெரியவில்லை. ஆனாலும், காங்கிரஸ் இரட்டை எண்களை எட்டியது. மின்னணு வாக்கு இயந்திரங்களை மாயாவதி குறைகூறுகிறார். இதனை, நொந்துபோய் பதுங்கி இருக்கும் பா.ஜ.க. ஆதரிக்கவில்லை. எப்படியாவது எதிர்காலத்திலேனும் காங்கிரஸ் பார்வை பெற்று, மந்திரியாகும் கனவிலுள்ள முலயாம், இந்தக் குற்றச்சாட்டு பற்றி எதுவும் கூறவில்லை.

அடுத்த பெரிய மாநில மான மகாராஷ்டிராவில், சிவசேனாவின் தலைவர் பால் தாக்கரேயின் உறவின

தமிழ்நாட்டில் மக்கள் 'ஆதரவை' பணத்தின்மூலம் உறுதிசெய்த காட்சிகள் அனைவரும் அறிய பல இடங்களிலும் அரங்கேறின

ஜனாதிபதி பிரதீபா பட்டீலுடன் புதிய அமைச்சரவை



ரான ராஜ் தாக்கரேயை காங்கிரஸ் பயன்படுத்திக் கொண்டது. பல இடங்களில் சிவசேனா, பா.ஜ.க. வாக்குகளைப் பிரித்து, அந்தக் கூட்டணி படுதோல்வியடைய ராஜ் தாக்கரேயின் கட்சியான, மகாராஷ்டிர நலநிர்மாண கட்சி காரணமாக இருந்தது.



மேற்கு வங்கத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்த திரிணமூல் காங்கிரசைப் பிரித்து, தங்களோடு சேர்த்துக் கொண்ட காங்கிரஸ் கட்சி, அதற்கான பலனை அடைந்தது. கம்யூனிஸ்டுகள் படுதோல்வியடைந்து 15 இடங்களைப் பிடித்தனர். இரண்டு காங்கிரசும் சேர்ந்து 25 இடங்களைப் பிடித்தன.

ஆந்திராவில் 42 இடங்களில், காங்கிரஸ் 33 இடங்களைப் பிடித்தது. தேர்தலுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு கட்சி ஆரம்பித்த சிரஞ்சீவியைப் 'பயன்படுத்தி' வாக்குகளைக் கனகச்சிதமாகப் பிரித்த காங்கிரஸ், தெலுங்கு தேசத்தை மண்கவ்வவைத்தது.

தமிழ்நாட்டில் நடிகர் விஜயகாந் இதே போன்ற ஒரு மாபெரும் 'உதவியை'க் காங்கிரசுக்குச் செய்தார். பெரும் பின்னடைவைச் சந்திக்கும் என்று எல்லோருமே ஒரே குரலில் கூறிய திமுக-காங்கிரஸ் கூட்டணி, 40 இடங்களில் 28 இடங்களில் வெற்றிபெற்றது. கண்டிப்பாக 6 இடங்களைப் பிடிக்கும் என்று கணிக்கப்பட்ட பா.ம.க. ஓர் இடத்தில்கூட வெற்றிபெற முடியாமல் தலைகுப்புற கவிழ்ந்தது.

ஒரிசாவில் பாரதிய ஜனதா கூட்டணியில் இருந்த பிஜு ஜனதா தள் முதலில் விலகியது. காந்தமாலில் நடந்த சம்பவங்களின் முழுப் பழியையும் பாரதிய ஜனதாமீது சுமத்தி அதன் பயனை 14 இடங்களில் அறுவடை செய்தது. கிறிஸ்தவ மிஷனரிகள் ஒன்றுசேர்ந்து பா.ஜ.க. எப்படியாவது தோற்கவேண்டும் என்று பணபலம், ஆள்பலம் ஆகியவற்றுடன் பணிபுரிந்ததாகவும், 'சோனியா உள்ளிட்ட கத்தோலிக்க தலைவர்களின்' ஆதரவில் மற்ற கட்சிகள் இயங்கியதாகவும் பா.ஜ.க. கூறுகிறது. பீகாரில், ஜனதா தள் (யு) வேண்டா வெறுப்புடன் பா.ஜ.க.வுடன் சேர்ந்து 'பணியாற்றியது.'

நிதிஷ் குமார், காங்கிரஸ் பக்கம் சாயலாம் என்று அனைவரும் அறியுமாறு நடந்துகொண்டு, மறுபடியும் பா.ஜ.க. கூட்டணியில் இருப்பதாக அறிவித்தார். மற்றைய இடங்களில், அதாவது பிற மாநிலங்களில் பா.ஜ.க. ஓரளவு வெற்றிபெற்றாலும், காங்கிரசின் தந்தரம், திட்டமிடும் ஆற்றல், அரசு அதிகாரபலம் போன்ற எதற்கும் பதில் ஆயுதம் அதன் கைவசம் இருக்கவில்லை. பணம் இந்தத் தேர்தலில் 'விளையாடியது' போல மற்ற தேர்தல்களில் விளையாடியதாக எவருமே இதுவரையில் தெரிவிக்கவில்லை. குறிப்பாக தமிழ்நாட்டில். மக்கள் 'ஆதரவை'ப் பணத்தின்மூலம் உறுதிசெய்த காட்சிகள், அனைவரும் அறிய பல இடங்களிலும் அரங்கேறின. தவிர, இலங்கைத் தமிழர் பிரச்னையில் காங்கிரஸ் கூட்டணிமீது உருவான அதிருப்தி அலை, தேர்தலை அவ்வளவாகப் பாதிக்கவில்லை என்பதையும் உணரமுடிந்தது. ஆயினும் தங்கபாலு, மணிசங்கர் ஐயர் போன்ற காங்கிரஸ் தலைவர்கள் சிலர் தோற்றதும், ப. சிதம்பரம் சர்ச்சைக் குரியவிதத்தில் வென்றதும் தமிழகத்தின் நிலையை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

**மறுபடியும் காங்கிரஸ் ஆட்சி இன்னும் ஐந்து வருடங்கள் என்பது உறுதிசெய்யப்பட்டுவிட்டது.**

**எதிர்க்கட்சியான பா.ஜ.க. அதிர்ச்சியிலிருந்து மீள எவ்வளவு காலம் ஆகும் என்பது அதற்கே தெரியவில்லை**

இப்படி, பல மாநிலங்களில் பல காட்சிகள் அரங்கேறினாலும் அவற்றின் ஒட்டுமொத்த விளைவு ஒன்று தான். காங்கிரஸ் கூட்டணிக்கு தெளிவான பெரும்பான்மை கிடைத்திருக்கிறது. பலரும் எதிர்பார்த்தது போல் காங்கிரசுக்கு எதிரான அதிருப்தி நாடு முழுவதும் உருவாகவில்லை. அமெரிக்க அணு ஒப்பந்தம், பயங்கரவாத தாக்குதல்கள் ஆகியவற்றால் காங்கிரஸ்மீது மக்களுக்குப் பெரிதாக கோபம் எழவில்லை, அல்லது எழுந்த கோபம் ஒன்றுபட்ட சக்தியாக வெளிப்படுத்தப்படவில்லை. பல மாநிலங்களின் அணி மாற்றங்களும், உள்ளூர்க் காரணங்களும் புதிய கட்சிகளின் தாக்கங்களும் சேர்ந்து காங்கிரசுக்கு எதிரான சக்திகள் ஒருங்கிணைய விடாமல் செய்துவிட்டன.

பா.ஜ.க.வைப் பொறுத்தவரை அது புதிதாக எந்த இடத்திலும் வாக்காளர்கள் மத்தியில் தனது ஆதரவு தளத்தையோ கூட்டணியையோ விஸ்தரித்துக்கொள்ளவில்லை. மாறாக, நவீன் பட்நாயக் போன்ற நண்பர்களையும் இழந்தது. இதன் காரணமாகவே அது தோல்வியைத் தழுவியது.

எது எப்படி இருந்தாலும், பல இடங்களில் மக்கள் முன்வந்து வாக்களித்தனர் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். வன்முறை அதிகம் இல்லை. பெரும் அளவில் இளைஞர்கள் வாக்களிப்பதில் ஆர்வம் காட்டினர். மின்னணு வாக்குப் பதிவு இருந்ததால், ஓட்டுச் சாவடிகள் சூறையாடல் நடக்கவும் இல்லை.

ஆக, மறுபடியும் காங்கிரஸ் ஆட்சி இன்னும் ஐந்து வருடங்கள் என்பது உறுதிசெய்யப்பட்டுவிட்டது. எதிர்க்கட்சியான பா.ஜ.க. அதிர்ச்சியி லிருந்து மீள எவ்வளவு காலம் ஆகும் என்பது அதற்கே தெரியவில்லை. மற்ற கட்சிகள், விழுந்த அடியை, காயத்தைப் பார்த்துப் பார்த்து வெதும்பியிருக்கின்றன.

25 ஆண்டுகளுக்குப் பின்னர் அமைந்திருக்கும் ஸ்திரமான அரசு எப்படிச் செயல்படப்போகிறது என்பதைப் பொறுத்துத்தான் இந்தியாவில் பல கட்சிகளின் எதிர்காலம் இருக்கும். ■


சுவிஸ் தேசத்திலே மிகக் குறைந்த விலை
நிறைந்த தரம்! நிகரில்லா ரகங்கள் !!
ONLINE SHOPPING
www.ars-swiss.ch
ARS
1 Sfr முதல் 3500 Sfr வரை
உலகத்தில் உள்ள அனைத்து வகையான ஆடை
அணிவகுப்புகளை ஒரே இடத்தில் வாங்கி மகிழலாம்.
ஆடை, ஆபரணக் கலையின் அத்தனை அம்சங்களிலும்
மிகச்சிறந்த புத்தம் புதிய டிசைன்கள்
ஷாப்பிங் உலகின் சூப்பர் ஸ்டார்
ARS SAKTHI TRADING GmbH
Textile and Gold
Gold • Diamond • Silver
Hauptstrasse 50/52, 6015 Reussbühl Luzern Switzerland
Telephone : +412605971 Fax : +412605972 Handy: +787391254


சுவிஸ்
சென்னை சில்க்
அனைத்து ஜவுளிகளுக்கும்
மொத்தவிற்பனை விசாரணைகள்
வரவேற்கப்படுகின்றன
Tel: 076 447 8858


# பிரச்னைகளை சுவாசிக்கும் ஒரு நாடு

## நாட்டின் உளவுத் துறைதான் அனைத்துக்கும் காரணமா?

தனஞ்ஜெயன்

*1. மிஸ்கோரா என்ற சிறு நகரம் ஸ்வாட் பள்ளத்தாக்கில் உள்ளது. இங்கே சட்டக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, தாதியர் பயிற்சி மையம் ஆகியவை இயங்கிவந்தன. அனைத்திலும் பெண்கள் கல்வி கற்றுவந்தனர். இந்த ஆண்டு பெப்ரவரி 16ஆம் தேதி பாகிஸ்தான் அரசுக்கும் தலிபான்களுக்கும் 'அமைதி ஒப்பந்தம்' ஏற்பட்ட மறுநாளே, இங்கே கல்வி, மற்றும் பயிற்சிகள்பெற்ற பெண்கள் மறைந்துபோனார்கள். அவர்களை, தெருக்களிலோ, அலுவலகங்களிலோ, மருத்துவ மனைகளிலோ பார்க்க முடியவில்லை. தலிபான்களின் ஷரியத்துக்கு இரையாகாமல் இருப்பதற்காக அவர்கள் தங்களது வீடுகளில் முடங்கிப்போனார்கள்.*

*2. இந்த நகரில் மிகப் பிரபலமான தொழில், இசை சார்ந்த கசெட்டுகள் மற்றும் கருவிகள் தயாரித்து விற்பனைசெய்வது. இதற்காகவென்றே 400 கடைகள் இங்கு இருந்தன. ஒப்பந்தத்துக்குப் பின்னர் ஒரு கடைகூட இப்போது இல்லை. ஷரியத்துக்கு எதிரானது இசை என்ற தலிபான்களின் கொள்கைதான் இதற்குக் காரணம்.*





'மினி சுவிற்சர்லாந்து' என்று வர்ணிக்கப்படும் ஸ்வாட் பள்ளத்தாக்கு

எல்லா நாடுகளிலும் பிரச்னைகள் உண்டு. ஆனால், பிரச்னையே உருவான ஒரு நாடு என்றால் அது பாகிஸ்தான் என்றுதான் சொல்லவேண்டும். பாலஸ்தீனம், சூடான், ஆபிரிக்க நாடுகள் பல, பிரச்னைகளில் போராடிக்கொண்டிருப்பவைதான். எல்லைப் பிரச்னை, மதப் பிரச்னை, வறுமை, கரண்டல் போன்றவற்றால் எழுந்த பிரச்னைகளே இந்நாடுகளைப் பாதித்திருக்கின்றன. ஆனால், இவை எதுவும் காரணமாக இல்லாமல், தவறான வழிநடத்தல், அரசு அதிகார வர்க்கத்தின் கொள்ளை, மதவெறி, அந்நிய நாட்டின் சொற்படி நடக்கவேண்டிய கட்டாயம் போன்றவைதான் பாகிஸ்தானின் இன்றைய நிலைக்கு காரணம்.

மதத்தை அதாவது இஸ்லாத்தை தங்களது இஷ்டப்படி பயன்படுத்திவரும் அந்நாட்டு உளவுத்துறையான 'ஐஎஸ்ஐ' (*Inter-Services Intelligence*)தான் குழப்பங்களுக்கு முக்கிய காரணம். இந்தியாவை தங்களது நிரந்தர எதிரியாக நினைக்கவேண்டும் என்று ஒவ்வொரு பாகிஸ்தானியரையும் மறைமுகமாகவும் நேரடியாகவும் தனது செயல்கள் மூலம் வலியுறுத்திவருகிறது ஐஎஸ்ஐ. அதுமட்டுமன்றி, உலக முஸ்லிம்களின் தலைமையகமாக பாகிஸ்தான் ஆகவேண்டும்; தங்களது வழிகாட்டுதல்களின்படி முஸ்லிம் நாடுகள் நடக்கவேண்டும் என்ற பெருங்கனவும் ஐஎஸ்ஐயின் செயல்பாடுகளுக்கு முக்கியமான மற்றொரு காரணம்.


1980களில் சோவியத் யூனியனை, ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற்ற - சோவியத்தைச் சிதறடிக்கச் செய்ய - அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் வத்திக்கானின் ஆசியோடு துவங்கியமைதான் முஜாஹிதின்களின் உருவாக்கமும் பயிற்சிகளும் என்று சொல்லப்படுகிறது. இதற்கு பாகிஸ்தானின் உளவுத்துறை முழு ஒத்துழைப்பு அளித்தது. இதற்கு இரண்டு காரணங்கள்: பக்கத்து நாடான ஆப்கானிஸ்தானை தனது பிடியில் கொண்டுவருவது; உலகெங்கிலும் இருந்துவரும் ஜிகாதிகளைத் தங்களது கட்டுப்பாட்டில் கொண்டுவருவது.

ஆனால், அமெரிக்காவுக்கு வேறு யோசனை இருந்தது. சீனாவின் பக்கத்தில் தனது படைத்தளத்தை நிரந்தமாக வைத்துக்கொள்ள ஆப்கானிஸ்தானைப் பயன்படுத்த அது நினைத்தது. ஆனால், சோவியத் வீழ்ந்ததும், படைத்தளத்தை மட்டும் வைத்துவிட்டு, எந்த உதவியையும் செய்யாமல், 'போட்டது போட்டபடி' ஆப்கானிலிருந்து வெளியேறியது. முஜாஹிதின்கள், அவர்களுக்கான எதிரி (ரஷ்யப் படைகள்) இல்லாததால், மக்கள்மேல் தங்களது பார்வையைத் திருப்பினர். தங்களது தீவிர மத நம்பிக்கையை ஆட்சிமுறையாக மாற்ற விழைந்தார்கள். மதத்தின் பெயரால் ஆட்சியை நிறுவினார்கள்.

90களின் மத்தியில் தலிபான்கள் காபூலைக் கைப்பற்றினர். தலிபான்களை ஆட்சியாளர்கள் என்று அங்கீகரித்த முதல்நாடு பாகிஸ்தான். ஆனால், தலிபான்களின் அராஜகம், சாதாரண

முஸ்லிம் எவராலும் ஏற்றுக்கொள்ளமுடியாத அடக்குமுறையாக மாறியது. தான் செல்லம் கொடுத்து வளர்த்த குழந்தையின் அத்து மீறல்களைத் தட்டிக் கேட்காத பொறுப்பற்ற தந்தையின் ஸ்தானத்தில் பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ இன்றளவும் இருந்து வருகிறது. அல்-ஹைடா இயக்கத்தினரின் அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்னர் மறுபடியும் அமெரிக்காவின் நேரடித் தலையீடு ஆரம்பித்தது. அமெரிக்கா ஆப்கானிஸ்தான்மீது படையெடுத்து தலிபான்களைத் தோற்கடித்து, ஹமீட் கர்சாய் தலைமையில் அமெரிக்க ஆதரவு ஆட்சி உருவாக் கப்பட்டது.

இதற்கிடையில் பாகிஸ்தானில் முஷாரப் ஆட்சி முடிவுக்குவந்து, 2007ஆம் ஆண்டு தேர்தலும் நடைபெற்றது. இதற்குச் சற்றுமுன்னால் பெனாஸிர் பூட்டோ படுகொலை செய்யப்பட்டார்.



தலிபான்களைப் பொறுத்தவரை, ஷரியத் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது மட்டுமே அரசாண்மை என்று நினைத்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்

எது எப்படி இருந்தாலும், தலிபான்களை ஊட்டி வளர்க்கும் ஐஎஸ்ஐ இன் செயல்பாடுகள் நிறுத்தப்படவில்லை. தலிபான்களை ஒழிக்க, புஷ் ஆட்சியில் இருந்தவரையில் அமெரிக்கா பெரிய நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஆப்கானிஸ்தானின் அரசு அமெரிக்காவை மேலும் மேலும் சார்ந்திருக்க வேண்டுமானால், வெளியிலும் உள்நாட்டிலும் அதற்குப் பெரிய எதிரிகள் இருக்கிறார்கள் என்ற நிலை நீடிக்க வேண்டும். இரண்டாவதாக, பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தானின் ஆதரவு அமெரிக்காவுக்குக் கண்டிப்பாக வேண்டும். அதே சமயம் பாகிஸ்தானின் உள்நாட்டுக் குழப்பங்கள் குறைந்தால் அமெரிக்க உதவியைப் பாகிஸ்தான் பெரிய அளவில் எதிர்பார்க்காது. ஆக, பாகிஸ்தான் அமெரிக்காவைச் சார்ந்திருப்பதற்கும் தலிபான்கள் தேவைப்படுகிறார்கள்.

தலிபான்களுக்கு ஐஎஸ்ஐ இன்னமும் உதவிசெய்வது அமெரிக்காவுக்கு தெரியாத விஷயம் என்று சொன்னால் அதை யாருமே நம்பமாட்டார்கள். ஐஎஸ்ஐ மூலம் ஆப்கானிஸ்தானைத் தனது கட்டுக்குள் வைத்திருக்க பாகிஸ்தான் விரும்புகிறது. இந்தக் கனவு இருக்கும்வரையில் பாகிஸ்தானின் உளவுத்துறை தலிபான்களின் ஆதரவுப் போக்கை நிறுத்தமாட்டாது. இதுவும் அமெரிக்காவுக்கு தெரிந்தே இருக்கும். ஆனால், இந்த விஷயத்தில் ஐஎஸ்ஐ அமைப்பை இதுநாள்வரை அமெரிக்கா குறைகூறியதுகூட இல்லை. தலிபான்கள்மீதான அமெரிக்க தாக்குதலைப் பாகிஸ்தானின் ஆதரவு இல்லாமல் நடத்த முடியாது. இந்தத் தாக்குதல்களினால், தலிபான்கள் எவ்வளவு பேர் கொல்லப்படுகிறார்கள் அல்லது பாதிக்கப்படுகிறர்கள் என்பது இருவருக்குமே தெரிந்த ரகசியம். அமெரிக்க மற்றும் பாகிஸ்தான் இராணுவத் தாக்குதல்களின் நேரடி விளைவு, எல்லைப்புற மாவட்டங்களில் 50 ஆயிரம்பேர் வீடுகளை இழந்து முகாம்களில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். ஒபாமா ஆட்சிக்கு வந்தபின்னர் நிலைமையில் ஓரளவுக்கு மாற்றம் இருந்தாலும், இன்றும் கூட தலிபான்களை ஒடுக்குவதில் அமெரிக்கா மும் முரம் காட்டவில்லை.

தலிபான்களைப் பொறுத்தவரை, ஷரியத் சட்டத்தை நடை முறைப்படுத்துவது மட்டுமே அரசாண்மை என்று நினைத்துச் செயல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஐஎஸ்ஐ மற்றும் அமெரிக்கா ஆகியவற்றின் அரசியல் சதுரங்க விளையாட்டுக்களை நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள். தங்களை ஒரேயடியாக ஒழிக்கும் வேலையில் பாகிஸ்தான் இராணுவம் ஈடுபடாது என்பது தெரிந்தேதான் அவர்கள் காரியங்களைச் செய்துவருகிறார்கள்.

சில மாதங்களுக்கு முன்னால் சர்தாரி அரசும் ஸ்வாட் பகுதியில் உள்ள தலிபான்களும் அமைதி ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அதாவது, ஸ்வாட் பகுதியில் தலிபான்கள் தங்கள் இஷ்டப்படி ஷரியத் சட்டத்தை நடைமுறைப்படுத்திக்கொள்ளலாம். இதற்குப் பதிலாக, தலிபான்கள் ஏனைய பகுதிகளில் தங்களது தாக்குதல்களை, நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இந்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னால், ஸ்வாட் பகுதியில் பாகிஸ்தானின் இராணுவமே அதிகாரம் செலுத்திக்கொண்டிருக்கிறது. ஆனாலும், தலிபான்கள் தங்கள் இஷ்டப்படி நடந்துகொள்ள அநுமதிக்கப்பட்டார்கள்.

பிபிசியின் உருது மொழிப் பிரிவின் சிறப்புச் செய்தியாளர் முகம்மது ஹனீப் ஒரு கட்டுரையில், மதத்தின் பெயரால் தலிபான்கள் மக்களைக் கொல்வதையும், பாகிஸ்தான் இராணுவம் அதைக் கண்டுகொள்ளாமல் இருப்பதையும்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். பாகிஸ்தான் இராணுவத்தினர், பல சமயங்களில் குறிப்பிட்ட இடங்களில் மக்களை நிறுத்தி, ‘இதற்கு மேல் இந்த வழியில் போகாதீர்கள்; அங்கே தலிபான்கள் ஒரு நபருடையை குரல்வ



நாளுக்கொரு குண்டு வெடிப்பும்
போராட்டங்களும்
நடந்துகொண்டிருக்கின்றன

ளையை அறுத்து, தண்டனையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்' என்றுகூறி, வேறு வழியில் செல்லுமாறு கேட்டுக்கொள்வார்கள் என்று அவர் எழுதியிருக்கிறார்.


இத்தனைக்கும் பாகிஸ்தானின் சட்டங்கள் ஸ்வாட்டிலும் நடைமுறையில் இருந்த சமயம் அது. அப்போதும்கூட அந்நாட்டு இராணுவத்தினர், சட்டத்துக்குப் புறம்பான படுகொலையைத் தடுத்து நிறுத்த சுண்டு விரலைக்கூட அசைக்கவேண்டாம் என்ற உத்தரவின் பேரில் செயல்பட்டுக்கொண்டிருந்தனர்.

இந்த தைரியத்தில்தான் தலிபான்கள் மிகச் சுதந்திரமாக, தங்கு தடையின்றி இயங்கிக்கொண்டிருக்கின்றனர். ஸ்வாட்டில் மட்டுமல்லாமல், இஸ்லாமாபாத், கராச்சி போன்ற மிக முக்கிய நகரங்களில்கூட தங்களது விருப்பங்களை நினைத்த மாத்திரத்தில் நிறைவேற்றிவருகின்றனர். நாட்டின் தலைநகரான இஸ்லாமாபாத்தில்கூட, பெண்கள் பள்ளிகள், கல்லூரிகள் போன்றவற்றை தலிபான்கள் குண்டு வைத்துத் தகர்த்துள்ளார்கள்.

தலிபான்களின் முக்கிய எதிரிகள், கல்விகற்கும், வேலைக்கு செல்லும், தமது சொந்த முயற்சியில் வாழ முயற்சி செய்யும் பெண்கள்தாம்.

முஷாரபின் இராணுவ ஆட்சி முடிந்ததும், மக்களிடையே ஜனநாயக அரசின்மேல் நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் துளிர்விட்டது. அதுவரையில் இராணுவம், அமெரிக்கா, ஐஎஸ்ஐ மற்றும் தலிபான்களால் தாங்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டோம் என்பதை அரசு அதிகாரிகள், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதிகள், பதவியேற்ற கட்சிகள் புரிந்திருக்கும் என்றே மக்கள் நம்ப விரும்பினார்கள். ஆனால், ஆட்சி உருவான சில காலத்திலேயே ஆளும் கூட்டணிக்குள் சண்டை தோன்றியது. பொருளாதாரம், வழிகாட்டுதலின்றி நாசமானது. நிர்வாகச் சீர்கேடுகள் அதிகரித்தன. இதற்கிடையில் பதவியில் இருப்பவர்கள் கமிஷன்கள் மூலம், சொத்துக் குவித்தது, நேர்மையற்ற செயல்முறைகளை இயல்பான நடைமுறையாக மாற்றியது போன்றவற்றால், அரசு என்ற ஏதாவது இயங்கிக்கொண்டிருக்கிறதா என்பதே சந்தேகத்துக்கு உள்ளானது. இத்தகைய சுயநலம் பீடித்த, ஊழல் மற்றும் அதிகார ஆசைகொண்டவர்களால் நாட்டின் நிர்வாகத்தை எப்படி நடத்த முடியும்? இதன் விளைவாகத்தான், நாட்டில் நாளுக்கொரு குண்டு வெடிப்பும், போராட்டங்களும் நடந்துகொண்டிருக்கின்றன.

தலிபான்களின் மதவெறி, ஆட்சியாளர்களின் பதவிவெறி, சொத்துக் குவிப்பில் தீவிர கவனம், உளவுத் துறையின் தடையற்ற தன்னிச்சையான செயல்பாடு, அதற்குத் துணைபோகும் இராணுவம் ஆகியவை ஒருபுறம். மறுபுறம், இவையெல்லாம் இருப்பது தெரிந்தும், கொந்தளிப்பு இருக்கவேண்டும். ஆனால், தம்மால் மட்டுமே கட்டுப்படுத்துவதாக இருக்கவேண்டும் என்ற கணக்குடன் செயல்படும் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய அரசுகள்; இவற்றுக்கிடையே, ஏதோ ஒரு நம்பிக்கையில் காலத்தைத் தள்ளவேண்டிய கட்டாயத்தில் இருக்கும் மக்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு நாடு பிரச்னையின் உருவகமாகவன்றி வேறு எப்படி இருக்க முடியும்? ■




# தொடரும் நெருக்கடிகள்

## மாவொயிஸ்ட் ஆட்சிக்கு மாறிய இந்து இராச்சியம்

தனஞ்ஜெயன்

**ஆயுத பயிற்சிபெற்ற தொண்டர்களை இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளலாமா?**

உலகத்தில் எஞ்சியிருந்த ஒரே இந்து இராச்சியம் என்ற பெயரைப்பெற்ற, மிகச் சிறிய ஒரு நாடான நேபாளம் இப்போது புயலில் அகப்பட்ட கப்பலைப் போலத் தத்தளிக்கிறது. இதன் மக்கள் தொகை 30 மில்லியன் மட்டுமே: அதாவது 3 கோடி மக்கள். இதன் ஒரு பக்கம் நூறு கோடியை எப்போதோ தாண்டி விட்ட சீனா, மற்றைய மூன்று பக்கங்களிலும் 103 கோடி மக்களோடு இருக்கும் இந்தியா.

நாடும் அதன் மக்கள் தொகையும் சிறியதாக இருந்தாலும், இதன் பாரம்பரியம் மிகப் பழையது. நேபாளம் என்ற நாடு உருவாகும் முன்னர், பல சிற்றரசுகள் இங்கே இருந்தன. இவையனைத்தும் ஒன்று சேர்ந்து கூட்டமைப்பாக 1768இல் நேபாளம் என்ற நாடாக உருவெடுத்தது. இக்கூட்டமைப்பின் முதல் தலைவர், மன்னர் பிரித்வி நாராயண ஷா. இந்த நாடு, இதே பாணியில், இதே ஆட்சியமைப்பில் 20ஆம் நூற்றாண்டு வரை இருந்தது. இந்த நூற்றாண்டின் முடிவில் அதாவது, 1996இலிருந்து எப்போதுமே பிரச்னைகளை அது எதிர்கொள்ள ஆரம்பித்தது.

பிரபுத்துவ பாணியிலான அரசாட்சி, நிலச்சுவாந்தர்கள் மற்றும் ஜமீன்தார்கள் போன்றோரது ஆதிக்கம், அதிகாரம் ஆகியவற்றை சாதாரண மக்கள் ஏற்றுக்கொள்ளும்வரையில் பிரச்னை ஏற்படுத்தாதவையாக இருந்தன. ஆனால், அடித்தட்டு மக்களின் உரிமைகள் வெகுகாலம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாத நிலையும் வாழ்க்கைத்தரம் உயராமல் இருந்ததும் மக்கள் மத்தியில் பெரும் கோபமாக உருவெடுத்தது. இந்தக் கோபத்தைத் துல்லியமாக உணர்ந்த சீனா, அமைதியற்ற இளைஞர்கள் மத்தியில் மாவோயிஸ்ட் சித்தாந்தத்தை விதைத்தது. இதன் விளைவாக 1996ஆம் ஆண்டிலிருந்து மாவோயிஸ்டு இயக்கம் ஆழமாகவும், விசாலமாகவும் பரவி வளர ஆரம்பித்தது. இந்த இயக்க போராட்டம் விரைவிலேயே ஆயுதம் ஏந்திய போராட்டமாகவும் மாறியது.

பத்து வருடங்கள் நடந்த இப்போராட்டத்தில் நூற்றுக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் மாவோயிஸ்டுகள். ஆனால், இயக்கம் எந்த அளவுக்கு வளர்ந்திருந்தது என்றால், நோபளத்தில் உள்ள 75 மாவட்டங்களில் 68 மாவட்டங்களில் ஏதேனும் ஒரு விதத்தில் மாவோயிஸ்டுகளின் பாதிப்பு இருந்தது. அதன் தாக்கமும் செல்வாக்கும் ஆழமாக இருந்தன. இவற்றில் 32 மாவட்டங்களில் இந்த பாதிப்புகள், அதன் விளைவுகள் வெளிப்படையாகத் தெரிந்தன. ஐந்து மாவட்டங்களில் மாவோயிஸ்டுகள் அரசாங்கத்தை ஸ்தாபித்து நடத்திவந்தார்கள். உள்ளூர்க் காவல், நீதிமன்றம், வரி விதிப்பு, வரி வசூலிப்பு போன்றவை யாவும், மாவோயிஸ்டுகளின் கட்டுப்பாட்டில் இருந்ததாக தெரியவருகிறது.

மாவோயிஸ்டுகளுக்கு அரசியல் ஆதரவும் கிடைத்தது. 2006 ஏப்ரலில் மாவோயிஸ்டுகள் ஆட்சியைக் கைப்பற்றினர். அடுத்த மாதத்தில் நேபாளத்தின் கடைசி மன்னர் என்ற அடையா

ளத்துடன் கியானேந்திர ஷா பதவியை விட்டு இறக்கப்பட்டார். 2008 மே மாதம் முதல், நேபாளம் ஜனநாயக குடியரசாக ஆனது. இதையடுத்து, அதே வருடத்தில் ஜூலை 23ஆம் தேதி நேபாளத்தின் முதல் ஜனாதிபதியாக டாக்டர் ராம் பரன் யாதவ் தேர்வு செய்யப்பட்டார்.

இதற்குச் சற்று முன்னதாக, ஏப்ரல் மாதத்தில் நடந்த பொதுத் தேர்தல்களில் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) தனிப்பெரும் கட்சியாக அதிக இடங்களைக் கைப்பற்றியது. ஆனால், தனியாக ஆட்சி அமைக்கும் அளவுக்கு இடங்களைப் பெறவில்லை. ஆகவே, பிற கட்சிகளோடு கூட்டணி அமைத்து ஆட்சியை அமைத்தது. மாவோயிஸ்ட் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் (சிபிஎன் - எம்) தலைவரான புஷ்ப கமல் பிரசாந்தா பிரதமராகப் பதவியேற்றார்.

மாவோயிஸ்டுகள் தேர்தல் மூலம் ஆட்சிக் கட்டிலில் ஏறினாலும், அவர்களது தொண்டர்கள் ஜனநாயகப் பாதைக்கு அவ்வளவு எளிதில் திரும்பவில்லை. அதுவுமன்றி, தொண்டர்களில் பெரும்பாலோர், ஆயுதப் புரட்சிக்குத் தயாராகப் பெரும் பயிற்சிகளைப் பெற்றவர்கள். அவர்களை என்ன செய்வது என்ற பெரும் கேள்வி சிபிஎன் (எம்)க்கு எழுந்தது. அது மட்டுமன்றி, அக்கட்சி ஆட்சிக்கு வந்தவுடன், அதன் தொண்டர்கள் ஆங்காங்கே அதிகாரங்களைக் கையிலெடுத்துக் கொள்ள ஆரம்பித்தனர். பொலிசாருக்கும் அவர்களுக்கும் இடையில் மோதல்கள் என்பது சாதாரணமான விஷயமாகிப்போனது.

கட்சியை முதலில் புரட்சிப் பாதையிலும், பின்னர் ஜனநாயகப் பாதையிலும் வழிநடத்தியவரான பிரதமர் பிரசாந்தா இதை உணர்ந்தே இருந்தார். ஆகவே, ஆயுதப் பயிற்சிபெற்ற தனது தொண்டர் படையை நேபாள இராணுவத்தின் ஒரு பகுதியாக மாற்ற முடிவு செய்தார். இதை மரபு வழியாக இராணுவத்தை வழிநடத்திக்கொண்டிருந்த இராணுவ உயர் அதிகாரிகள் ஏற்கவில்லை. இது குறித்து இராணுவத் தளபதி ருக்மாங்கத கடாவல்லைப் பலமுறை வலியுறுத்தினர் பிரசாந்தா. ஆனால், கடாவல் இதனை ஏற்கவில்லை.

இதற்குக் காரணங்கள் இருந்தன. இராணுவ முறைப்படி பயிற்சி இல்லாதவர்களை இராணுவத்தின் ஒரு பகுதியாக எப்படி ஏற்பது என்ற தயக்கம் முக்கிய காரணம். ஆனால், அதைவிட முக்கியமான விஷயம் என்னவென்றால், கடந்த காலத்தில் மாவோயிஸ்ட் ஆயுதப் புரட்சியாளர்கள் இராணுவத்தினரோடு மோதியிருக்கின்றனர். இருபுறமும் சேதம் விளைந்தது. இப்படிப்பட்டவர்களை எப்படி இராணுவத்தின் பிரிவாக ஏற்பது என்பதுதான் தளபதியின் முக்கியமான ஆட்சேபணை.

தான் சொல்வதை இராணுவ தளபதி கேட்காததால் கோபமடைந்த பிரசாந்தா, கடாவல்லை பதவிநீக்கம் செய்யவேண்டும் என்று அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் கொண்டுவந்தார். இதை கூட்டணியில் முக்கிய கட்சியான மாக்ஸிச லெனினிச கூட்டு நேபாள கம்யூனிஸ்ட் கட்சியை (சிபிஎன் - யுஎம்எல்) சேர்ந்த மந்திரிகள் ஏற்க மறுத்தனர். ஆனாலும், பெரும்பான்மை வாக்குகள் இருந்ததால், அந்தத் தீர்மானத்தின்படி, இராணுவ தளபதி கடாவலை பதவிநீக்கம்செய்ய பிரசாந்தா உத்தரவு பிறப்பித்தார். அதன் பின்னர் ஜனாதிபதியின் ஒப்புதல் கையெழுத்துக்கு இந்த உத்தரவு அனுப்பப்பட்டது. ஆனால், ஜனாதிபதி டாக்டர் யாதவ் இதை ஏற்க மறுத்தார். அமைச்சரவையிலேயே ஒட்டு மொத்த ஒப்புதலைப் பெறாத நிலை இருப்பதைச் சுட்டிக்காட்டினார். மந்திரிசபையில் ஒருமித்த கருத்து உருவாக்குமாறு கேட்டுக்கொண்டார். இதற்கு பிரதமர் பிரசாந்தா எதிர்ப்புத் தெரிவித்தார். ஜனாதிபதி தனது தனி அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜெனரல் ருக்மாங்கத கடாவலின் பதவிநீக்க உத்தரவை ரத்து செய்தார்.


இதை எதிர்பார்க்காத பிரசாந்தா தனது பதவியை ராஜினாமா செய்தார். இத்தகைய நிகழ்வுகளால் அரசின் ஸ்திரத் தன்மை ஆட்டம் கண்டது. இனி கூட்டணியில் இருந்து பலனில்லை என்று கருதிய சிபிஎன் (யுஎம்எல்), எதிர்க் கட்சியான நேபாள காங்கிரசுடன் சேர்ந்து ஆட்சி அமைக்க முயற்சித்தது. ஆனால், பிரசாந்தா பதவியை ராஜினாமா செய்தாலும், அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள்தாம் இன்னும் பாராளுமன்ற செயல்பாட்டைத் தீர்மானிப்பவர்களாக உள்ளனர். ஆகவே, சிபிஎன் (எம்யுஎல்) கட்சியால் அவ்வளவு எளிதாக எதையும் செய்ய இயலவில்லை.

பிரசாந்தாவுக்கு தனது மாவோயிஸ்ட் தொண்டர் படைகளை இராணுவ பிரிவினராக ஆக்கவேண்டும் என்பது மட்டும் கோரிக்கை அல்ல. இதைத் தவிர மற்றொரு கோரிக்கையும் அவருக்கு இருக்கிறது. அதை நிறைவேற்ற சம்பந்தப்பட்ட துறை கடும் எதிர்ப்பைக் காட்டிவருகிறது. மாவோயிஸ்டுகள் அரசு அமைப்பதற்கு முன்னதாக இயக்கம் நடத்திக்கொண்டிருந்த போது, தங்களது முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த ஐந்து மாகாணங்களில், அவர்களே உருவாக்கிய சட்டங்களை வைத்துக்கொண்டு 'இணை நீதிமன்றங்கள்' நடத்தி, வழக்குகளைப் பைசல் செய்தனர். அந்த நீதிமன்றத்தில் பணியாற்றியவர்களை, அதாவது மாவோயிஸ்டுத் தோழர்களை நேபாளத்தின் நீதித்துறையில் இணைக்க வேண்டும் என்பதும் பிரசாந்தாவின் விருப்பம். இதுவும் இதுநாள் வரையில் நிறைவேறவில்லை.

தான் பதவிக்கு வந்து ஆட்சியைப் பிடித்ததும் தன் தொண்டர்களுக்குச் செய்து கொடுக்கவேண்டும் என்று முனைந்த சில விஷயங்களைப் பிரசாந்தாவால் செய்ய முடியாதது, தொண்டர்களின் மத்தியில் அதிருப்தியை உருவாக்கியது. இதைச் சரிசெய்ய அவர் எடுத்த முயற்சியின் விளைவாக அவரே பதவிவிலக ஏற்பட்டது. இந்தத் தொண்டர்கள் கடந்த 10 ஆண்டுகளாக 'சிவில்' வாழ்க்கையை வாழாதவர்கள்; போராளிகளாக இருந்தவர்கள். அதனாலேயே அவர்களால் அடிக்கடி பிரச்னைகளும் தகராறுகளும் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. இவற்றுக்கு முடிவுகட்டினாலொழிய ஆட்சியை ஒழுங்கான முறையில் நடத்துவது சாத்தியம் இல்லை. அதே சமயத்தில், அவர்களுக்குத் திருப்தி அளிக்கும் விதத்தில் அதாவது, இராணுவத்தில் ஒரு பிரிவினராக அவர்களைச் சேர்த்துக்கொள்வது போன்றவற்றைச் செயல்படுத்த வேண்டிய அவசியமும் இருக்கிறது. ஏனெனில், பிரசாந்தாவின் கட்சி பொதுமக்கள் பங்குகொள்ளும்; அவர்களைத் தொண்டர்களாக வைத்திருக்கும் ஒரு கட்சி அல்ல. புரட்சியாளர்கள், அதுவும் ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள்தாம் பிரசாந்தாவின் முக்கிய பலமாக இருக்கிறார்கள். இன்றைய சூழ்நிலையில் அவர்களே அவரது பலவீனமாகவும் ஆகிவிட்டார்கள் என்பதுதான் யதார்த்தம்.


ஆனாலும், பிரசாந்தாவும் ஒரு போராளி. தனது பதவியை ராஜினாமா செய்தாலும், மாற்று அரசு ஒன்று ஏற்படவும் வழிவிடாது, தேர்தல்களுக்கும் சம்மதிக்காது போராடிக் கொண்டிருக்கிறார். இந்தப் போராட்டத்தை எத்தனை நாள் அவரால் நடத்த முடியும் என்பதைப் பொறுத்துதான், நேபாளத்தின் எதிர்காலம் இருக்கும்.

# கொடுத்ததெல்லாம் கொடுத்தான்



இப்படி அகால நேரத்தில் எவன் காலிங் பெல் அடிப்பது என்று எரிச்சலுடன் கதவைத் திறந்தேன். எரிச்சலைக் காட்டமுடியவில்லை, வந்தது என் மைத்துனன். உறவோடு போனால் பரவாயில்லையே, அவன் அரசியல்வாதி. அத்துடன் இப்போது எம். எல். ஏ; எப்போதும் தனியே வரமாட்டான். அதனால், இருட்டில் கண்களால் துழாவினேன். கையில் தூக்கமுடியாதபடி ஒரு பெரிய கூடையுடன் டிரைவர் மட்டுமே தென்பட்டான். அதற்குள் என் மனைவியும் வாசலுக்கு வர, உரிய வரவேற்பு உபசாரத்துடன் மைத்துனன் கூடத்து சோபாவில் தொப்பென்று உட்கார்ந்தான். முதலில் எடுத்துவந்ததைவிடப் பெரிய கூடையை டிரைவர் தூக்கிக் கொண்டு வந்தான். 'வச்சிடு, காலையில் பார்த்துக்கலாம்; தூங்கப் போ' என்று உத்தரவிட்டான். உடனே என் மனைவி கார் ஷெட்டையும் அதோடு ஒட்டிய சிறிய அறையையும் திறந்துவிட்டாள். உபசாரமாக ஓரிரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு எல்லோரும் தூங்கப் போய் விட்டோம்.

வழக்கம்போல் மனைவி முதலிலேயே எழுந்துவிட்டாள். அடுத்து நான். மைத்துனன் தூங்கிக்கொண்டிருந்தான். அடாடா, அவன் பேரைச் சொல்ல மறந்துவிட்டேனே, அதைச் சொல்லியிருந்தால் நீங்களும் அவன் ஒரு எம். எல். ஏ. என்று சட்டென்று புரிந்துகொண்டிருப்பீர்கள். அவன் பெயர் முதுமலை முதுமலையான். பெயர் விருத்தாசலம், ஊரும் அதுவே. ஆனால், தமிழ்நாட்டு அரசியல் நியதிப்படி பெயர் தமிழில் இருக்கவேண்டும்; அத்துடன் ஊர்ப் பெயரும் சேரவேண்டும் என்பதனால் அவன் முதுமலை முதுமலையானாகிப்போனான். பெயரை மாற்றியபின் வளர்ச்சி இருக்கி



றது என்று நினைக்கிறான். போகட்டும், அது அவன் நினைப்பு.

"என்ன, மூனாமூனாவை எழுப்பலையா?'' என்று மனைவியைக் கேட்டேன். 'பாவம், ராத்திரி பகலா அலையறான்; கொஞ்சம் தூங்கட்டுமே. ஏதாவது வேலையிருந்தால் எந்திரிச்சுடுவான்;' என்று சொல்லிவிட்டு சமையல் அறைக்குப் போனாள். வாசலில் பொத்தென்று செய்தித்தாள்களும் பத்திரிகைகளும் விழவும், திண்ணையில் உட்கார்ந்து படிக்க ஆரம்பித்தேன். சரியாக காலை உணவு நேரத்தில் எழுந்த மு. மு. 'என்ன மாமா?' என்று கூடுதல் பிரியத்துடன் அழைத்துக்கொண்டே வந்தான்.

'என்னடா' என்று பேச்சுக்கொடுத்ததும், "இனிமே உங்களுக்கு டெல்லியிலே ஏதாவது வேலை ஆகணும்னா என்னிட்ட சொன்னாப் போதும். எம். பி. எலெக்ஷனுக்கு சிட் கேக்க வந்திருக்கேன். இன்னும் கொஞ்ச நேரத்திலே தலைவரைப் பார்க்க அவர் வீட்டுக்குப் போகணும்'' என்றான்.

"என்ன ஆசாமி நீ. தலைவர் காலங்கார்த்தாலே கட்சி ஆபீசுக்குப் போயிடறாருன்னு பேப்பர்லயும் டிவிலயும் செய்தி வருது. நீ என்னடான்னா பத்து மணிக்கு வீட்டுக்குப் போறேங்கறயே.''

"அது தெரிஞ்சுதான் இப்பப் போறேன். உங்களுக்கு எதுவும் தெரியாது மாமா. அரசாங்கத்திலே இருக்கிறமாதிரி அரசியல்லயும் 'த்ரூ ப்ராபர் சேனல்'னு ஒன்று இருக்கு. அது வழியாப் போனா எல்லா வேலையும் கச்சிதமா நடக்கும்.''

"சரி, உனக்கு சீட்டு கொடுத்துடுவாங்களா? போட்டி இருக்காதா?''

"இல்லாமலா மாமா? ஆனா எப்படியும் நான் டிக்கெட் வாங்கிடுவேன்'' என்று நம்பிக்கையுடன் சொன்ன மு. மு. அவசரம் அவசரமாக டிஃபன் சாப்பிட்டுவிட்டு அரசியல் யூனிஃபார்மான கரை வேட்டி, வெள்ளை முழுக்கைச் சட்டை, நீண்ட துண்டு ஆகியவற்றுடன் புறப்பட்டான். ஞாபகமாக டிரைவரைக் கூப்பிட்டுக் கூடையை வண்டியில் வைத்துவிட்டாயா என்று கேட்டான். வண்டி ஏறும்பொழுது பார்த்தால் பின் சீட்டில் இருந்தது பெரிய கூடை. பதற்றத்துடன் உள்ளே ஓடிவந்தான். "அக்கா, ஏன் பெரிய கூடையை வைக்கச் சொன்னே; போற இடத்துக்குச் சின்னக் கூடை போதும். உங்களுக்குத்தான் பெரிய கூடை.''

"வேண்டாம்டா, பெரிய இடத்துக்குப் பெரிய கூடை இருக்கட்டுமே; அங்கே நாலு பேர் வருவாங்க; போவாங்க. இங்க நாங்க ரெண்டுபேர் தானே.''

"அக்கா, உங்களுக்கு விஷயம் தெரியாது. போற இடத்துக்கு எனக்குச் சின்னக் கூடைதான் வேணும். நீங்க எதையும் பிரிச்சுப் பாக்கலையே.''

"அப்படி ஒண்ணும் செய்யலைடா. எல்லாம் அப்படியே இருக்கு. காய்கறியும் பழமும்தானே, அப்புறமாப் பாத்துக்கிட்டாப் போச்சுன்னு வச்சுக்கிட்டேன்.''

டிரைவரை அழைத்து சின்னக் கூடையை பத்திரமாக எடுத்துக் கொண்டு கட்சித் தலைவர் வீட்டுக்குப் போனான் மு. மு. வீட்டிற்குள் நுழையும் முன்பே சுற்றும் முற்றும் யாராவது குறிப்பாக இவன்மீதோ வாகனத்தின் மீதோ பார்வையைச் செலுத்துகிறார்களா என்று பார்த்தான். எதுவும் விநோதமாகப் படவில்லை.

தலைவர் வீட்டிற்குள் நுழைந்ததும் கூடையைச் சுமக்கமுடியாமல் சுமந்து கொண்டு போனான். தலைவர் அப்பொழுதுதான் கட்சி அலுவலகத்துக்குப் போனதாக அம்மா சொன்னார். மு. மு. வுக்கு தலைவர் வீட்டிலும் செல்வாக்கு உண்டு. கொஞ்சநேரம் ஏதேதோ பேசிவிட்டு, அம்மாவிடம் சொன்னான்; 'வேற யாரும் இல்லாத நேரத்தில் கூடையை நேரே பெட்ரூமுக்கு எடுத்துட்டுப் போங்க. ஒவ்வொன்றாக எடுத்துப் பிரித்து, உரித்துப் பாருங்க. நீங்க சந்தோஷப்பட்டா தலைவரிட்ட சொல்

லுங்க, போதும். உங்க சந்தோஷம்தான் என்ன மாதிரித் தொண்டர்கள் சந்தோஷம்.''

'இப்பவே செஞ்சுட்டா போவுது'ன்னு அம்மா தலைவரின் தனியறைக்கு அதை எடுத்துச் சென்றார். மு. மு. வும் தயங்கியபடியே வெளியேறி, "அம்மா, ஐயா இன்னிக்கி முடிவு பண்ணிடப்போறாராம். போதோட சிபாரிசு செஞ்சுட்டா நல்லது. எதுக்கும் கொண்டுவந்ததையும் பார்த்துக்கங்கம்மா. வேணும்னா தேர்தலுக்குப் பிறகு அரைக் கூடையோ, கால் கூடையோ தர்ரேன்'' என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டான். அடுத்தாற்போல் கட்சி அலுவலகத்திற்குப் போகவேண்டும். ராகு காலம் குறுக்கிட்டதால் எங்காவது காபி குடித்துவிட்டுப் போகலாம்னா இந்த டிரைவ்-இன்-ஹோட்டலையும் மூடிட்டாங்களே, என்ன செய்யறதுன்னு யோசிச்சுப் பார்த்துட்டு, சரி, ராகு காலமா இருந்தா என்ன, அது தான் காலையிலேயே புறப்பட்டாச்சே. முதல் கால்தான் வலது கால் என்று சமாதானம் சொல்லிக்கொண்டு, கட்சித் தலைமை அலுவலகத்திற்கே போனான்.

இவன் நுழையவும் அங்கே ஓர் அம்புலன்ஸ் வரவும் சரியாக இருந்தது. 'அட கஷ்டமே, சகுனம் சரியில்லையே, என்ன அம்புலன்ஸ், யார் அது' என்று பார்த்தால், அடையாளமே தெரியவில்லை. சினிமாவில் சில 'பேஷன்ட்'களை முழுசாக பண்டேஜ் துணியால் கட்டியிருப்பதைப்போல முழுக்க, காலிலிருந்து தலைவரைக்கும் ஆசாமிக்கு பண்டேஜ்.

போர்ட்டிக்கோவில் அம்புலன்ஸ் நிற்கவும் முதலில் ஒரு நர்ஸ் இறங்கினாள். கட்சி அலுவலகத்தைச் சேர்ந்தவர் 'வீல் செயர்' இருக்கிறதா என்று தேட, நல்ல பெரிய குஷன் வைத்திருந்த சக்கர நாற்காலி அம்புலன்ஸிலிருந்தே இறக்கப்பட்டது. கைத்தாங்கலாக ஒரு நபர் இறக்கப்பட்டார். 'பாவி இவனா?' என்று ஒரு நொடி மு. மு. யோசித்தாலும், "வாங்கண்ணே, என்ன ஆச்சு? சின்னக் காயம்தான்னு சொன்னாங்களே, இப்படி ஆயிடுச்சே'' என்று பொய்ச் சோகத்துடன் சொல்ல, நர்ஸ் 'உஷ்' என்று சைகை காட்ட, கஷ்டப்பட்டு வீல் செயரில் அமர்த்தப்பட்ட அவர் நேராக தலைவர் அறைக்கு அழைத்துச்செல்லப்பட்டார். பார்த்தவர்கள் பதறிப்போக, சங்கடப்பட்ட தலைவர் எல்லோரையும் வெளியே போகச் சொன்னார். நர்ஸும் அவரும் தலைவரும் மட்டும் இருந்த அந்த நேரத்தில் 'தலைவரே' என்று உற்சாகமாகக் குரல்கொடுத்தார் வீல் செயர் ஆசாமி.

**"கத்தரிக்காயைச் சரிபாதியாப் பிளந்து உள்ளே வைரங்களா வெச்சிருந்தான். பரங்கிக் காய்க்குள்ளே தங்கச் சங்கிலிங்க, கொத்துக்கொத்தா இருந்துச்சு. பூசணிக்காய்க்குள்ளே சவரண் நாணயங்கள். பீர்க்கங்காய்க்குள்ளே எல்லாம் வெள்ளி கொலுசு. வழியிலே யாரும் பார்த்து மாட்டிக்கிட்டா என்ன செய்யறதுன்னு, எல்லாத்தையும் சாமர்த்தியமா காய்கறிக்குள்ளே போட்டுக் கொண்டாந்துட்டான் பாருங்க. அந்த புத்திசாலித்தனத்துக்கே நீங்க அவனுக்கு சீட்டு கொடுக்கணும்; தெரிஞ்சுதா?''**

"சாமிக்கண்ணு, உனக்கு ஒண்ணும் ஆகலியே, நான் பயந்து போயிட்டேன். உன் ஜாதிக்காரங்கதான் தொகுதியிலே அதிகம் இருக்காங்க. உனக்கு சீட் கொடுக்கலாம்னு நினைச்சேன். நீ ஏதோ அடிபட்டுட்டதாச் சொன்னாங்க. ஆனா இப்படி ஆயிட்டியே; எந்திரிச்சே நிற்கமுடியாத உன்னால எலெக்‌ஷன்ல எப்படிப்பா நிற்கமுடியும்?'' என்று கேட்க, சர்வ சாதாரணமாக எழுந்து நின்றார் சாமிக்கண்ணு.

"சின்ன காயம் பட்டது வாஸ்தவம்தானுங்க. ஆஸ்பத்திரியிலே வலது கணுக்கால்ல ஒரு சின்ன கட்டுத்தான் போட்டாங்க. அதுலேயே எனக்கு ஒரு நல்ல ஐடியா கெடச்சது. எல்லாரும் மூணு 'சி'க்கு மேலே கொடுத்ததாச் சொன்னாங்க. நான் நாலு 'சி' குடுத்துடலாம்னு நினைச்சு, எல்லாம் ஆயிரம் ரூபாத் தாளாக் கட்டி வெச்சிருந்தேன். ஆனா, பாழாய்ப்போன தேர்தல் கமிஷன் அதிகாரிங்க ரயில்வே ஸ்டேஷன்ல, பஸ் ஸ்ராண்ட்ல, எயர் போர்ட்லன்னு எல்லா இடங்கள்லயும் நம்ம பெட்டிகளைச் சோதனைபோடறதாச் சொன்னாங்க. யோசிச்சுப் பார்த்தேன். மாட்டிக்கிட்டா மானம் போறது இருக்கட்டும், பணம் போயிடுமேன்னு பயந்தேன். அதனால, எல்லாப் பணத்தையும் உடம்போட பண்டேஜ் துணியில் கட்டி, அம்புலன்ஸ்லே வந்துட்டேன். அம்புலன்ஸ்ங்கிறதனால யாரும் வழியிலே நிறுத்திச் சோதனை போடலே. ஆனாலும், விபத்திலே அடிபட்டபோது வலிக்காத வலி இப்போ என் உடம்புலே இருக்குங்க. கட்சித் தொண்டுதானேன்னு வலியைப் பொறுத்துக்கிட்டேங்க. கஷ்டப்பட்டுக் கட்டினாலும் ரெண்டு 'சி'தான் உடம்புல ஏறிச்சு. பார்த்தேன். வீல் செயர் குஷன்ல ஒரு 'சி'. நர்ஸ் வேஷத்திலே இருக்கிறது என் கொழுந்தியா. அவள் உடம்புலே ஒரு 'சி' போட்டேன். அதுக்கு நர்ஸ் யூனிஃபார்ம் வசதியா இருக்கு. எல்லாத்தையும் கழட்டிக் குடுத்துடறோமுங்க என்று சொல்லி, மொத்தத்தையும் கட்டுக்கட்டாக எடுத்துவைத்தார்.

ரொம்பவும் சந்தோஷப்பட்ட தலைவர், "நல்ல வேலை செஞ்சிருக்கய்யா. புத்திசாலி, யாருட்டயும் மாட்டிக்காம வந்துட்ட. வெளிய யாரிடமும் சொல்லிடாத...''

"மாட்டேனுங்க, விஷயம் என் பெண்டாட்டிக்கும் இந்தக் கொழுந்தியாளுக்கும்தான் தெரியும். பணத்த பத்திரமா எடுத்து வச்சுக்குங்க. இந்தத் தடவை அள்ளிவிட்டாத்தான் அப்புறம் அள்ளலாம்.''

"சரி, இதக் கொடுத்தே, இப்படிக் கொடுத்தேன்னு யாரிடமும் சொல்லிடாதே.''

"இல்லீங்க.''

"அதுசரி, உனக்கு ஏதாவது வச்சிருக்கியா?''

உங்க புண்ணியத்துல எங்க ஆத்துல தண்ணி வரலைன்னாலும் பாலம் வந்தது. எனக்கும் பலம் வந்தது. தேர்தலுக்கு செலவழிக்க ரெண்டு 'சி'வச்சிருக்கேன்.

"கவலைப்படாதே, எல்லோருக்கும் குடுக்கறாப்ல தேர்தல் செலவுக்கு உனக்கும் ஒரு 'சி' தர்ரேன்.

"கட்சி தர்ரதா இருக்கட்டும். ஆனா நீங்களே வெச்சுக்கங்க. எப்படியும் நாமதான் ஜெயிப்போம். இன்னிக்கே நீங்க கன்டிடேட் முடிவு செய்யப்போறதாச் சொன்னாங்க... அதனால...''

"கவலைப்படாதே, உனக்குத்தான் சீட். யாரும் தப்பா நெனச்சிடப்போறாங்க, அதனால வந்தபடியே முழுசா பண்டேஜெல்லாம் போட்டுக்கோ.

பத்து நிமிஷம் டயம் தர்ரேன். போட்டோக்கிராப்பர்களைக் கூப்பிடறேன். கட்சியின் விசுவாசி, அந்தக் காலத்திலிருந்து உழைச்சிருக்கார். உடல்தான் காயப்பட்டது; உள்ளமில்லைன்னு அறிக்கை விடறேன். பண்டேஜ் போட்டோக்களை போஸ்டர்களாக ஒட்டு, ஜெயிச்சுடலாம்'' என்று சொல்லிவிட்டு, வேட்பாளர் பண்டேஜ் மறுபடியும் கட்டிக்கொள்ள தலைவர் உதவினார். அதற்குள் அவருக்கு செல்ஃபோனில் அழைப்பு வந்தது. அது அவரது சம்சாரம். எனவே, உள்ளறைக்குள் வேகமாக ஒதுங்கி கிசுகிசுத்த குரலில் பேசினார்.

சம்சாரம் சொன்னது, "கவலையே வேண்டாங்க, நாமதான் ஜெயிப்போம். நம்ம ஆட்கள் பணக்காரங்க மட்டுமில்லீங்க, ரொம்பவும் புத்திசாலிங்க. இன்னிக்கு நீங்க கட்சி ஆபீசுக்குப் புறப்பட்டதும் மு. மு. வந்தாருங்க.''

"மு. மு.வா, என்ன கொண்டாந்தான்?''

"என்னத்தன்னு சொல்றதுங்க? அவன் இதுவரைக்கும் நமக்கு எவ்வளவோ செஞ்சிருக்கான். இன்னிக்குக் கூடைநிறைய காய்கறி கொண்டாந்தான்.''

"அட, அல்பமே, அதுவா பெரிசு?''

"ஏங்க, பக்கத்துல யாராவது இருக்காங்களா?''

"யாருமில்லை. உள்ள ரூமுக்கு வந்துட்டன். முணுமுணுக்காதே, சத்தமாப் பேசு.''

"அவன் கொண்டாந்தது ரெண்டு பரங்கிக்காய், ரெண்டு தர்பூசணி, ஒரு சாம்பல் பூசணி, பெரிய சைஸ் கத்தரிக்காய் நாலு, சொரக்காய் ரெண்டு, பீர்க்கங்காய் மூணு.''

"ரொம்ப நல்லாருக்கு; கோயம்பேடு சந்தையிலே கொண்டுபோய் வித்துட்டு வா; ஒரு கோடி ரூபாய் கிடைக்கும்.''

"என்னங்க, அவ்வளவு நக்கலாச் சொல்லீட்டீங்க. நான் என்ன கிறுக்கியா, இல்ல இந்த மு. மு. கிறுக்கனா.''

"ரெண்டு பேரும் கிறுக்கனா கிறுக்கியாங்கிறதுபத்தி உறுதியாச் சொல்லமுடியாது. ஆனா, ரெண்டு பேரும் ஒரே ஊர்க்காங்களாச்சே.''

"பாருங்க, இந்த நக்கல் வேண்டாம். என்னமோ ஒரு கோடீன்னீங்களே, அவன் கொண்டுவந்ததெல்லாம் நிச்சயம் ரெண்டு கோடி பெறும்.''

"நம் ஆட்சியிலே விலைவாசி ஏறிடுச்சுன்னாங்க, சரி. ஆனாலும் அவன் கொண்டுவந்த காய்கறிக்கு அவ்வளவு விலையா!''

"கத்தரிக்காயைச் சரிபாதியாப் பிளந்து உள்ளே வைரங்களா வெச்சிருந்தான். பரங்கிக் காய்க்குள்ளே தங்கச் சங்கிலிங்க, கொத்துக்கொத்தா இருந்துச்சு. பூசணிக்காய்க்குள்ளே சவரண் நாணயங்கள். பீர்க்கங்காய்க்குள்ளே எல்லாம் வெள்ளி கொலுசு, ஸ்பூன்கள். வழியிலே யாரும் பார்த்து மாட்டிக்கிட்டா என்ன செய்யறதுன்னு எல்லாத்தையும் சாமர்த்தியமா காய்கறிக்குள்ளே போட்டுக் கொண்டாந்துட்டான் பாருங்க. அந்த புத்திசாலித்தனத்துக்கே நீங்க அவனுக்கு சீட்டு கொடுக்கணும்; தெரிஞ்சுதா?''

"அட போ புள்ள, அவனைவிட புத்திசாலியா இங்கே ஒருத்தன் அம்புலன்ஸ்ல வந்து, பண்டேஜுக்குள்ள ரூபாயைப் பதுக்கி கொண்டுவந்து கொடுத்துட்டுக் காத்திருக்கான். அவனுக்கு சீட் தாரதா வாக்குக் கொடுத்துட்டேன். இனிமே ஒண்ணும் பண்ண முடியாது. அதுசரி, அவன்தான் மு. மு. இப்போ எம்.எல்.ஏயா இருக்கானே, அதுக்குள்ள ஏன் எம். பி. பதவிக்கு ஆசை?''

"அட, அவன் ஆசைப்படட்டுமே. எம்.எல்.ஏ.யா இருக்கும்போதே இவ்வளவு தர்ரான்னா எம்.பி.யா இருந்தா எவ்வளவு தருவான்னு யோசிச்சுப் பாருங்க. அப்படியும் நம்ம சட்ட சபை ஆயிசு இன்னும் ஒரு வருஷத்துக்குத்தான். மு. மு. வும் தன் பொழப்புக்கு வழி தேட வேண்டாமா?

"இப்போ என்னை என்ன செய்யச் சொல்ற...''

"நீங்க அவனுக்குக் கண்டிப்பா எம்.பி. சீட் தரணும்.''

"இந்த பாரு, இவன் நாலு 'சி' கொடுத்திருக்கான். உன் ஊர்க்காரன் தந்தது எப்படியும் ரெண்டு 'சி' தேறாது. பொழைக்கத் தெரிஞ்ச பொண்டாட்டியா இருக்க மாட்டியா?''

"அதுனாலதாங்க சொல்றேன். கரன்சி நோட்டை நகையாக்கறது எவ்வளவு கஷ்டம்னு உங்களுக்குத் தெரியும். தங்கமும் வைரமுமாகக் கொண்டாந்துட்டானே. அதனால நாலு 'சி'க்கு அது கொஞ்சம் குறைஞ்சாலும் அவனுக்குத்தாங்க நாம உதவணும்.''

"சொன்னாக் கேளு. நான் வார்த்தை தவறாதவன். ஆளை மாத்திட்டா எனக்குக் கெட்ட பேரு வந்துடும்.''

"ஆனா, நான் மு. மு.ட்ட வாங்கிட்டேனே. திருப்பிக் குடுத்தா நல்லாயிருக்குமா? மனசு வரலீங்களே.''

"மனசு வராட்டி என்ன, எலெக்ஷன் வருது. ராஜ்ய சபா எலெக்ஷன் ஆறு மாசத்திலே வருது. அதுல அவனுக்கு ஒரு சீட் குடுத்துட்டா போவுது.''

'என்னங்க, போயும் போயும் ராஜ்ய சபாதான்கிறீங்களே.''

"அடி போடி, உனக்கு புத்தியே இல்லை. நாலு 'சி' கொடுத்தவன் பாடுதான் திண்டாட்டம். நாளைக்கு ஆட்சி அமையாமப்போய், இன்னொரு எலெக்ஷன் வந்தா அவனோட எம். பி. ஆயுசு ஒரு வருஷம்கூட இருக்காது. எங்கே எது நடந்தாலும் இவனுக்கு ராஜ்யசபா பதவி ஆறு வருஷ காலத்துக்கு இருக்கும். அது நிச்சயம்.''


"அடாடா, இப்பத்தான் புரியுது. நம்ம குடும்பத்திலேயே எனக்குப் புடிக்காத சிலருக்கும் ஏன் ராஜ்யசபா சீட் கொடுத்தீங்கன்னு.''

"பின்ன, கட்சி ஏன் நடத்தறேன்னு நினைக்கிறே? எனக்கு பிடிச்சதைச் செய்ய முடியலைன்னா கட்சின்னு ஒன்னு எதுக்கு?''

"சரிங்க; சரிங்க...'' ■

**''அட போ புள்ள,
அவனைவிட புத்திசாலியா இங்கே ஒருத்தன்
அம்புலன்ஸ்ல வந்து, பண்டேஜுக்குள்ள ரூபாயைப் பதுக்கி
கொண்டுவந்து கொடுத்துட்டுக்
காத்திருக்கான்.
அவனுக்கு சீட் தாரதா
வாக்குக் கொடுத்துட்டேன்''**

# சினிமா



## இளைய ரஜினியின் சாகசங்கள்

'சுல்தான் த வாரியர்' படம் அனிமேஷன் படமாக இருக்கலாம். ஆனால், வழக்கமான ரஜினி படத்துக்கு என்னென்ன முஸ்தீபுகள் உண்டோ, அத்தனையும் இதற்கும் உண்டு. இப்படத்தின் இயக்குநரும் தயாரிப்பாளருமான செளந்தர்யா, ரஜினியை சூப்பர் மேனாக மட்டுமல்ல; முப்பது வயதான இளைஞராகவே காட்டுகிறாராம். எல்லாவற்றுக்கும் மேலாக, சிக்ஸ் பேக்ஸ் கொண்ட கட்டுடலுடன் ரஜினியைக் காட்டுகிறது இந்தப் படம்.

இதுபோன்ற அனிமேஷன் படங்களை வெளிநாட்டில் உருவாக்கினால் 400 கோடிக்கும் மேல் செலவாகுமாம். அதையே இங்கே நாற்பது கோடியில் உருவாக்கியிருக்கிறார் செளந்தர்யா. இந்த வேலைக்காகவே பிரத்தியேகமாகப் பயிற்சி கொடுக்கப்பட்ட ஊழியர்களை மாதச் சம்பளத்துக்கு நியமித்து, வேலையைச் செய்துவருவதாகச் சொல்கிறார்கள். இப்படியெல்லாம் செலவைக் கட்டுப்படுத்தியதால்தான் குறைந்த பட்ஜெட்டில் ஓர் அனிமேஷன் படம் சாத்தியமானது என்கிறார்கள்.

ஆறு பாடல்கள், சண்டைகள் கொண்ட இப்படத்தில் ரஜினியின் முத்திரையான 'பஞ்ச்' வசனங்களும் உண்டாம்.

## ஒரு கதை, மூன்று கதாநாயகிகள்...

தமிழ்ப் படங்களில் ஒருவனுக்கு ஒருத்தி என்பதெல்லாம் பழைய காலம். ஒரு படத்துக்கு ஒரு கதாநாயகி போதாது என்பதே புதிய பார்வை. விஷால் நடிக்கும் 'தீராத விளையாட்டு பிள்ளை' படத்தில் மூன்று கதாநாயகிகள் நடிக்கிறார்கள். கவுதம் மேனனின் அசோசியேட் இயக்கும் புதிய படத்திலும் மூன்று கதாநாயகிகளாம். முற்றிலும் புதிய முகங்கள் நடிக்கும் இப்படத்தை செவென் சனல் நாராயணன் தயாரித்துக்கொண்டிருக்கிறார்.

'விண்ணைத் தாண்டி வருவாயா' படத்தைத் தொடர்ந்து சிம்பு நடிக்கப் போகும் புதிய படத்துக்கு மூன்று கதாநாயகிகளைத் தேடிவருகிறாராம் சிம்பு.



மூவருமே புதுமுகங்கள். அதில் ஒருவர் ரஜினியின் மகள் ஐஸ்வர்யா போலவும், இன்னொருவர் நயன்தாரா போலவும் இருக்கவேண்டும் என்ற நிபந்தனையோடு தனது உதவியாளர்கள் மூலம் புதுமுக வேட்டை நடத்திவருகிறாராம். லதா ரஜினியைப் போல ஒருவரும் நடிக்கிறாராம்.

அப்படியானால் அது சொந்தக் கதையாக இருக்குமோ என்று கிசுகிசுக்க ஆரம்பித்திருக்கிறார்கள் கோடம்பாக்கத்தில்.



## இயக்குநரின் சவால்

'சுப்பிரமணியம்' படத்தைத் தயாரித்து இயக்கிய சசிக்குமார் கதாநாயகனாக நடிக்கும் 'நாடோடிகள்' படத்தை சமுத்திரக்கனி இயக்குகிறார். இதில் மூன்று கதாநாயகிகள் அறிமுகம் ஆகிறார்கள். இந்த கதாநாயகிகளைத் தேடிப் பிடித்ததே ஒரு சுவாரஷ்யமான கதை.

மூவரில் ஒருவரான அபிநயாவுக்குக் காது கேட்காது. பேசவும் முடியாது. இவரது புகைப்படத்தை மாடல் கோ கோடினேட்டர் ஒருவர் கொடுத்து அவருக்கு இருக்கும் குறைபாட்டையும் சொல்லியிருக்கிறார். சமுத்திரக்கனி முதலில் இவரைத் தேர்வு செய்யவில்லை. வேறு பெண்ணைத்தான் தேர்வு செய்திருந்தார். திடீரென்று ஒரு நாள் அந்தப் பெண்ணிடமிருந்து வந்த தகவல் இயக்குநரைக் காயப்படுத்தியது.

'உங்களுக்கு ஆங்கிலம் தெரியவில்லை; எனக்குத் தமிழ் தெரியாது. எனவே, நடிப்பைச் சொல்லிக் கொடுப்பதில் உங்களுக்கு சிரமம் வரலாம்; எனக்கும் புரிந்துகொள்வதில் சிக்கல் வரலாம். அதனால் இந்த படத்தில் நான் நடிக்க இயலாது.' இதுதான் அந்தத் தகவல்.

தனக்குக் 'கம்யூனிகேட்' பண்ணத் தெரியாது என்ற அந்தப் பெண்ணின் வார்த்தைகள் தன்னை உசுப்பிவிட்டதாகச் சொல்கிறார் சமுத்திரக்கனி. பிறவிக் குறைபாடுள்ள ஒரு பெண்ணை நடிக்க வைத்துக்காட்டுறேன் பார் என்று மனதுக்குள் சபதம் போட்ட அவர், அபிநயாவை அழைத்து இந்த வாய்ப்பைக் கொடுத்தாராம்.



## நகுல், சுனைனா: காதலில் வீழ்ந்தார்களா?

'காதலில் விழுந்தேன்'; இது நகுல், சுனைனா நடித்த படம். இப்போது இவர்கள் காதலில் விழுந்திருக்கிறார் களா, இல்லையா? இது இப்போது கோலிவுட்டில் சூடான கேள்விகளில் ஒன்று. இப்போது 'மாசலாமணி' என்னும் படத்தில் மீண்டும் இணைந்து நடிக்கும் இருவரும் சமீபத்தில் இந்தப் படம் தொடர்பாக நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டார்கள். எடுத்த எடுப்பிலேயே 'உங்க ரெண்டு பேருக்கும் லவ் வுன்னு சொன்னாங்க ளேன்னு' ஆரம்பித்து வைத்தார் ஒருவர்.

'ஐயோ சார், இப்போதான் போராடி ஓர் இடத்துக்கு வந்திருக்கேன். என்னோட கரியரைத்தான் லவ் பண்ணுறேன். சுனைனா என்னோட குளோஸ் பிரண்ட். மற்றபடி எங்களுக்குள்ளே எந்த கெமிஸ்ட்ரியும் இல்லை' என்றார் நகுல்.

உங்க அக்கா தேவயானிக்கு எப்போ படம் பண்ணப் போறீங்க என்று கேட்டதும், உஷாரானார் நகுல். நல்ல கதையா இருக்கணும் சார். அக்காங்கிறதுக்காக படத்திலே நடிச்சிட முடியுமா? தொழில் வேற, உறவுகள் வேற என்றார்.

பிழைக்கத் தெரிந்த மனிதர்.

## இளையராஜாவின் கோபம்



விகடன் டாக்கிஸின் இரண்டாம் தயாரிப்பான 'வால்மீகி' படத்தின் ஓடியோ வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டார் இசைஞானி இளையராஜா. பொதுவாக நிகழ்ச்சிகள் எதிலும் கலந்துகொள்பவரல்ல இவர்.

மேடையில் பேசிய இயக்குநர் மிஷ்கின், 'புது இயக்குநர்கள் இளையராஜாவுடன் சேர்ந்து பணியாற்ற வேண்டும்' என்று கோரிக்கை விடுத்தார். அவ்வளவுதான், கடும் கோபம் வந்துவிட்டது. "இங்கே மிஷ்கின் என்னுடைய மீடியேட்டர்போலப் பேசினார். எனக்கு யாரும் சிபாரிசு செய்துதான் இசையமைக்கவேண்டிய நிலையில் நான் இல்லை. நான் இதுபோன்ற விழாக்களில் கலந்துகொள்ளாததற்குக் காரணமே, ஒன்றில் மேடையில் மற்றவர்களைப் பாராட்டிக்கொண்டே இருப்பார்கள்; அல்லது, தன்னைத்தானே பாராட்டிக்கொள்வார்கள். 'இசையுடன் கிடடா நாயே' என்று இறைவன் என்னைப் படைத்துவிட்டான். நான் வானம். இடியும் மின்னலும் என்னை ஒன்றும் செய்யாது" என்று கோபத்தோடு கூறிவிட்டுக் கீழே இறங்கிப் போய்விட்டார்.

மேடையில் இருந்தவர்களும், பார்வையாளர்களும் அதிர்ச்சியில் உறைந்தார்கள். மிஷ்கின் முகத்தில் ஈயாடவில்லை.



## பேச்சால் வரும் வினை

எல்லா விழாக்களிலும் தவறாமல் கலந்துகொள்கிறார் பாலுமகேந்திரா. தனது வாழ்த்துரையை சுமார் முப்பது நிமிடப் பேருரையாக இவர் ஆற்ற, மற்றையவர்கள் பேச முடியாத அளவுக்கு நேரம் குறைந்துவிடுகிறது. பலரால் பேச முடியாமலேகூடப் போகிறது. மூத்த இயக்குநர்; யார் போய்ச் சொல்வது?

சென்ற மாதம் நடந்த ஒரு விழாவில் இவர் பேசிய பேச்சு ஒரு சர்ச்சையைக் கிளப்பிவிட்டது. சினிமாவில் 'டூயட்' காட்சிகள் என்ற பெயரில் நடக்கும் கூத்துகளை அறவே தவிர்க்க வேண்டும். ரிவியை 'மியூட்' செய்து விட்டுப் பார்த்தால், இரண்டு குரங்குக் குட்டிகள் ஆடுவதுபோல இருக்கிறது. ஜோடிகள் ஆடுவதற்குப் பதிலாக எதார்த்தமான காட்சிகளையே பயன்படுத்தி டூயட் பாடலை நிரப்பலாமே என்று பேசினார்.

மறுநாள் சில பத்திரிகைகளில் அவர் டூயட்டே வேண்டாம் என்று பேசியதாகச் செய்திகள் திரித்து வெளியிடப்பட்டுவிட்டன. அடுத்த நாள் வேறொரு மேடையில் இதற்கு விளக்கம் தருகிறேன் என்று, அதைப்பற்றியே அரைமணி நேரம் பேசிக்கொண்டிருந்தார். இவரிடம் எப்படி சொல்வது என்று பலரும் யோசித்துக்கொண்டிருக்கிறார்களாம்.

## திருமணத்துக்குப் பின் சங்கீதா

உயிர், பிதாமகன், தனம் போன்ற படங்களில் வித்தியாசமான வேடங்களை ஏற்று நடித்த சங்கீதா, திருமணத்துக்குப் பிறகு தொடர்ந்து நடிக்கும் முடிவில் இருக்கிறார். ஆனால், நான் அவனில்லை 2-ஆம் பாகத்தைத் தவிர வேறு பட வாய்ப்புகள் அவரது கைவசம் இல்லை.

சர்ச்சைக்குரிய, கிளாமர் தூக்கலான கதாபாத்திரங்களில் நடித்துவந்த சந்தியாவுக்குத் திருமணத்துக்குப் பிறகும் அதேபோன்ற வாய்ப்புக்கள்தான் வருகின்றனவாம்.



ஆனால், திருமணத்துக்குப் பிறகு இதுபோன்ற பாத்திரங்களில் நடிக்க சங்கீதாவுக்கு விருப்பமில்லை. வித்தியாசமான வேடங்கள் கிடைத்தால் சம்பளத்தைப்பற்றிக் கவலைப்படாமல் கால்ஷீட் கொடுக்க தயார்' என்றார் சங்கீதா.

இயக்குநர்கள் காதில் விழுகிறதா?

(தொகுப்பு: சென்னைத் திரைவாசல்)

KUMARANS

# Grocers & News Agents

லீலா தயாரிப்பு பொருள்களின்
இறக்குமதியாளர்களும் ஏக விநியோகஸ்தர்களும்

லீலா

## Money Transfer Service

(Global Exchange Ltd, Western Union)

**KUMARANS**
142-144 Hoe Street
Walthamstow
London E17 4QR

Tel: 020-8521 4955, 020-8521 4411
Fax: 020-8521 9482
Email: kumaransltd@aol.com


SOLD
RED CARPET.
Thinking of
Buying or Selling
Real Estate
RED CARPET.
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Real Estate Service
Canada - Toronto வுக்கு
அண்மித்த பகுதியில்......
வீடு, வியாபாரம் வாங்க, விற்க.....
Karu Kandiah FRI. CRES,
Real Estate Broker / President
* 20 Years Real Estate Experience
* Multi Award Winner
Dir: 416-284-5698
Bus: 416-284-5555
880 Ellesmere Road,Suite 204, Toronto, ON., M1P 2W6


Western Jewellers
230 Upper Tooting Road
London SW17 7EW
Telephone : 020 8767 3445
SILK
EMBORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel : 020 8672 1900
Western Jewellers
& Textiles
5 Plaza Parade 29-33 Ealing Road
Wembley Middlesex HA0 4YA
Tel : 020 8903 0909